

# சிவ சக்தி
# 2002

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்

With Best Compliments

from

# LANCOR RUBBER INDUSTRIES

Kuruduwatta
Rilavila
Kandana

Tel: 230158, 236885
Fax: 232402
E-mail: pdnsnv17@sltnet.lk
http:/www/lancorrubber.com


சிவசக்தி 2002

## றோயல் கல்லூரி
## இந்து மாணவர் மன்றம்
பெருமையுடன் வழங்கும்

# கலைமகள் விழா 2002

காலம்: ஞாயிறு 13.10.2002

நேரம்: மாலை 3.30 மணி

இடம்: நவரங்கஹல மண்டபம்

பிரதம விருந்தினர்: இரா. வை. கனகரத்தினம்

கௌரவ விருந்தினர்: திரு. H. L. B. கோமஸ்

* * * * *

# KALAIMAGAL VIZHA 2002

Date: Sunday 13.10.2002

Time: 3.30 p.m.

Venue: Navarangahala Hall

Chief Guest: Mr. R. V. Kanagaratnam

Guest of Honour: Mr. H. L. B. Gomes

Presented by

**Royal College**
**Hindu Students' Union**






வெள்ளைப் பூவில் உறைபவளே!
வெள்ளையுள்ளக் கோமகளே!
வல்லமைகள் தந்தவளே!
கல்வி, கலைகள் அருள்பவளே!

சொல்லில் திறத்தை தருபவளே!
தெள்ளு தமிழாய் ஆனவளே!
நல்ல நெஞ்சங் கொண்டார்க்கு,
அல்லும் பகலும் அருள்பவளே!

சின்னஞ் சிறுவர் நாம் செய்த
நன்னூலிதனை எடுத்துந்தன்
வண்ணப் பாத மலரினுக்கே,
எண்ணிச் **'சமர்ப்பணமாய்'** வைப்போம்!



# விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந் தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி இடைபடுத்தித் தறுகட் பாசக்
கள்ள வினைப் பசு போர்த்தக் கவளமிடக் களுந்துண்டு கருணையென்னும்
வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை நினைத்து வருவினைகள் தீர்ப்பாம்.

பரஞ்சோதி முனிவர்
*(திருவிளையாடற் புராணம்)*

With the Best Compliments

of

*Wellawatta*

# Abbarna

*Textile*

Specialist in Wedding Sarees, Blouse Materials
& Shalwar Kameez

*
* *
* * *
*
*
*
*

7D, Sinsapa Road,
(Orchard Shopping Complex)
Colombo 6
Tel : 594698



சிவசக்தி 2002



# பராசக்தியே........!

பவித்திரத் தாயுமாகி,

பாரெல்லாம் பசுமை காக்க,

கசிந்திடும் மழையுமாகி,

கானமாய்க் கலைகளாகி,

உதித்திடும் கதிருமாகி,

உலவும் வெண் திங்களாகி,

சிரித்திடும் தாயே! எங்கள்

சிரங்கள் நின் அடியின் மீதே!


சிவசக்தி 2002

With the Best Compliments of

# AMBIGAA CENTAR

Dealer in Textile and Readymade Garments

112 A/4 Keyzer Street, Colombo 11
Sri Lanka
Tel : 348647, 338801


சிவசக்தி 2002

உ
சிவமயம்

# திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும்; செய் கருமம் கைக்கூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்!
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

-கபிலதேவர்-

## நவராத்திரி தோத்திரம்

### துர்க்கை

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமிலா
இனந் தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பரென்பவர்க்கே
கனந் தரும் பூங்குழலால் அபிராமி கடைக்கண்களே.

### இலக்குமி

சித்தம் தெளிந்திடும், செய்வினையாவும் திருத்தமுறும்
நித்தம் மறிந்தெழு செல்வமும் தங்கி நிலைபெறும் நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும், இம்மூதுலகில்
பக்தர்க்கருளும் திருமகள் பாதம் பணிபவர்க்கே.

### சரஸ்வதி

வாணிக் கலைத்தெய்வம் மணிவாக்கு உதவிடுவாள்
ஆணி முத்தைப்போல் அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

### திருப்புராணம்

வான் முகில் வழாது பெய்க மலிவலஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவில்லா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# திருச்சிற்றம்பலம்

*With Best Compliments*

*from*

# N. V. PREM

**Wellawatte**

## SCIENCE & TECHNOLOGY

***G.C.E. (O/L), Gr 10, Gr 9, Gr 8, Gr 7, Gr 6***

**"Education for the new Generation"**


சிவசக்தி 2002

# School Of Our Fathers

*(Words and Music by the Late Mr H. L. Reed, Principal 1921-32)*

Thy spirit first to life awoke,
In eighteen hundred and thirty-five
Beneath the sway of Marsh and Boake,
Thenceforth did Lanka's learning thrive.

*Refrain*
*School where our fathers learnt the way before us,*
*Learnt of books and learnt of men through thee we'll do the same,*
*True to out watchword "Disce aut Discede"*
*We will learn of books and men and learn to play the game.*

Within thy shade our fathers trod
The path that leads to man's estate
They have repaid the debt they owed
They kept thy fame inviolate.

And we their loyal sons now bear
The torch, with hearts as sound as oak
Our lusty throats now raise a cheer
For Hartley, Harward, Marsh and Boake.


சிவசக்தி 2002

With Best Compliments

from


# VANIKAA MEDICALS

*Importers & Distributors of Pharmaceuticals*

★
★
★★★★★
★
★★★
★
★★
★
★

85, Hospital Road, Jaffna
Tel: 021-2445


சிவசக்தி 2002



# அட்டைகோர் அறிமுகம்

கதிரவனை மாலையிலே
இருளும் மூடும்! - இருள்
களைந்தெறிந்து கதிரவனும்
உதயமாகும்!

ஜோதியாய் நின்றவன் தன்
சக்தியோடும்
பாதியாய் நின்ற கோலம்
பக்தியூட்டும்!

அன்னையொடு அப்பனவன்
அருளும் கூட,
ஆறாத தீவினைகள்
அழிந்து மாறும்!

சீர் பெற்ற இந்துமதம்
வானளாவ
பேர் பெற்று இறைபுகழின்
கானம்பாடும்!


சிவசக்தி 2002

# றோயல் கல்லூரி
# இந்து மாணவர் மன்றம்
## செயற்குழு 2002

*தலைவர்*

திரு. லக்ஸ்மன் கோமஸ்

*பொறுப்பாசிரியர்*

*திருமதி பு. நீலலோஜனன்*

*உப பொறுப்பாசிரியர்கள்*

திருமதி லை. தவகுமார்
திருமதி சு. கஜந்தன்
திரு. சூ. பாலேந்திரன்
திரு. ச. சிவகுமார்
திரு. வே. மதிவண்ணன்

*மன்றத் தலைவர்*

ச. அரவிந்த்

*செயலாளர்*

ஞா. சரோஜ் பிரகாஷ்

*பொருளாளர்*

யோ. திருச்சொந்தூரன்

*உப பொருளாளர்கள்*

ச. சஞ்ஜெய்
ம. பிரணவன்

*பிரதம இதழாசிரியர்*

தே. ஜெயப்பிரகாஷ்

*துணை இதழாசிரியர்கள்*

வி. விமலாதித்தன்
பி. சுந்தரகுமார்
ஸ். அருணன்

*செயற்குழு உறுப்பினர்கள்*

க. சிவாஸ்கந்தராஜா
மு. ப. மு. அப்லல்
சு. நசாமட்
ர. முரளி ஜோன்
வை. தி. தினேஸ்
அ. லோகேந்திரன்
அ. சிந்துஜன்
பு. டெனிஸ் ஹோர்மன்
நீ. நிஷாந்தனன்
மு. செ. மு. ஜுமலி
இ. சத்தியானந்தன்
க. அரவிந்தன்


சிவசக்தி 2002

*With the Best Compliments*

*of*

# A R B
## SQUARE

Audio, Video Parlour & Communication

358, Galle Road, Colombo 6
Tel: 505537, 553540, 075-557509, 075-557510
Fax: 505538

# சிவசக்தி 2002

# SIVASAKTHY

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து


**இதழாசிரியர் குழு** — **Editorial Boards**

*பிரதம இதழாசிரியர்* — *Cheif editor*
தே. ஜெயப்பிரகாஷ் — T. Jeyapragash

*துணை இதழாசிரியர்கள்* — *Sub Editors*
வி. விமலாதித்தன் — V. Vimalathithan
பி. சுந்தரகுமார் — P. Suntharakumar
ஸ். அருணன் — S. Arunan

*வெளியீடு* — *Published by*
றோயல் கல்லூரி — Royal College
இந்து மாணவர் மன்றம் — Hindu Students' Union


வெல்லுமெங்கள் உரக்கரம்!
வேகும் எதிரி பேய்க்குணம்!
கல்லும் நீரும் உள்ள மட்டும்!
கதையைச் சொல்லும் சரித்திரம்!

*With the Best Compliments*

*of*

❖
❖
❖
❖
❖
❖

# Cadillac Garments Ltd.

❖
❖
❖
❖
❖

111/2, Station Road
Angulana
Moratuwa
Sri Lanka

(Manufacturers and Exporters of Garments of all descriptions)

# இதழ்ட்ட இதயங்களின் மகிழ்வுற்ற குரல்கள்.........!

பித்தனாய் இருந்த எம்மை இன்று விந்தைகள் புரியும் வித்தகர்களாய் மாற்றி, கல்வி என்னும் அணையா தீபத்தை எம்முள் ஏற்றி, எதிர்காலத்தை வளமான முறையில் எதிர்நோக்குவதற்கான வல்லமை தந்தவளே! தாயே! உனக்காய் நாமெடுக்கும் வண்ணக் கலைமகள் விழாவினை காணவந்தவரே! கண்டவரே, வந்தனங்கள் பல கோடி.........

எமது மரபுகளையும், பண்பாடுகளையும் மீறாது நல்லவர் தம் பாதந்தொட்டு நன்மக்களின் ஆசிபெற்று, நன்னூல் 'சிவசக்தி 2002' யினை வாழ்த்துக்களால், வார்த்தைகளால், வண்ணக்கவிதைகளால், இன்னும் பலவற்றால் இனிப்புற வடிவமைத்தோம்! இளைப்பாறும் நேரமிது.

ஒரு குழந்தையை பெற்றெடுப்பதின் இன்னல்களையும், இன்பங்களையும் இச்சிவசக்தியின் செவ்விதழ்களை சேர்ப்பதன் மூலம் கண்டோம் என்றால் அது மிகையாகாது. நாங்கள் போராடியது தென்றலோடல்ல! புயலோடும் பூகம்பங்களோடுமே! எங்கள் பாதையில் வெறுமனே கற்களும் முட்களும் வரவில்லை. கடல்கள் வந்தன. இருப்பினும் நாங்களும் கலங்கிடாது கடந்து வந்தோம்.

எத்தனையோ ஏற்றங்களும் இறக்கங்களும் மாற்றங்களும் ஏமாற்றங்களும் ஏற்பட்டன! எவற்றாலும் எங்கள் பணி நிலை மாறவில்லை. கூடவே நிறம் மாறவுமில்லை.

சித்தத்தில் உறுதியுடன் சின்னவர் நாம் படைத்த சிவசக்தியில் ஏதும் சிறு பிழையிருக்கும்! இருக்கட்டும்! பெரியோர் பொறுத்தருள்வீர்.

இறுதியாக இம்மலரை சமர்ப்பிக்க உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது நன்றிகள். அத்துடன் அல்லும் பகலும் எமக்கும் எமது கல்லூரிக்குமாய் அயராது உழைத்து இம்மலரினை சிறப்புற வடிவமைத்து எமக்கு வெற்றியை ஈட்டித் தந்த அரசன் அச்சகத்தாருக்கும் எமது நன்றி கலந்த வணக்கங்கள்.

"வாழும் போது சைவனாக வாழவேண்டும்
வீழ்ந்தபடின் சைவம் வளர்த்து வீழவேண்டும்"

*'மேன்மை கொள் சைவநீதி விளங்குக அகிலமெங்கும்'*

*இதழாசிரியர்*
தேவராஜ் ஜெயப்பிரகாஷ்

*துணை இதழாசிரியர்கள்*
விமலநாதன் விமலாதித்தன்
பிரேமகுமார் சுந்தரகுமார்
ஸ்கந்தன் அருணன்

சிவசக்தி 2002

With the Best Compliments

of

# Muthu

A

WELL-WISHER

## பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி.............

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

இலங்கையின் உயர் கல்லூரிகளுள் முதன்மை மிக்கதாய், இலங்கை மக்களின் இனஉறவுகளையும் தேசிய ஐக்கியத்தையும் கட்டிக் காப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும் முதன்மை உடைதாய் விளங்கும் கொழும்பு இராசதானிக் கல்லூரியான றோயல் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தின் 'சிவசக்தி 2002' சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பண்பாடு என்பதற்கு பகிர்ந்து கொள்ளல், வளர்த்துச் செல்லல் எனப்பொருள் கொள்வார். அது சமயம், தத்துவம், கலை முதலான கூறுகளால் கட்டியெழுப்பப்படுவது, சமயத்தின் கூறுகளாக வழிபாடு, அன்பு, பக்தி, ஒழுக்கம், ஐக்கியம் முதலான விழுமியங்கள் அடங்கும். பாடசாலைகளும், கல்லூரிகளும் இப்பண்பாட்டு விழுமியங்களை உள்ளடக்கிய கொள்கலன்கள். அவை அங்கே சிறப்புற வளர்க்கப்படுகின்றன. இதனால் பரஸ்பர உறவு, விட்டுக்கொடுத்தல், ஐக்கியம் அதலான விழுமியங்கள் வளர்க்கப்படுகின்றன. இவையே நாட்டின் இனங்களுக்கு இடையிலான இன உறவையும், ஐக்கியத்தையும், தேசியத்தையும் வளர்த்தெடுப்பதற்கு உதவுகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக தேசிய மட்டத்தில் கூறக்கூடிய ஒரு கல்லூரி றோயல் கல்லூரி என்றே கூறுதல் வேண்டும்.

அவ்வகையில் இந்து மாணவர் மன்றமும் அது நடத்தும் கலைமகள் விழாவும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. அவர்களது இத்தகைய பணியும், அதனூடான ஐக்கியமும் தேசியமும் தொடர்ச்சியாகப் பேணப்பட, கலைமகள் திருவருள்கிட்ட வேண்டிக்கொள்கின்றேன்.

பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்
*தமிழ்த்துறை (இந்துப் பண்பாடு)*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

சிவசக்தி 2002

With the Best Compliments

of

# K. K. Kandiahpillai & Son

318, (124) Hospital Road
Jaffna

# Principal's Message

*I have great pleasure in contributing this message for the souvenir "**Sivashakthy 2002**", which is to be published, on the occasion of the annual celebrations "**Kalaimagal Vizha 2002**" organized by the Royal College Hindu Students' Union.*

*This annual event gives many opportunities to the students of Royal College since it helps develop their religious knowledge and brings out their stage talents.*

*It is indeed a great achievement to organize inter-grade and inter-school competitions to encourage students' involvement in various religious activities and to felicitate the winners on their success.*

*Hence, I take this opportunity to thank the teacher- in-charge, Mrs. P. Neelaloganan, the Asst. teachers-in-charge and all the members of the committee for all their hard work to make this event a success.*

**H. L. B. Gomes**
***Principal***
***Royal College***

With Best Compliments

*from*

# VIJAI TAILORS

Reputed Gents Tailoring

**SPECIALIST IN**

*Wedding Suits, Trousers and Shirts*
*(Other Orders Under Taken)*

33, 1st Floor, Bambalapitiya Market
Galle Road, Bambalapitiya
Colombo 04
Tel: 504479


சிவசக்தி 2002

# Message from the Vice Principal

It is glad to hear that the Hindu Students' Union of Royal College is celebrating their annual "Kalaimagal Vizha 2002" this year too. I contribute this message with great pleasure to their souvenir "Sivashakthy 2002" published in connection with the above event.

The prime objective of the Hindu Students' Union, through celebrating this annual event is to worship the goddess for learning and fine arts. I do hope it is a mode of paying homage to the Gods they respect and believe. Organizing a function of this nature paves the path to the younger ones to get these values inculcated in their minds.

Finally, I take this opportunity to congratulate the organizers and Mrs. Neelaloganan, teacher-in-charge, for having organized this event and to wish them all success in their future endeavours.

**S. P. Senaratne**
*Vice Principal*
*Royal College*

சிவசக்தி 2002

With Best Compliments from

# COLONIAL HARDWARE STORES

*Importers, Distributors & General Hardware Merchants*
427, Old Moor Street, Colombo 12, Sri Lanka
Tel : 431950, 435414, 347981-83-89
Fax : 321144, 334090
E-Mail : colonial@slt.lk

*Group of Companies:*

## Colonial Engineering (Pvt) Ltd

138, Sri Sumanatissa Mawatha, Colombo 12
Tel : 334197, 472639-40-41, 074-710201, 074-610545, 074-610302
Fax : 074 610260

⁎ ⁎ ⁎ ⁎ ⁎

## Colonial Marketing Services

461, Old Moor Street, Colombo 12
Tel : 330810, 338011 Fax : 330810

⁎ ⁎ ⁎ ⁎ ⁎

## Anoma Hardware Stores

369, Old Moor Street, Colombo 12
Tel : 470430, 471002 Fax : 471003

⁎ ⁎ ⁎ ⁎ ⁎

## Colonial Electrical Equipments

*Specialist in Electrical Engineering*
545/B, Sri Sangaraja Mawatha, Colombo 10
Tel : 384593, 384594, 384595

⁎ ⁎ ⁎ ⁎ ⁎

# Message from Assistant Principal

I have great pleasure in contributing this message to the 'Sivasakthy 2002' souvenir which is being published by the Royal College Hindu Students' Union.

In the era when religious beliefs are fading away, it is heart-warming to see the students promote and revive the religious beliefs. When you believe in religion, you believe in God. And when you believe in God you are afraid to do wrong deeds. So this brings out the good in people, thus making the world a better place to live in.

I take this opportunity to wish the Hindu Students' Union all success in all their endeavours and congratulate the teachers-in-charge for their invaluable assistance rendered to the students.

**R. L. Senanayake**
*Asst. Principal, Co-curricular*



கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழாவிற்கு

**ஒலி ஒளி**

வழங்கி

விறுவிறுப்பூட்டுவதற்கு அனுசரனை புரிந்த

**தரம் 1H**

*ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,*

*மாணவர்களுக்கும்*

*எம் நன்றிகள்*

- செயற்குழு 2002 -


*சிவசக்தி* **2002**

# உதவி அதிபரின் ஆசிச்செய்தி

*"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

றோயல் கல்லூரியின் மற்றொரு சக்தியாகிய இந்து மாணவர் மன்றத்தின் சிவசக்தியினூடாக உங்களோடு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வேத்தியர்கள் ஒன்று கூடி கலைவாணிக்கு முத்தமிழால் முடிசூடி கல்வித் தெய்வத்திற்கு விழாவெடுத்து, அவ்விழாவினூடாக எம் மாணவர்கள் கலை பல பயின்று, அக்கலைகளையே போட்டிகளாக்கி, மேடையேற்றி மாணவர்திறனை மெருகேற்றி வருகின்ற இந்து மாணவர் மன்றத்தின் பணி போற்றவும், பாராட்டவும் தக்கது.

றோயல் கல்லூரி பல்வேறுபட்ட சமய, கலாச்சாரம், பராம்பரியங்களை பேணுகின்ற ஒரு கலைக்கூடம். அதிலே "அன்பே சிவம்" என்ற முதுமொழிக்கிணங்க அன்புடன் நாம் பழகிக்கொள்ள இந்து மாணவர் மன்றம் பல்வேறு வழிகளில் மாணவர்களை பயிற்றுவித்து வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே, அவ்வப்போது சமயப் பெரியார்களினை வரவழைத்து மாணவர்களிற்கு அருளாசி வழங்கியும், ஒரு தொகுதி இந்து சமய நூல்களை நூல்நிலையத்திற்கு வழங்கியும் மாணவருக்கு தேவையான சமய அறிவை வழங்க வேண்டிய தேவைகளை நிறைவேற்றி வருவதையும் நாம் அறிவோம்.

மாணவர்களை ஒழுக்க சீலர்களாகவும், சமுதாயத்திற்கு ஏற்புடைய பிரஜைகளாகவும் உருவாக்குவதற்காக உழைக்கின்ற பல்வேறு மன்றங்களில் இந்து மாணவர் மன்றம் மிகச்சிறப்பாக சேவையாற்றி வருகின்றது. இப்பணியை சிறப்புற செய்கின்ற அதன் பொறுப்பாசிரியை திருமதி புஷ்பா நீலலோஜனன் அவர்களையும் அம்மன்றத்தின் வளர்ச்சியில் உறுதுணையாக நிற்கின்ற ஏனைய உதவிப் பொறுப்பாசிரியர்களையும், மற்றும் அதன் நிர்வாகத்தினரையும் பாராட்டி இந்து மாணவர் மன்றம் நடாத்துகின்ற கலைமகள் விழா சிறப்பாக நடைபெற எனது நல்லாசிகள்.


**சி. இரத்தினசபாபதி**
*உதவி அதிபர்*
*றோயல் கல்லூரி*
*கொழும்பு 7*


சிவசக்தி 2002



கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழாவிற்கு

# சிற்றுண்டிகள்

வழங்குவதற்கு அனுசரணை புரிந்த

## தரம் 11 J

*ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும்*

*எம் நன்றிகள்*

- செயற்குழு 2002 -


சிவசக்தி 2002

# தமிழ்ப் பிரிவு தலைவரின் உள்ளத்திலிருந்து................

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தினர் கலை மகள் விழாவினை வருடாவருடம் போல் இம்முறையும் சிறப்பாக நடாத்துகின்றனர். இவ்விழாக்காலத்தில் வெளியிடப்படும் "சிவசக்தி 2002" மாணவர் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதிற் பெருமையடைகின்றேன்.

தனக்கென வாழாமல் பிறர்க்குரியவர்களையும், அன்புடையவர்களையும் உருவாக்கும் நன்முயற்சியில் ஈடுபட்டுள்ள இம்மன்றத்தின் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டவை. பாடசாலை மாணவர்கட்கு இடையேயும், கொழும்பு மாவட்டப் பாடசாலை மாணவர்கட்கு இடையேயும் போட்டிகளை நடாத்தி, தரமான மாணவர்களை இனங்கண்டு பாராட்டிப் பரிசளித்து கௌரவிக்கின்ற அதே வேளை, மலைமகள், திருமகள், கலைமகளுக்கு விழாவெடுக்கும் நவராத்திரி விழாவினையும் சிறப்பாக நடாத்துகின்றனர்.

இவ்வரிய முயற்சிகளில் தளர்வின்றி ஈடுபடும் ஆசிரியை திருமதி நீலலோஜனன் அவர்களை மனதாரப் பாராட்டும் அதேவேளை, ஏனைய உதவிப் பொறுப்பாசிரியர்களுக்கும் 2002ம் ஆண்டுக்குரிய இந்து மாணவர் மன்ற நிர்வாகக் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்கள். உங்கள் செயற்பாடுகள் யாவும் வெற்றி பெற இறையாசியை வேணடுகின்றேன்.

நன்றி

மா. கணபதிப்பிள்ளை
*தமிழ்ப்பிரிவு தலைவர்*
*றோயல் கல்லூரி*

கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழாவிற்கு

# இந்து மாணவர் மன்றத்திற்கு

பேருதவி புரிந்த

# தரம் 2J தரம் 2H

*ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,*

*மாணவர்களுக்கும்*

*எம் நன்றிகள்*

- செயற்குழு 2002 -

## பொறுப்பாசிரியையின் ஆசிச் செய்தி............

கலைத் தாயின் பெயரால் இக்கல்விக்கூடத்தில் ஆண்டுதோறும் நடாத்தப்படும் கலைமகள் விழாவில் சிவமணம் தித்திக்கும் சிவசக்தியூடாக இம்முறையும் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கலைமகள், அலைமகள், மலைமகள் ஆகிய மூவரதும் அருள் வேண்டி அவர்களை பூஜிக்கும் இந்நவராத்திரி பெரியவர்களைவிட மாணவர்களுக்கே முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். இதனாலேயே ஒவ்வொரு ஆண்டும் ஒன்பது நாளும் சக்தி வேண்டி முப்பெரும் தேவியரை வழிபட்டு ஈற்றில் அவர்களின் பொருட்டு இவ்விழா காண்கின்றோம்.

மாணவச் செல்வங்களின் அயராத உழைப்பாலும், பொன்மனம் படைத்த பெற்றோரின் உதவியாலும், அயராதுழைக்கும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பாலும் இவ்விழா இன்று அரங்கேறுகின்றது.

எமது செயற்பாடுகளுக்கு சொல்லூக்கமும் ஆக்கமும் வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் என் உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நெல்வயல் மத்தியில் உள்ள களைகள் போல் நிறைகள் மத்தியில் உள்ள குறைகளைப் பொறுத்து குறைவிடுத்து நிறை காண்பீர்கள் என நம்பி சைவம் வளர்த்து சாமம் பெறுவோமாக.

"வெள்ளை நிற பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"

திருமதி புஷ்பா நீலலோஜனன்
*பொறுப்பாசிரியை*
*இந்து மாணவர் மன்றம்*
*றோயல் கல்லூரி*

சிவசக்தி 2002

கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழாவிற்கு

## ஒளிப்பதிவு மற்றும் புகைபடங்களுக்கு

அனுசரனை புரிந்த

## தரம் 3H

ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,

*மாணவர்களுக்கும்*

*எம் நன்றிகள்*

- செயற்குழு 2002 -


சிவசக்தி 2002

## Message from the Buddhist Brotherhood

"Kalaimagal Vizha 2002" is a ceremony that is staged in the Navarangahala Hall with much practice and great effort.

Things we learn and practice are retained in our memory for a long time. Even after completing school life we can recall the memories of the things we did as school children. According to Buddhism what we do and say become "Karma".

Lord Buddha stated that anything done with the control of the mind would remain in ones deep conscience. Further he said that the results of our actions which are called "Karma" would decide our fate. If you study hard you will be successful at the examination. Likewise ones own deeds will bring good or bad results in their life.

The disasters like floods, cyclones, earthquakes etc. are considered to be natural phenomena and cannot be categorized as "Karma". However your own thoughts and actions would lead to corresponding consequences. Accordingly Lord Buddha such consequences are five fold. One of this is "Karma". He further stated that in order to lead a good life free of pain and sorrow one should observe five precepts.

In conclusion let me wish you peace and happiness for engaging in such good deeds while continuing your education at Royal College, your alma mater.

**Mr. Sarath Munasinghe de Silva**
*Teacher-in-charge*
*Buddhist Brotherhood*

சிவசக்தி 2002

கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழாவிற்கு

# தனியார் விசேட பாதுகாப்பு பிரிவிற்கு

அனுசரணை புரிந்த

## தரம் 3J

*ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,*

*மாணவர்களுக்கும்*

*எம் நன்றிகள்*

- செயற்குழு 2002 -

## Message from the Royal College Islamic Society

It is with great pleasure that I contribute this message on behalf of the Royal College Islamic Society to the "Sivasakthy 2002"

Always Royal College encourages all religious activities. Likewise our brother society of "Hindu Students' Union" is celebrating the "Kalaimagal Vizha" today. I am participating with great pleasure in this function. I thank Mrs. P. Neelaloganan, Mr. Balaendran, Mrs. L. Thavakumar and other teachers for encouraging the students to organize this function successfully. Also I wish to thank the Student chairman and other members for their efforts.

I wish them the very best and hope the event will be an outstanding success.

**Mrs. Yasmin Munas**
*Senior Vice President*
*Islamic Society*



சிவசக்தி 2002

கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழா காணும்

# இந்து மாணவர் மன்றத்திற்கு

பேருதவி புரிந்த

## தரம் 4J தரம் 4H

ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,

மாணவர்களுக்கும்

எம் நன்றிகள்

- செயற்குழு 2002 -

# Message from the Royal College Students' Christian Movement

It is with great pleasure that I convey a message to the annual "Kalaimagal Vizha 2002" magazine.

Religious festivals like this continue to keep up the religion and racial harmony among every student of Royal College and it must be so even in the years to come.

I congratulate and also thank the Students and Teachers of the Hindu Students' Union of Royal College for their untiring efforts to make this event a success.

**Anton De Silva**
*Teacher-in-charge*
*Students' Christian Movement*



கலைத் தாய்க்கு மகுடம் சூட்டி

கொண்டாடும்

கலைமகள் விழா காணும்

## இந்து மாணவர் மன்றத்திற்கு

பேருதவி புரிந்த

## தரம் 5J தரம் 5H

ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்,

மாணவர்களுக்கும்

எம் நன்றிகள்

- செயற்குழு 2002 -



சிவசக்தி 2002

## மன்றத் தலைவரின் மனதிலிருந்து .............

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி அவன் பணியென அவன் நினைவை மாணவ உள்ளங்களில் ஊற்றெழச் செய்ய முயன்று வரும் எமது மன்றத்தின் இன்னுமொரு முயற்சியாக வளர்ந்துள்ள இக் “கலைமகள் விழா 2002” ல் மலர்ந்து மணம் பரப்பும் இச்சிவசக்தி 2002 மலர் உங்கள் கைகளில் தவழுகின்ற இவ்வேளையில் இந்து மாணவ மன்றத் தலைவர் என்ற முறையில் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி எய்துகிறேன்.

இறை உணர்வையும், செயலாற்றும் திறனையும் மாணவர் மத்தியிலே வளர்த்து, கலைகளெல்லாம் அள்ளித் தந்து, கலைத் தாயாய் நிற்கின்றாளே வாணி, அவளுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே நாம் இக்கலைமகள் விழாவினை கொண்டாடுகின்றோம்.

1955ம் ஆண்டு முதல் சமயப்பணியை முன்னெடுத்து வரும் எம் மன்றமானது 47வது வருடத்திலும் வீறுநடை போடுவதற்கு சகல விதத்திலும் ஊன்று கோல் கொடுத்து எம்மை உயர்த்திய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

“இரும்பெனத் தசையும் உருக்கென நரம்பும்
பொருந்திட உடலிற் பேணுவோம் நலமே
விருப்பொரு அன்பு பண்பெனும் இரண்டும்
உருப்பெற உள்ளத்தில் உயர்ந்திடுவோம்
ஒன்றே தெய்வம் ஒன்றென கொள்வோம்
உணர்த்துவோம் உலகிற்கு ஒரு குலம் என்றே
அன்பே சமயம் அதுவே சமயம்
ஆனந்தமிங்கினி வேறில்லையென்போம்”

எனக் கூறி கலைவாணியின் அருள் வேண்டி விடைபெறுகிறேன்.


“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

ச. அரவிந்த்
*மன்றத் தலைவர்*
*இந்து மாணவர் மன்றம்*

சிவசக்தி 2002

*With Best Compliments*

*from*




**50, GALLE ROAD,**
**DEHIWALA,**
**TEL : 734011**


சிவசக்தி 2002

# செயலாளரின் சிந்தனையிலிருந்து .........................

"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
மேய உணர்விக்கு மென்னம்மைக்கு"

முடி சூட்டும் முகமாக நாற்பத்தி ஏழாவது வருடமாக மரபுகளும் பண்பாடுகளும் குன்றாது நடாத்தப்படும் "கலைமகள் விழா 2002" ஐப் பிரசவித்து உங்கள் கரங்களில் தவழும் "சிவசக்தி 2002" யினூடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. இந்து மதமும், தமிழும் தழைத்தோங்கச் செய்யும் பணியிற் செயலாற்றி வரும் வேத்தியர் நாம், அதற்கோர் ஆதாரமாய் இன்று உங்கள் முன் இந்தக் கலைமகள் விழாவினை மேடையேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இவ்விழாவினை சிறப்பாக நடத்த எமக்கு வழிகாட்டிய எமது கல்லூரி அதிபர், உபஅதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், போட்டிகளில் பங்குபற்றி இவ்விழாவை சிறப்பித்த ஏனைய பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

எம் சமய பணி தொடரவேண்டும். அதற்கு தங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டி அனைவருக்கும் கலைவாணியின் அருள் வேண்டி விடைபெறுகின்றேன்.

"அன்பே சிவம்"

ஞா. சரோஜ் பிரகாஷ்
*செயலாளர்*

With Best Compliments

from

○○○○
○○○
○

S. DHARSHAN

**Grade 5J**

With the Best Compliments of

Little ASIA

**EMPORIUM**

Specialist in Wedding Sarees, Salwar Kameez,
Blouse Materials & Readymade Garments

317, 317A, Galle Road, Wellawatte
Colombo 6.
Tel: 504470
E-mail: littleasia@eureka.lk

# Royal College
# Hindu Students' Union
## Office Bearers 2002

*President*
**Mr. H. L. B. Gomes**

*Senior Vice President*
**Mrs. P. Neelaloganan**

*Vice Presidents*

**Mrs. L. Thavakumar**
**Mrs. S. Gajanthan**
**Mr. S. Balaendran**
**Mr. S. Sivakumar**
**Mr. S. Mathivannan**

*Student Chairman*
**S. Aravindh**

*Secretary*
**G. Saroj Pragash**

*Treasurer*
**Y. Thiruchenduran**

*Editor*
**T. Jeyapragash**

*Asst. Treasurers*
**S. Sanjey**
**M. Branavan**

*Sub-Editors*
***V. Vimalathithan***
***P. Suntharakumar***
***S. Arunan***

*Committee Members*

| | | |
|---|---|---|
| **K. Sivaskantharaja** | **V. T. Dinesh** | **N. Nishanthanan** |
| **M. F. M. Aflal** | **V. Logendran** | **M. S. M. Jumly** |
| **S. Nazamat** | **A. Sindujan** | **R. Sathyananthan** |
| **R. Murali John** | **P. Dennis Herman** | **K. Aravinthan** |

*With Best Compliments*

*from*

**E.B.C.**

# Eswara Bagawaan & Company

***Importers, Exporters, General Merchants - Transporters & Commission Agents***

*Bankers*


- People's Bank
- Commercial Bank Ltd.
- Hatton National Bank Ltd.

102C, Dam Street, Colombo 12
Tel: 01-542745
Fax: 074-615519



சிவசக்தி 2002

# Office Bearers



*Seated (L-R)* Mrs. L. Thavakumar (*Asst. Teacher-in-charge*), Mrs. S. Gajanthan (*Asst. Teacher-in-charge*), Mrs. P. Neelaloganan (*Teacher-in-charge*), T. Jeyapragash (*Editor*), S. Aravindh (*Student Chairman*), Mr. H. L. B. Gomes (*Principal*), Mr. S. P. Senaratne (*Vice-Principal*), G. Saroj Pragash (*Secretary*), Mr. V. Balaendran (*Asst. Teacher-in-charge*), Mr. S. Sivakumar (*Asst. Teacher-in-charge*), Mr. V. Mathivannan (*Asst. Teacher-in-charge*).

*Standing (L-R)* V. Vimalathithan, K. Sivaskantharaja, K. Aravinthan, V. T. Dinesh, R. Murali John, M. Branavan, S. Sanjey, P. Dennis Hermen, M. S. M. Jumly, P. Suntharakumar, S. Nazamat, N. Neshanthanan, M. F. M. Aflal, A. Sindujan, S. Arunan, V. Logendran, R. Sathyananthan.

*Absentee* Y. Thiruchenduran (*Treasurer*)

# ஆநந்தலகரி (தமிழாக்கம்)
## (மூலம் ஆதிசங்கரர் வடமொழித்துதி)

1. பரவநின் புகழைப் பவானிநான் முகங்கள் படைத்துள பகவற்கும் அரிதால்;
பரமனும் பஞ்ச முகன் அறு முகத்துத் தேவசே னாபதிக்குமப் பரிசால்;
அரவர சாய ஆயிர முகத்துச்சேடற்கும் அரிதெனில் உமையே
ஒருவத னத்த ஏழையேங் களுக்கும் ஒண்ணுமோ உரைப்பதெம் அனையே,

2. தேனொடு பால்நெய் திராட்சையிலுள்ள தீஞ்சுவை நாவுக்கே புலனாய்த்
தானொரு மொழியால் சாற்றொணாவகைபோல் சனனியுன் சௌந்தர்ய மதுவும்
தானொரு பதியாம் சதாசிவன் விழிக்கே விடயமாம்; சகமறி யாதே;
ஆனவப் வியப்பை அறைதுமோ! மறையும் அறிவரும் குணாகரத் துமையே!

3. வாயில்மெல் வடை, வார் விழியிலஞ் சனம், ஒண் நுதவிற்குங் குமம், வளைமிடற்றில்
ஏயும்நன் முத்தத் திலங்கிழை, தேரை நேரல்குல் மேகலை இணைந்த
ஆயும்நுண் பீதாம் பரம், திரு அடியில் அருமறை நூபுரம் அணைந்த
தாயநின் உருவை அநுதினம் நினைவேன் கிரிசையேகௌரியே அனையே,

4. வானமர் தருவின் மஞ்சரி அணைந்த மார்பகம் தழுவிய வீணா
கானமே நுகரும் காதணி குழையும் சற்றுமுன் வளைந்தகா யமுங்கொள்
கானமா மதங்க கன்னியே! ஹம்ச கமனியே! கமலைப்பூங் கண்ணீ!
மானமா தேவன் மனைபக வதியே! மன்னுக ஐயம்புக மூடனே.

5. இளவள ஞாயி றெனவிளங் கிரத்னம் இழைத்தபொன் னிழையணி உறுப்பாள்,
வளமறி மானேர் நோக்கினால் அரனை வலங்கொளும் இறைவி, மின் னொளியாள்,
தளிரடி தழுவும் பட்டுடையதன்கீழ்த் தமனியச் சிலம்பணி தருணை,
அளவிலா னந்த நிறைவினாள் எமக்கும் கருணைநோக் கநுதினம் அருள்க,

6. இமகிரிப் பிறப்பும், இலங்குகைத் தளிரும், நகைத்தமுத் தரும்பும், ஈர்ங்குழலின்
அமர்சுரும் பணியும், தாணுவாம் தருவை அணைதலும், பயோதரக் கனியால்
அமைதரு குனிவும், அஞ்சொலின் சாறும், அடங்க நோய்க்கின்மருந் தாகும்
உமையெனும் ஓடதி வல்லியிவ் வுலகில் ஒளிர்ந்துயிர்க் குதவுக ஒருங்கே,

7. சபர்ணசார் குணத்த தழைவல்லி தமையே சகலமெலாம் மருந்தெனச்சார,
அபர்ணநிர்க் குணத்த தாம்மலை வல்லி அதனையே என்மனம் நிலைத்த
சாலமாம் எனச்சா ரும்தனிப் புராண தாணுவை அவ்வல்லி தழுவி
விபலமாம் நிலைபோய் விபுலமாம் பலங்கள் வேண்டியாங் கருளுமே என்றும்,

8. தந்தனை தருமம்; சாற்றினை மறையும்; சம்பத்து விளைபுலம் ஆவாய்;
வந்தனை குபேரன் செய்மலர்த் தாளாய்; மாரனை வென்றருள் குமாரீ;
சிந்தனை விருப்பம் செனனமாம் இடம்நீ; வித்து நீ சித்திமுத் திகட்கும்;
பந்தனை இலாத பரமனின் மனை நீ பற்றெமக் குன்பதம் பரையே,

9. சஞ்சல மனத்தேன் சற்றும் நின்பத்தி சாதியே னென்னினும், தயைபெய்
மஞ்சனை யாயுன் அருண்மழை என்பால் வழங்கவே வேண்டும் இப்பொழுது;
மஞ்சினம் மழைநீர் சாதக வாயில் வழங்குமே வசப்படா தெனினும்;
நெஞ்சம் நின் அருளே நேடுமால்; இரைதேர் கொக் கொன்று நினையுமோ பிறிதே.

10. கருணையார் கடைக்கண் நோக்கினைக் கடையேம் பாலினும் காட்டுகா மாட்சி;
சரணமே சரணம் சற்சரிதையளே! செய்யலை பராமுகம் திருவே;
பொருள் நயந் தனவப் போதுத வாதேல் கற்பகப் பூங்கொடி ஏனை
மரனுறு வல்லி தம்மினும் மாண்பை மருவுமோ மலைவல்லி மதியாய்,

11. பாவியேன் பரைநின் பாததா மரைக்கே பாவித்தேன் அபாரமாம் பத்தி;
சேவியேன் பிறதே வதைகளை; என்பால் அருட்பர தேவதை! நீதான்
தாவியா தொழியில் தயை, இனித் தமியேன் சரணென யாரிடம் சார்வேன்?
காவியங் கண்ணீ கணேசனை அளித்த கன்னியே! உலகுக்கொ ரனையே,

12. இங்குள இரும்பு பரிசவே தியினை இணைந்துசெம் பொன்னதா மாறும்,
அங்கணத் தழுக்கு நீர்பகீ ரதியை அணைந்தருட் டீர்த்தமா மாறும்,
எங்கள திதயம் எண்ணில் தீ வினையால் மவினமே மலிந்துள தெனினும்
மங்கலை நினதாள் வாரம துறுமேல் வாலிதா காதுகொல்? நிமலாய்.

13. எண்ணிய உறுதி ஏனைய இமையோ ரிடைப்பெறல் உறுதியோ; வறியார்க்(கு)
"எண்ணிய வதன்மேல் ஈயுமீஸ் வரிநீ" என்றுல கீபவன் முதலோர்
கண்ணிமுன் உரைத்தார்; காண அக்கருத்தைக் கடையனேன் கருத்துநின் தாளே
எண்ணுமவ் வுறவில் ஈடுபட் டிருப்ப இருத்துவை அநுதினம் இறைவீ,

14. எவ்வுல கினுக்கும் இறைவன தில்லத் திறைவியே நின்திருக் கோயில்
திவ்விய ஒளிசெய் பன்மணி படிகம் செறிந்துள சுவரில் நின் னருளின்
செயவினைத் திறமோ சலனசித் திரமாய்த் தெரிவன? தெரியுமே தந்தம்
உய்வினைத் திறம்மால் அயனும்பர் பதியும் உழையராய் உஞற்றிடும் பணியும்.

15. வாசமாம் கயிலை; வாய்த்தசே வகரும் மகபதி அயன்முதல் அமரர்;
பாசமாம் குடும்பம் மூவுல(கு); எட்டுச் சித்தியும் பங்கயக் கரத்த;
நேசனாம் மகேசன் நாதன்; எம் அனையே! நீடுபூ தரன்தரு மகளே!
பேசநாம் இவைபோற் பேறுளார் பிறரார்? பெரியபே றுடையமும் யாமே.


சிவசக்தி 2002

16. ஊண்பலி விடமே; ஊர்திமுப் பிடபம்; திக்குடை; ஊர்பணி எலும்பே
பூண்பணி; சுடலை போற்றுமா டரங்கம்; புராரிதன் செல்வமிவ் வளவே;
காண்பரிவ் வுலகர்; காணுமக் கபாலி ஈசுர னாயது கருதில்
மாண்பமை உமையாம் மங்கலை நின்னை மனைவியாய் மருவுபே றன்றோ.

17. அகிலமும் முற்ற அழிக்குமோர் தொழிலே முயற்சியாம்; மயானத்தி லமர்ந்து
சகலமும் மேனி சாம்பரே தரித்துத் தாண்டவம் புரிபசு பதிதான்
நிகிலமுங் காக்க விடத்தினை மிடற்றில் நிறுத்தியும் வீந்திலன்; அது நீ
பகலிலா திணைந்த பாக்கியப் பயனாய் எண்ணுவன்; சுமங்கலை பரையே,

18. நிரதி சயத்த நின்னுரு நோக்கி அஞ்சிமெய் வியர்த்துநீ ரான
பிரதிமம் பெற்ற சகோதரி கங்கைப் பெண்மலர் முகத்தினை நோக்கிக்
கிரிசனாங் கேள்வன் அபயம தளித்துக் கிடத்தினன் தன்சடை மிசையே
கிரிசைநின் அழகைக் கிளத்தவோர் கிளவி கிடைக்குமோ கோமளை உமையே,

19. செய்ய சந்தனத்தின் சேறு கத்தூரி தேமலர் குங்குமம் அளாவி
ஐயநின் மேனி அழகுமஞ்சனஞ்செய் தருளுநீர் கொண்டத னுடனே
துய்யநின் திருதாட் டூசியும் எடுத்துத் தொகுத்தவக் கலவைகொண் டன்றோ
தெய்வநன் மகளிர் திருவுருச் சமைத்தான் திசைமுகச் சிற்பிஎம் மனையே,

20. வேனிலில் மலர்ந்த விரைக்கொடி சூழ விளங்குபன் னிறமரை மலர்மேல்
தேனினும் இனிதாய்ச் சிலம்பனஞ் சேர மலையத்துத் தென்றல்மீ தூரப்
பானுரை திரைகள் பயில்தடா கத்தில் பாங்கிய ரோடுநீ ராடும்
மானினி நினது வடிவினை நினைய மாயுமே சுரமெலாம் அனையே,

<u>பயன்வேண்டல்</u>

21. காப்பான் அமைந்தாய்! கைவிட லும் காப்பும் உனக்கே பரம்; பழிபார்;
பூப்பாய் புரப்பாய் பொன்றுவித்துப் பொடியாய்ப் பூசும் புனிதனெனும்
சேப்பாய் ஊர்திச் சிவன்தேவீ திருவே துர்க்கா வாணீநாம்
நாப்பாய் நாமம் நவின்றேத்த நல்காய் நயனத் தருள்நோக்கே.

ச. சுப்ரமணியம்
*பண்டிதர்*


சிவசக்தி 2002

With Best Compliments from

ht

# HARSHIKKA TRADES

*Dealers in School Books, Exercise Books*
*& Stationery Items etc.*

30/ 26, 8th Lane, Seevali Pura
Borella, Colombo 08
☎ 681887

*With the Best Compliments of*

Carefully selected experienced teaching staff from leading educational institutions

# RAJESWARY INSTITUTE

G.C.E. (A/L)

**கலை / வர்த்தகப் பிரிவு**

தன்னிகரற்ற ஆசிரியர்களைக் கொண்டு சகல பாடங்களையும்
போதித்து 46 வருட காலமாக
கல்விச் சேவையில் மங்காப் புகழுடன் திகழும்
ஒரே தனித்துவமான நிறுவனம்.

21, 26A, A.G. Hinniappuhamy Mw, Kotahena. Tel: 434221

# திருமுருகாற்றுப்படை

கு. ஸ்ரீராகவராஜன்
*ஆசிரியர், றோயல் கல்லூரி*

செந்தமிழ் நாட்டு பண்டைய இலக்கியங்கள் காலத்தால் அழியாதவை. இதில் சங்க இலக்கியங்களும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன தொன்மைமிக்க தொல்காப்பியத்திற்கும் தொன்மைமிக்க கருத்துக்களை தம்முள்ளே கொண்டுள்ளன என்பர். இதில் பத்துப்பாட்டு பாடல்களில் முதற்கண் நின்று இனிய இலக்கிய காட்சியைத் தருவது திருமுருகாற்றுப்படை என்றால் மிகையில்லை.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையுடன் சேர்த்து ஐந்து ஆற்றுப்படைகள் அடங்குகின்றன. அவை பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படையாகிய மலைபடுகடாம் என்பவற்றோடு திருமுருகாற்றுப்படையும் இணைந்து ஐந்து ஆகும்.

ஆற்றுப்படை என்பது ஆற்றின் கட்படுவது; ஆறு என்பது வழிப்படுத்துவது அல்லது செலுத்துவது. அதாவது ஒருவருக்கு செல்ல வேண்டிய வழித்துறைகளைச் சொல்லித்தருவது - குறிப்புடைய ஒருவன் சென்று பயின்ற பின் தான் செல்லவேண்டிய நெறியைத் தெரிந்து செலுத்துவது ஆற்றுப்படையின் கருத்தாகும்.

திருமுருகாற்றுப்படையானது ஏனைய ஆற்றுப்படைகளிலும் ஓராற்றால் வேறுபடுவதனை அவதானிக்கலாம். ஏனைய ஆற்றுப்படைகள் பொருள் வேண்டி இருப்பவர்களை வழிப்படுத்தும் ஆற்றுப்படையாக இருக்க - திருமுருகாற்றுப் படையானது அருள் வேண்டி பத்தனை ஆற்றுப்படுத்தும் ஆற்றலைக் காணலாம். அதாவது வீடுபேறு கருதிய சான்றோர் ஒருவரை, முருகன் திருவருளால் வீடு பேறுக்குரிய திருவடி ஞானம் கைவரப்பெற்ற சீவன் முத்தரொருவர் முருகன் பால் ஆற்றுப்படுகின்றார். தலைசிறந்து நிற்கும் குமரன் முருகப்பெருமானாதலால் ஆற்றுப்படைக்கு அருள்சேர்க்கும் வகையில் முருகனின் திருநாமத்தால் இவ் ஆற்றுப்படை திருமுருகாற்றுப்படை என வழங்கிற்று.

திருமுருகாற்றுப்படையில் அடங்கியுள்ள பொருளைக் காணுமிடத்து முதற்கண் முருகனுடைய உருநலம், செயல் நலம் கூறுவதும், பின்னர் அவன் எழுந்தருளும் முதலாக வரும் இடங்களைக் கூறுவதும், பின்னர் இறுதியாக முருகனை வழிபடுந் திறம் கூறுவதும், அவ்வழிபாட்டையேற்று அவன் எழுந்தருளிக் காட்சி வழங்கியருளுவது கூறுவதும் காணப்படுகின்றது.

முருகன் எழுந்தருளும் இடங்களாக - திருப்பரங்குன்றம், திருச் சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேரகம், பழமுதிர்ச்சோலை, குன்று தோறாமல் முதலிய இடங்கள் எல்லாம் குமரன் குடியிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

கந்தனை - முனிவர் முதல் பதினெண்கணங்கள் ஈறாக தேவர் பலரும், வேதியரும், சூரமகளிரும், குறமகளிரும், முருகனை ஏத்தியும் புகழ்ந்து பாடியும் உள்ளதை ஆற்றுபடை காட்டி நிற்கின்றது. இது காணும் எமக்கு முருகப் பெருமான் எளியவர்க் கெளியவனாய் எழுந்தருளி இன்பம் அளிக்கும் இனிய பெருமான் என்பது தோன்றி ஊக்கம் தருகின்றது.

பரங்குன்றில் உறைதலும், அலைவாயிற் சேறலும், ஆவிநன்குடியில் அசைதலும், ஏரகத்து உறைதலும், குன்று தோறும் விளையாடலும் முருகன் செய்யும் செயல்வகையென இம்முருகாற்றுப்படை மொழிகின்றது. உறைதற்கு இரண்டிடமும் பிறசெயல்கட்கு முறையே ஒவ்வோர் இடமும் கூறப்படுகின்றன. இங்கு உறையுமிடமாக பரங்குன்றில் அமர்ந்துறைவான் என்றும், ஏரகத்தில் பெரிதுவந்துறைவான் என்றும் நக்கீரர் சிறப்பித்துக் கூறுகின்றார்.

அறிவுக்கு இன்பமும், வழிபாட்டில் ஊக்கமும் பயக்கும் காட்சிகள் பலவற்றை திருமுருகாற்றுப்படை நமக்கு ஈட்டி, உலகியல் வாழ்வின் தன்மையை சொல்லோவியம் மூலம் தந்து மெய்யுணர்வின் பேராற்றலில் நம்மை ஈடுபடுத்தி நிற்கின்றது. புறக்காட்சிகளால் நம் உள்ளத்தைக் கவர்ந்து அதனையே அகக் காட்சியாக முருகனுடைய திருவருளைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அவன் திருவருளை வியந்து - திருமுருகாற்றுப் படையின் நலம் ஆயுள்தோறும் இன்பந்தரும் உணர்வை என்னென்பது.

நன்றி

# Organizing Committee
## 2002

S. Aravindh
G. Saroj Pragash
Y. Thiruchenduran
T. Jeyapragash
S. Sanjey
M. Branavan
V. Vimalathithan
P. Suntharakumar
S. Arunan
N. Nesanthanan
V. T. Dinesh
P. Dennis Hermen
A. Sindujan
R. Murali John
K. Aravinthan
V. Logendran
M. S. M. Jumly

K. Sivaskantharaja
R. Sathyananthan
M. F. M. Aflal
S. Nazamat
S. Risheeban
S. M. Rifky
M. S. M. Shameel
M. Umeshan
A. Mufassir
J. Mubeen
M. Chandrakanth
K. Rajendrapragash
S. Samson
S. Suhothayan
A. J. Mifras
T. Sriramanen
P. Vikash


சிவசக்தி 2002

With Best Compliments

from

WESTERN JEWELLERY MART

*Jewellery and Gem Merchants*

88, Sea Street, Colombo 11
Tel: 433977, 335682
Fax: 335682

# Organising Committee



| | |
|---|---|
| *Seated (L-R)* | V. Vimalathithan, M. Branavan, T. Jeyapragash, S. Aravindh, G. Sarojpragash, S. Sanjey, P. Suntharakumar, S. Arunan. |
| *Standing 1st Row (L-R)* | K. Sivaskantharaja, V. T. Dinesh, P. Vikash, S. Risheeban, S. M. Rifky, M. S. M. Shameel, M. Umeshan, A. Mufassir, N. Neshanthanan, M. F. M. Aflal, V. Logendran. |
| *Standing 2nd Row (L-R)* | J. Mubeen, M. Chandrakanth, K. Rajendrapragash, M. S. M. Jumly, S. Samson, S. Subothayan, S. Nazamat, A. Sindujan, A. J. Mifras, R. Sathyananthan |
| *Absentees* | R. Murali John, P. Dennis Herman, T. Sriramanen, K. Aravinthan, Y. Thiruchenduran |

எப்ப
பற்
சில
தற்
நின
விட

கல்
வ
உ
அ
நீ
வ
அ
செ
உ
து

ஒ
ம
ப
எ
இ
ர
பற்
வ
க
க
த
தா
க
இ
செ

சீ

# இன்ப நிலைக்கு வழி

நாம் ஒவ்வொருவரும் இன்பத்தை நாடுகிறோம். ஆனால் உண்மையான இன்பம் எப்படியிருக்கும் என்பதை யாரும் அறியோம். மகிழ்ச்சியாய் இருப்பது எப்படி என்பது பற்றிப் பெரிதும் பேசப்படுகின்றது. ஆனால் மகிழ்ச்சியாய் இருப்பவர்கள் மிகச் சிலரே என்பது கண்கூடு. இதற்குக் காரணம் உண்மையான இன்பத்தின் அடித்தளம் தற்காலிகமான சாதனங்கட்கு அப்பாற்பட்டதென்பதை ஒரு சிலரே அறிவர். இத்தகைய நிலையாய இன்பத்தைத்தான் பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா அர்ச்சுனனுக்கு விபரித்திருக்கிறார்.

இன்பம், பொதுவாக நம் புலன்களின் வழியே உணரப்படுவது. உதாரணமாக, கல்லுக்குப் புலனுணர்வு இல்லை. எனவே அது இன்ப துன்பங்களை உணர்வதில்லை. வளர்ச்சியடையாத உணர்வை விட முதிர்ந்த உணர்வுதான் இன்ப துன்பங்களை உன்னிப்பாக எடுத்துக் காட்டுகின்றது. மரங்களுக்கு உணர்வு உண்டு. ஆனால் அது வளர்ச்சியடையாத நிலையிலுள்ளது. மரங்கள் எல்லாப் பருவநிலைகளிலும் நீண்ட காலம் நிற்கக் கூடியவை. ஆனால் அவை அவல நிலைகளை அறியும் வகையற்றவை. ஒரு மனிதன் மரத்தைப் போல் மூன்று நாட்களுக்கோ அல்லது அதற்கும் குறைவாகக்கூட நிற்கச் சொன்னால் அவனால் அந்நிலையைச் சகித்துக் கொள்ள இயலாது. இதனால் தெரியவருவது என்னவென்றால், எல்லா உயிரினங்களும் அதனதன் உள்ளுணர்வின் வளர்ச்சியின் தகுதிக்கு தக்கபடி இன்ப துன்பங்களை உணர்கின்றன.

இம்மண்ணுலகில் நாம் அனுபவிக்கும் இன்பம் உண்மையான இன்பமல்ல, ஒரு மரத்தை நாம், "நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயா?" என்று கேட்டால், "ஆம் மகிழ்ச்சியாய் இருக்கிறேன். ஆண்டாண்டு காலமாக இங்கு நின்றபடி, காற்று, பனி, இவற்றையெல்லாம் மிகவும் ரசித்துக் கொண்டு மகிழ்ச்சியாய் இருக்கிறேன்" என்றெல்லாம் அது சொல்லக்கூடும். ஒரு மரத்துக்கு இவை ரசிக்கத்தக்கதாக இருக்கலாம்! ஆனால் மனிதனுக்கு இவையெல்லாம் மிகவும் தாழ்ந்த ரசனையாகவேபடும். உயிரினங்கள் பல வகைப்பட்டவை, பல தரமானவை. இன்பம் பற்றிய அவற்றின் கருத்துக்களும் கண்ணோட்டங்களும் அவ்வாறே பல வகைப்பட்டவை, பல தரமானவை. ஒரு மிருகத்தின் கண் முன்பே மற்றொன்று கசாப்புக்கடைக்காரனின் கத்திக்கு இறையாகும் போது கூட, முந்தையது கவலையற்றுப் புல்லைச் சுவைத்துக்கொண்டிருக்கும். ஏனென்றால், அடுத்த கத்தி தன் கழுத்தில் விழும் என்பதை தெரிந்து கொள்ளும் அளவிற்கு அதற்கு அறிவில்லை. தான் மகிழ்ச்சியாக இருப்பதாகவே அது எண்ணிக் கொள்கின்றது. ஆனால் அடுத்த கணமே அது கொல்லப்படலாம். இப்படியாக, இன்பம் பல தரங்களிலானது, இவற்றுளெல்லாம் மிக உயர்ந்த இன்பம் எது? ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு சொல்கிறார்.

*"ஸுகம் ஆத்யந்திகம் யத் தத்*
*புத்தி க்ராஹ்யம் அதீந்த்ரியம்*
*வேத்தி யத்ர ந சைவாயம்*
*ஸ்திதச் சலதி தத்த்வத"*


சிவசக்தி 2002

"அந்த ஆனந்த (சமாதி) நிலையில் இருப்பவன் எல்லையற்ற தத்பர இன்பத்தை தத்பர உணர்வுகள் மூலம் அனுபவிக்கிறான். இந்நிலையில் அசையாது நிற்பவன் என்றுமே பேருண்மையினின்று பிறழ்வதில்லை."

-பகவத்கீதை 6.21-

உண்மையான இன்பத்தில் நிலைத்திருப்பதற்கான வழி வகைதான் "கிருஷ்ண உணர்வு" எனும் செயல்முறை. கிருஷ்ண உணர்வின் மூலம் நம் உண்மை அறிவை படிப்படியாக வளர்த்துக்கொள்ள இயலும். அதோடு ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படுவதால் ஆன்மீக இன்பத்தை இயல்பாகவே ரசித்து அனுபவிக்க ஏதுவாகிறது. ஆன்மீக இன்பத்தை ரசிக்கத் துவங்கும் போது மண்ணுலக இன்பங்களைப் படிப்படியாகக் கைவிடுகிறோம். பேருண்மையை உணர்வதில் நாம் முன்னேற்றமடையும் போது பொய்யான இன்பங்களிலிருந்தும் நாம் இயல்பாகவே விடுபடுகிறோம். இவ்வாறு விடுபடும் போது பிற சாதனைகள் ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. இந்த நிலவுலகில் நாம் பெற முயல்பவை பற்பல. செல்வம், பெண்ணின்பம், புகழ், அழகு, புலமை. ஆனால் கிருஷ்ண உணர்வில் நாம் நிலைக்கத் துவங்கியதும் "இதைவிடச் சிறந்த பேறு வேறில்லை" என்ற எண்ணம் ஏற்படுகின்றது. கிருஷ்ண உணர்வை ஒரு துளி சுவைத்தால் கூட மாபெரும் ஆபத்தினின்றும் தப்பமுடியும். அது அவ்வளவு சக்தி வாய்ந்தது. கிருஷ்ண உணர்வின் சுவையை ரசிக்கத் துவங்கியதும் பிற இன்ப அனுபவங்களும், சாதனைகளும் சப்பென்று சுவையற்றுக் காணப்படும். கிருஷ்ண உணர்வில் உறுதியாக ஊன்றி நின்றால் எத்தகைய இடர்பாடுகளும் பாதிக்கமாட்டா.

கட்டுக்குள் அடங்காத புலன்கள் காரணமாக நாம் இகலோக வாழ்க்கையில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். யோக முறை, புலன்களை அடக்குவதற்காக ஏற்பட்டது. புலன்களை ஏதாவது ஒரு வழியில் அடக்க முடியுமானால் உண்மையான ஆன்மீக இன்பத்தையடைந்து வாழ்வில் வெற்றி பெறலாம்.

தன்னைச் சரணடைந்தவர்களுக்குப் புரவலனாக விளங்குகிறார், கிருஷ்ணர். ஒருவனுக்கு இன்னல் நேரும் போது அவனின் புரவலன் அவனைப் பாதுகாக்கிறான். பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது போல் கிருஷ்ணன் உயிரினங்கள் ஒவ்வொன்றுக்கும் உண்மையான நண்பன். அவனுடைய நட்பைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமை. இவ்வாறு நட்பைப் புதுப்பித்துக் கொள்வதற்கான வழியே கிருஷ்ண உணர்வு. கிருஷ்ண உணர்வைப் பயில்வதன் மூலம் இம்மை உலகின் அளவிலா இச்சைகள் அற்றுவிடும். இந்த அளவிலா இச்சைகள் கிருஷ்ணனிடமிருந்து நம்மை விலகி நிற்கச் செய்கின்றன. கிருஷ்ணன் நம்முள்ளேயே இருக்கிறான். நமக்காக காத்திருக்கிறான். ஆனால் நாமோ, விஷம ஆசைகளை விரும்பிச் சுவைப்பதில் பொழுதைக் கழிக்கிறோம். இவ்வாறு ஆசைகளால் உந்தப்படுவது நிற்க வேண்டும். நம் சுத்த ஆன்மாவான பிரம்ம நிலையில் நம்மை இனங்கண்டு அதில் ஊன்றி நிற்க வேண்டும்.

இராசு. சத்தியானந்தன்
*உயிரியல் பிரிவு*
உயர்தரம் 2003

# ஒன்றே குலம் ஒருவனே தேவன்

*ஒன்றே குலமும் ஒன்றே தேவனும்*
*நன்றே நினைமின் நமனில்லை நாணமே*
*சென்றே புகுங்கதியில்லை நும் சித்தத்து*
*நின்றே நிலை பெற நீர் நினைந் துய்மினே*

என்கிறது திருமந்திரம். அதாவது, மானிடர்களெல்லோரும் ஒரு குலமே. தெய்வமும் ஒன்றே. சந்தேகமின்றி நன்முறையில் சற்குருவின் உபதேசப்படி உங்கள் உள்ளத்தில் உறையும் இறைவனை தியானித்து வீடு பேறு அடையுங்கள்.

ஆம். இறைவன் ஒருவனே என்ற கோட்பாட்டை இன்றைக்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மலர்ந்த திருமந்திரம் கூறுகிறது. ஆனால் இன்றைய மானிடனோ மதத்தின் பெயரில் மோதுகிறான். மதத்தை ஒரு மார்க்கமாகப் பார்க்கவில்லை அதனை மூர்க்கமாகப் பயன்படுத்துகிறான். ஏன் இந்த அவல நிலை? சமயம் எதைக் கூறுகிறது? சமயங்களிடையே உள்ள ஒப்புவமை என்பவற்றை அவன் உணரவில்லை. என்று பல்வேறு மத அறிஞர்களும் எடுத்தியம்புகின்றனர்.

இன்று உலகில் பல்வேறு சமயங்கள் இருந்தபோதும் இலங்கையில் காணப்படும் முக்கிய 4 மதங்கள் பற்றியே இங்கு ஆராயப்படுகிறது.

இந்து மதத்தில் உள்ள வேதங்கள் 4. அதே போலவே பௌத்த மதம், இஸ்லாம் இவற்றிலும் 4 வேதங்களே காணப்படுகின்றன.

| | இந்து | இஸ்லாம் | பௌத்தம் |
|---|---|---|---|
| 1 | இருக்கு | தௌராத் | மெத்தா |
| 2 | யசுர் | சபூர் | கருணா |
| 3 | சாமம் | இன்ஜில் | முதி(D)தா |
| 4 | அதர்வனம் | (F)புர்கான் | உபேக்கா |

என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா?

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவதாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே*

என இறைவன் அன்பே வடிவமானவர் என்கிறது திருமந்திரம். அதாவது, நீ எல்லோரிடமும் அன்பு காட்டினால் முக்திப்பேற்றை அடையலாம் என்பதே இதன் கருத்தாகும்.


சிவசக்தி 2002

"சப்பே தத்தா பவந்து சுகிதத்தா" என்கிறார் புத்தர். அதாவது, எல்லா உயிர்களிடத்திலும் நீ அன்பு காட்ட வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மானுக்கு பிணை நின்று அனைத்து உயிர்களுக்கும் நாம் அன்பு காட்ட வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியுள்ளார்.

மற்றும் இயேசுநாதர் ஒரு கோடி மக்களுக்கு ஓர் அப்பத்தை பிரித்துக் கொடுத்து எல்லா உயிர்களுக்கும் அன்பு செலுத்த வேண்டும் என்ற உன்னதக் கருத்தை உணர்த்தி நின்றார்.

இவ்வாறு, எல்லா மதங்களும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றன. ஆயின், இன்று இந்த மனித சமூகம் என்ன செய்து கொண்டிருக்கின்றது? பிறர் துன்பத்தில் தாம் இன்புற்றுக் கொண்டிருக்கின்றது. மதத்தின் பேரில் மதங் கொண்டு தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டிருக்கின்றது.

இது மாத்திரமன்றி இன்று நாம் பாவ காரியங்களை விடுத்து புண்ணிய காரியங்களையே செய்ய வேண்டும். மற்றும் இறைவனை அடைவதே இந்த வாழ்க்கையின் குறிக்கோள் என்று எல்லா மதங்களும் சுட்டி நிற்கின்றன. இதையே உலகப் பொது மறையாம் திருக்குறளும்

*"தனக்குவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது"*

என்று மிக அழகாக கூறி நிற்கின்றது. இவ்வாறு "பாமரனை பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனை தெய்வமாகவும் ஆக்குவதே சமயம்" என்று இராமகிருஷ்ணர் கூறுவதைப்போல எல்லா மதங்களும் மனிதனை மனிதனாக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

அன்பெனும் விதையை மனதில் விதைத்து பண்பெனும் செடியை உள்ளத்தில் வளர்த்து மாண்புடன் மண்ணுலகில் மனிதனை வாழ வைத்து பின் இறைவன்தன் அடியை அடைந்து இன்புற்றிருக்க வழி வகுப்பதே மதங்கள். சாமத்தை வளர்க்க வந்தவையே சமயங்கள். சண்டையை வளர்ப்பதற்காக அல்ல.

*"நீ எதைக்கொண்டு வந்தாய் கொண்டு செல்ல*
*எது உன்னுடையதோ அது நாளை*
*மற்றொருவனுடையதாகின்றது"*

என்று பகவத்கீதை கூறுகிறது. இதைப்போல மனிதனது ஆசைகள் யாவற்றையும் விடுத்து அவனை நன்மை செய்ய தூண்டுவது தான் சமயம்.

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*

என்று கூறி இவ்வுலகத்தில் வாழ்பவர்கள் அனைவரும் தன் உறவினர் என்று கூறுவது தான் சமயம்.

இவ்வாறு எல்லா மதங்களும் மனிதன் முக்திப்பேறடையும் பாதையைக் காட்டி நிற்கின்றன. ஆனால் மனிதன் இச்சமயங்களை மார்க்கமாக நோக்கவில்லை. ஒரு வழி காட்டலாகவாவது ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஒரு பொருளாக பயன்படுத்துகிறான். தனக்கு இஷ்டமானவற்றை மதம் என்கிறான். மற்றையதை மூட நம்பிக்கை என்கிறான். சடங்குகள், பண்டிகைகளை செய்கிறான் அதனால் அதன் உட்பொருளை உணரவில்லை.

மனிதன் மதத்தை செம்மையாக பின்பற்ற இவ்வுலக வாழ்க்கையைத் துறக்க வேண்டும் என்று நினைக்கிறான். ஆனால், அது தவறான விடயம். மனிதன் இவ்வுலகில் மனிதனாக வாழ்வதே சிறந்த சந்நியாசம். பிறர் பொருள்மேல் ஆசைப்படாது போதுமென்ற மனதுடன் எல்லா ஜீவராசிகளிடமும் அன்பு பூண்டு வாழவேண்டும். தீய காரியங்களை விடுத்து நல்ல காரியங்களை செய்ய வேண்டும். இதை அவன் இவ்வுலகில் வாழ்ந்த வண்ணமே பின்பற்றலாம். இதையே எல்லா மதங்களும் கூறுகின்றன.

ஒரு பொருளை உற்பத்தியாக்க பல வழிகள் உண்டு. ஆனால் அந்தப் பொருளால் விளையும் பயன் ஒன்றே. அது போல மனிதனை மனிதனாக்க மதங்கள் கூறும் வழிகள் பல. ஆனால் அதன் விளைவு பண்புடைய ஒரு மனிதனை உருவாக்குதலே ஆகும். ஓரிடத்துக்கு செல்லும் பாதைகள் பல ஆனாலும் அடையும் இடம் ஒன்றே. அதுபோல, மதங்கள் பலவழிகளைக் கூறினும் இறுதியில் அவை இறைவனிடமே எம்மைக் கொண்டு சேர்க்கின்றன.

எனவே மதத்தின் பேரில் சண்டைகள் இனி வேண்டாம். மனதைத் திறவுங்கள் மதத்தின் உற்பொருளாம் அன்பை உணர்ந்து இவ்வுலகில் படித்த முட்டாள்கள் ஆவதை விட்டுவிடுங்கள். மூர்க்கர்களாய் மாறுவதை மாற்றுங்கள். மனிதனாக வாழ முயற்சியுங்கள். முயற்சிப்போம்.

*சமயத்தாலே சாமம் கொண்டு*
*சாதனை புரிந்து வேதனை துறப்போம்*
*இது போதனை அல்ல*
*வெறும் புழுகலும் அல்ல*
*உன்னதமானோர், உயரிய கருத்து*
*உள்ளத்தால் உணர்ந்து உயர்வடைவீர்.*

**நீ. நிஷாந்தனன்**
*கணிதப்பிரிவு*
*உயர்தரம் 2004*

*With Best Compliments*

*from*

**Genesis Basics**

**FORMAL WEAR GENTLEMEN PREFER** **CLOTHING**

**JUST BE YOURSELF**

No. 481, Galle Road
Colombo 3. Sri Lanka
Tel: 0094 1-591686/7

**With the Best Compliments**

**of**

# G.P.N. CONSTRUCTION (PVT) LTD.

*Civil Engineers & General Contractors*

No. 56, Sinsapa Road, Colombo 06, Sri Lanka
Tel: 591692 Fax: 591692

# Royal College Hindu Students' Union

| Year | Student Chairman | Secretary |
|---|---|---|
| 1998 | N. Sudarshan | R. Anandan |
| 1999 | P. S. Senthuran | T. Yogendran |
| 2000 | S. Gajendran | B. Baherathan |
| 2001 | H. Sriram | N. Vivek, M. Pradeep |
| 2002 | S. Aravindh | G. Saroj Pragash |

றோயல் கல்லூரி இந்து மாணவன் மன்றம் 1955இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் துரதிஷ்டவசமாக சகல விபரங்களும் எம்மிடம் வைப்பில் இல்லை. விபரம் அறிந்தவர்கள் அவற்றை தந்துதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*With Best Compliments*

*from*

# JAYSONS GRAPHICS

*Offset & Screen Printers*

Sahasapura Apartment Complex
61/7/54, Baseline Road
Colombo 8

# மாணவ சமுதாயமும் சமயமும்

21ம் நூற்றாண்டில் விஞ்ஞானம் வளர்ச்சி பெற்று விஞ்ஞானமே உலகம் என்ற ஒரு நிலை அடைந்துவிட்ட, இன்றைய மாணவ சமுதாயத்தினால் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான தொன்று சமயம் என்பதாகும்.

பள்ளிப்பருவம் மனிதனது வாழ்க்கை காலத்தில் சிறப்பானதும் முக்கியமானதுமாகும். குழந்தை ஒன்று பிறக்கின்றது. பிறக்கும் போது பெற்றோருடைய மூளைவளர்ச்சிக்கும் இதயப்பண்பாட்டிற்கும் ஏற்றபடி இதயமும் மூளையும் பெற்று பிறக்கிறது. பிறந்ததும் குழந்தையின் முதல் ஆசிரியராக இருந்து குழந்தையின் இதயத்தையும் மூளையையும் வளர்க்கிறாள் தாய். இக்காலத்தில் மூளை வளர்ச்சியே அதிகமாக நடைபெறுகிறது. பின் தந்தையின் தொடர்பை அடைகிறது. பின் பல்வேறு உடலியல்; உளவியல் வளர்ச்சி ஏற்படுகிறது. அடுத்ததாக பாடசாலை ஆசிரியரால் மிகுதியாக வளர்க்கப்படுகிறது மூளை. இந்நிலையில் சக மாணவர்கள், சுற்றுப்புறத்தின் தாக்கல்கள் காரணமாக பலவகை மாறுதல்களை எதிர்நோக்குவதோடு தனக்கென ஒரு தனித்துவமான பண்புடன் தனித்து செயல்படத் தொடங்குகிறான். வெளி உலகில், அதாவது மாணவ உலகில், வீறுநடைபோடத் தொடங்குகிறான். இது தான் மாணவப் பருவம்.

மாணவப் பருவத்தின் முதற் செயற்பாடுகளாக குரு பக்தி, நட்பு என்பன உருவாகின்றன.

*" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"*

என்றெல்லாம் கூறப்பட்ட பொன்மொழிகளுக்கு அடங்கி தாய் தந்தையரை கடவுளாகக் கண்ட மாணவன் குருவையும் கடவுளாகக் காண்பான்.

*" கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு"*

குருவிடம் இருந்து பெற்ற, பெறுகின்ற மிகமிக அற்ப அறிவினை வைத்து கொண்டு குருவின் அறிவில் குறை காண்கின்றான். இன்றைய கால மாணவன் குருவினுடைய அறிவை ஆராயும் போது அடிப்படையான ஓர் உண்மையை மறக்கவும் கூடாது.

*" எல்லாம் அறிந்தவன் எவனுமில்லை*
*எல்லாம் தெரிந்திருந்தால் அவன் மனிதனுமில்லை"*

இதைத்தான் வள்ளுவப் பெருந்தகையும் கூறுகிறார்.

*" கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*

எனவே பொது நோக்கில் நின்று தன் குருவில் குறை காணாது தங்கள் நிலையுணர்ந்து குருவின் ஆசி பெற்று கல்வியைப் பெறவேண்டும்.

*" கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாரெனின்"*

எனவே ஒருவன் கல்வி கற்று மருத்துவனாகவோ, பொறியியலாளனாகவோ, ஆசிரியராகவோ பட்டம் பதவிகள் மட்டும் பெற்று விட்டால் போதாது. கற்றோர் அவையில் முந்தியிருக்கும் மனிதத்துவமுடையவனாக இருக்கவேண்டும்.

நட்பு மாணவ சமுதாயத்தில் முக்கிய பொருளாகும்.

*" முக நக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
*அகம் நக நட்பது நட்பு"*

என நட்பினை வரையறுத்துள்ளார் திருவள்ளுவர்.

*" உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது*
*கொள்வாரும் கள்வரும் நேர்"*

என தீய நட்பினையும் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர் பெருந்தகை.

குருபக்தி, நட்பு, கல்வி இவற்றினால் மாணவப் பருவத்தை முழுமைபடுத்தும் கருவியாக அமைகிறது சமயம். எங்களுக்கு அப்பாற்பட்ட, எங்களுக்கு உள்ளே நின்று எங்களை இயக்குகின்ற ஒரு சக்தியை இந்துக்கள் "சிவன்" என்றும் பௌத்தர்கள் "புத்தர்" என்றும் முஸ்லிம்கள் "அல்லாஹ்" என்றும் கிறிஸ்தவர்கள் "இயேசு" என்றும் வணங்குகிறார்கள். எல்லா மதங்களினதும் அடிப்படை கொள்கைகள் ஒன்றே. உள் பொருளைக் காண்பது எப்படி? ஒருவன் தன்னைத் தானே உணர்ந்து கொண்டால் அங்கு கடவுளைக் காண முடியும்.

*"மாணவ சமுதாயம் ஒழுங்காக கல்வி கற்று*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்ற மனிதத்துவ நிலையை அடைந்து ஒரு நல்ல சமுதாயத்தை - நாட்டை உருவாக்க முயலுவதற்கு சமய வழிபாடு, சமயக் கொள்கைகள் இன்றியமையாதன.

*மாணவர்களே விழித்து எழுங்கள்!*
*உங்கள் ஆன்மீகத்தால் உலகை வெற்றி கொள்ளுங்கள்!*

ச. அரவிந்தன்
*உயிரியற்பிரிவு*
*உயர்தரம் 2003*


சிவசக்தி 2002

# விடியும் பூமி

இருள் கொண்ட வானம்
விடிகின்ற வேளை
இனியென்ன? இனியென்ன
உறக்கங்கள்? - இது
அருட்சமா தானம்
படர்கின்ற வேளை
அகற்றுக! அகற்றுக!
கலக்கங்கள்!

தீங்குகள் ஒழிய,
ஏங்கிய மனங்கள்
தாங்கிய துன்பங்கள்,
மறைவடையும்! - இனி
ஆங்கொரு ஆதித்தன்
பாங்காய் உதித்திட,
நீங்கிய இன்பங்கள்
நிறைவடையும்!

சிதைந்திட்ட கனவும்,
உறைந்திட்ட உணர்வும்,
மறைந்திட்ட மனங்களின்
எதிர்பார்ப்பும் - நன்மை
நடைபெறும் நாளை!
இடம்பெறும் வேளை,
இறைவனின் கடைக்கண்
நமைப் பார்க்கும்!

வன்மனப் பேய்கள்
மின்னலாய் மறைய,
நன்மனத் தேவதை
குடி வருவாள்!- எங்கள்
மண்ணக மாந்தர்தம்
துன்பங்கள் தீர்க்க,
அன்பெனும் அமுதம்
அளித்திடுவாள்!

பண்பெனும் ஆறு,
பாரினில் நாளும்,
பரிவுடன், பாய்ந்திட
அருள்செய்வாள்! - எம்
மனதினில், அறமெனும்
புனிதத்தை வைத்து,
அழுக்காறெனும் பேர்
இருள் கொய்வாள்!

நல்லொளி பரவும்!
வல்லமை பெருகும்!
பல்லினப் பூக்களும்,
மலர்ந்தொளிரும் - அங்கு
கருங்குயில் பாட,
கொடும்பனி ஓட,
இருட்டிய தீங்கிருள்
அகன்றழியும்!

எம்மவர் கஷ்டப்
பட்டிட்ட போது,
துயின்றிட்ட துஷ்டரின்
வாழ்வழியும்! - எங்கள்
தர்மத்தின் வலிமையில்,
கர்மங்கள் புரிகையில்
மர்ம அதர்மங்கள்
மாய்ந்தழியும்!

இனிவரும் காலம்,
இளைஞர் தம் ஞாலம்!
இன்றைய கோலங்கள்
மடிந்திடுக! - எங்கள்
அமைதியின் தேவதை
அருளுடன், இருள்விட,
அழகிய பூமிகள்
விடிந்திடுக!

வி. விமலாதித்தன்
உயிரியற்பிரிவு
உயர்தரம் 2004

With Best Compliments

from

◆
◆
◆
◆

J. PRAVEEN

GRADE 3H

WITH THE BEST COMPLIMENTS

OF

SWISS MOTOR TRADERS

GENUINE IMPORTERS AND WHOLESALE DEALERS IN USED, RE-CON JAPANESE ENGINES AND MOTOR SPARE PARTS FOR BUSES, TRUCKS AND CARS

# 238/9, Panchikawatte Road
Colombo 10, Sri Lanka
Tel: 435904 Fax: 332941




WITH COMPLIM

SRM Radiant
RAY OF HOPE
BEST INDIAN IT EDUCATION

MULTIMEDIART
Diploma in Multimedia

iFORWARD
Ahead of the others in the Internet highway
Diploma in E-Commerce

Microsoft

JAVA

Microsoft .net

OR

UNIT 601, 4TH FLOOR, UNITY PLAZA, COLOMBO - 4. TEL / FAX : 559




MPLIMENTS FROM

EXCEL@IT (PVT) LTD.

A BOI APPROVED COMPUTER TRAINING INSTITUTE

crosoft net ORACLE Linux Microsoft Office xp Adobe macromedia

/ FAX : 559050, 559049, EMAIL: excelit@sltnet.lk www.srmradiant.com

# புதிய உலகம் பிறந்திடட்டும்

சோகங்கள் துயரங்கள் தீர்ந்திடட்டும்
சொர்க்கத்தின் வாசல்கள் திறந்திடட்டும்
தாகங்கள் எல்லாம் தணிந்திட்டும்
தரித்திரம் தரிப்பிடம் மாறிடட்டும்

பஞ்சங்கள் எல்லாம் தீர்ந்திடட்டும்
பாரினில் லட்சுமி வாழ்ந்திடட்டும்
வெஞ்சினமெல்லாம் ஆறிடட்டும்
விடிவெள்ளி வானில் முளைத்திடட்டும்

வெள்ளங்கள் எல்லாம் வடிந்திடட்டும்
வடிவாய் நெற்கதிர் குனிந்திடட்டும்
கள்ளங்களை மனம் அகற்றிடட்டும்
கருணை மழை எம்முள் பொழிந்திடட்டும்

சுந்தரப் பாட்டுக்கள் கேட்டிடட்டும்
சுகந்த வாசம் வீசிட்டும்
எந்திர தொழில்கள் பெருகிடட்டும்
ஏழ்மைகள் எமைவிட்டுப் போயிடட்டும்

புதிதாய் சூரியன் உதித்திடட்டும்
புதுமைகள் நன்மைகள் நடைபெறட்டும்
புதிராய் இருந்தவை விடுபடட்டும்
புதுமுக மலர்கள் சிரித்திடட்டும்

பி. சுந்தரகுமார்
*கணிதப்பிரிவு*
*உயர்தரம் 2004*

*With the Best Compliments*

*of*

**TM Tele Marketing**

*Consumer Electronic*

**750, Negombo Road, Welisara.**
**T.P. : 940964, 939342**
**Fax : 940964, E-mail: telemark@wow.lk**

**Branch Office:**
**138, Royal Cinema Complex**
**Greens Road, Negombo. Tel: 074-872628**

With Best Compliments

from

**NISAAN PRINTERS (PRIVATE) LIMITED**

- Printers
- Stationers
- Publishers

64N, Peer Saibo Street, Colombo 12
Phone : 439401 Fax : 459019
E-mail : nisaan@vinet.lk

# சமயம்

பாமரர்களே..........!
நீங்கள் ஒரு நாள்
பண்புள்ளவர் ஆவீர்கள்..........!

பண்புள்ளவர்களே.......!
நீங்கள் ஒருநாள்
தெய்வங்களாவீர்கள்.....!

பாவிகளே.......!
நீங்களும் ஒரு நாள்
பாவங்கள் நீங்கப்பெறுவீர்கள்!

அன்பென்னும் சமயத்தின்,
ஆதிக்கம் பெறுகையில்,
துன்பங்கள் விலகிட, நீவிர்
புனிதர்கள் ஆவீர்கள்!

ம. பிரணவன்
உயிரியற்பிரிவு
உயர்தரம் 2004


சிவசக்தி 2002

With Best Compliments

from

# Hotel
# Ranmuthu

112, Galle Road
Colombo 3
Sri Lanka

T'Phone : 433986/7/8/9
Fax : 447213
Cable : "RANMUTHU"

With the Best Compliments of

# Majestic Translations

මැජෙස්ටික් පරිවර්තන

மஜெஸ்டிக் மொழிபெயர்ப்பு

No. 49, Galle Road, Bambalapitiya, Colombo 4
Telephone : 556323

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்
கடவுள் வாழ்த்து
பூசை
மலரும் மொட்டுக்கள்
நடனம்
வரவேற்பு உரை
நடனம்
மலர் வெளியீடு
அதிபர் உரை
நடனம்
பிரதம அதிதி உரை
வாத்திய இசை
பரிசளிப்பு
நாடகம்
நன்றியுரை
வில்லுப் பாட்டு
பாடசாலைக் கீதம்
தேசிய கீதம்

## Programme Parade

Lighting the Oil Lamp
Prayers
Pooja
Children's Programme
Dance
Welcome Speech
Dance
Release of Souvenir
Speech by the Principal
Dance
Speech by the Chief Guest
Orchestra
Prize-giving
Drama
Vote of Thanks
Villu Pattu
School Song
National Anthem

*With the Best Compliments of*

**AMBIGAI GALANCHIYAM**

**அம்பிகை களஞ்சியம்**

*General Merchant and Commission Agent*

304, (110) Hospital Road, Jaffna
Tel: 021 2511

With Best Compliments

from

# Hotel
# Ranmuthu

Colombo
Sri Lanka

Phone 433064/...
Fax 447213
Cable "RANMUTHU"

With the Best Compliments of

# Majestic Translations

No. 49, Galle Road, Bambalapitiya, Colombo 4
Telephone : 556323

With the Best Compliments

of

**R. SHARUNATH**

**Grade 1J**

*With Best Compliments from*

**SOCCER PROMOTERS S. C.**

52, Brass Founders Street
Colombo 13

With the Best Compliments

of

## SENDUR FOOD PRODUCTS

*We are producing, String Hoppers, Thosai, Iddly, Pittu etc.*
*and special Ulundu Vadai*

We are undertaking orders for Breakfast, Lunch & Dinner for all occasions

44/271, Kirulapure
Kirulapone, Colombo 6
☎ 075-517163

*With the Best Compliments*

*of*

## N. NISANTHARAJ

**Grade 5J**

# றோயல் கல்லூரி
## இந்து மாணவர் மன்றம்
### பாடசாலைக்குள்ளான போட்டி முடிவுகள்

**Year 1H**

பண்ணிசை
1. T. ஹரிசுதன்
2. V. நிலான் கிரிநாத்
3. R. மிதுஷன் பாரத்

பேச்சு
1. S. பிரசாந்
2. B. சாருந்தன்
3. R. ராகுல்

பூ மாலை கட்டுதல்
1. S. துவாரகன்
2. K. சிந்துஜன்

**Year 1J**

பண்ணிசை
1. R. உதிஷ்ட்ரன்
2. S. கௌரீசன்
3. L. கீர்த்திகன்

பேச்சு
1. B. கஜீவ்
2. G. ஹரிநாத்
3. T. காந்தரூபன்

பூ மாலை கட்டுதல்
1. V. ஶ்ரீவத்சன்
2. S. ஹரிஷ்மன்

**Year 2H**

பூ மாலை கட்டுதல்
1. V. மிதுஷன்
2. Y. பிரணவன்
3. R. டிஷானந்
   G. அருண் செந்தூரன்

பண்ணிசை
1. L. திலிப்குமார்
2. G. அருண் செந்தூரன்
3. Y. பிரணவன்
   K. பிரபஞ்சன்

**Year 2J**

பூ மாலை கட்டுதல்
1. R. கவிஸ்வரன்
2. R. ரவீந்திரதாஸ்
3. B. வினோத் பாஸ்கரன்

பண்ணிசை
1. R. கவீஸ்வரன்
2. B. வினோத் பாஸ்கரன்
3. N. சாறுஜன்

பேச்சு
1. A. செந்தூரன்
2. P. ஆனந்தராம்
3. K. பிரபஞ்சன்
G. அருண் செந்தூரன்

பேச்சு
1. V. கௌசீகன்
2. S. சாயி கிருஷ்ணா
3. N. சாறுஜன்
G. தர்சன்

**Year 3H**

பூ மாலை கட்டுதல்
1. T. திவியன்
2. S. அரவிந்த்
3. T. கிஷாதனன்
J. பிரவீன்

பண்ணிசை
1. J. பிரவீன்
2. Y. பிரசாந் ரஜீவ்
3. S. அரவிந்த்
P. சாய்தேவ்

பேச்சு
1. J. பிரவீன்
2. S. சேயோன்
3. T. கிஷாதனன்
P. கோகுல் ராம்

**Year 3J**

பூ மாலை கட்டுதல்
1. R. அருண்தீப்
2. R. செந்தூரன்
3. G. ஜெய பிரசாத்
R. திவ்யநாத்

பண்ணிசை
1. R. நிரோஷன்
2. J. அருஷன்
3. R. செந்தூரன்
R. ராகுலன்

பேச்சு
1. J. அபிராம்
2. S. அருள்வர்மன்
3. R. திவ்வியநாத்
J. அருஷன்

**Year 4H**

பூ மாலை கட்டுதல்
1. K. R. ரமணன்
2. P. இந்திரஜித்
3. V. வெங்கட் பெருமாள்

**Year 4J**

பூ மாலை கட்டுதல்
1. P. அருண்தேவ்
2. T. செந்தூரன்
3. K. ஷான்
N. பிரவீன்


சிவசக்தி 2002

பண்ணிசை
1. V. வெங்கட்
2. M. மதிதயனன்
3. P. இந்திரஜித்
   N. டிலுக்சன்

பேச்சு
1. B. அஜன்
2. N. டிலுக்சன்
3. K. R. ரமணன்

பண்ணிசை
1. K. சசிபாலன்
2. T. ரகுராம்
3. S. ஸ்ரீ குணேசன்

பேச்சு
1. S. ஸ்ரீ குணேசன்
2. P. அருண்தேவ்
3. T. ரகுராம்
   K. கபில்தேவ்

**Year 5H**

தோரணம் கட்டுதல்
1. K. பிரசாத்
2. V. சாரங்கன்
3. R. தனுசன்
   P. சுசாந்தன்

பண்ணிசை
1. S. திவ்யகாஷ்
2. V. சாரங்கன்
3. P. ஹரேந்திரா
   J. விமலேஷ்

பேச்ச
1. P. சுசாந்தன்
2. M. துவாரகன்
3. S. திவ்யகாஷ்
   T. பௌரானிகன்

**Year 5J**

தோரணம் கட்டுதல்
1. S. ஹரிராம்
2. T. கிஷோபன்
3. G. விஜயானந்

பண்ணிசை
1. T. கிரிஷோபன்
2. R. தர்ஷன்
3. P. கோகுல பிரதீப்
   S. வேணுஷயன்

பேச்சு
1. R. தர்ஷன்
2. T. கிரிஷோபன்
3. J. நிஜந்தன்
   K. பிரியங்கன்

## மத்திய பிரிவு

**கட்டுரை**
1. J. முகுந்தராஜ் 8R
2. P. ஜெயமயூரேஷ் 6Q
3. R. சிந்துஜன் 8R

**கவிதை**
1. M. பிரணவன் 7R
2. P. லோகபிரசாத் 7R
3. J. முகுந்தாஜ் 8R
   U. சஜீவ் 7Q

**சிறுகதை**
1. S. சிவசங்கரன் 8R
2. Y. இளங்குமரன் 7R
3. A. அமுதபவான் 6R
   S. அர்ச்சுனா 8Q

**பேச்சு**
1. S. சிவசங்கரன் 8R
2. I. M. அப்ராஸ் 8R
3. B. மயூரன் 7R

**பண்ணிசை**
1. K. R. சசிவர்ணன் 6Q
2. S. பரதன் 7R
3. S. ஜதுகேசன் 6R

## மேற்பிரிவு

**கட்டுரை**
1. P. பிரணவன் 11Q
2. S. சதானந் 10R
3. A. சோபன் 10R

**கவிதை**
1. A. ஹரிஷன் 11Q
2. P. பிரணவன் 11Q
3. S. கஜனன் 10Q
   S. சூரியபிரதாப் 10R

**சிறுகதை**
1. N. பிரசன்னா 11Q
2. A. ஹரிஷன் 11Q
3. S. சுபசங்கர் 10R

**பேச்சு**
1. N. பிரசன்னா 11Q
2. S. சூரியபிரதாப் 10R
3. S. சுகோதயன் 10R

பல சிரமங்களின் மத்தியலும் பாடசாலைக்குள்ளான போட்டிகளில் நடுவர்களாகக் கடமையாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

-செயற்குழு 2002-

*With Best Compliments*

*from*

## SUPERHANDS

*Clearing & Forwarding Agents*

20, 3rd Floor
YMBA Building
Colombo 01

Tel : 074-721725
Fax : 074-721725
E-mail : super.hands@hotmail.com

With the Best Compliments

of

## VASANTHAM FOODS

நல்லெண்ணெய், தேன், நெய், பனம் பொருட்கள்

423, Galle Road
Wellawatte
Colombo 06

*With the Best Compliments of*

ධර්ෂිකා ජුවලර්ස්

தர்ஷிகா ஜுவலர்ஸ்

# Dharshikaa

## Jewellers

No: 11, Sea Street, Colombo 11
Tel: 332994

---

With Best Compliments from

# RETINA INSTITUTE OF BUSINESS STUDIES

- Educational Consultants
- Students Placement to U.K., USA

294 2/1, Galle Road
Colombo 4

Telephone: 074-723818
E-mail: study@retina.lk

பாடசாலைகளுக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# அன்பு எனும் தூயநெறி

காலங்கள் பல கடந்தாலும், உலகங்கள் மாறினாலும், மனிதர்கள் மடிந்தாலும், பல உயிர்கள் மடிந்தாலும் அன்று தொட்டு இன்று வரை இப்புண்ணிய உலகில் ஒவ்வொரு ஜீவராசிகளையும் இருக்கும் உறவை மேம்படுத்தி அதனை உலக வாழ்வில் பதிக்க உதவும் சிறந்த பசளையே அன்பு என வரையறுக்கப்படுகின்றது. அன்பு எனும் தூயநெறி நடையில் அன்னை சேய் மீது வைக்கும் அன்பு, இறைவன் மீது பக்தி (அன்பு) செலுத்தும் அடியான் கொண்ட அன்பு, கணவன் மீது மனைவி கொண்ட அன்பு, குருவின் மீது மாணவன் கொண்ட (அன்பு) மரியாதை, உயிரினங்கள் கொண்ட உள்ளார்ந்த அன்பு, நாம் பூமி மீது கொண்ட அன்பு எனப் பல காலடிகளைக் கடந்து செல்லலாம். இவ்வகையில் இவ்வொவ்வொரு அன்புத்துளிகளையும் தருவதில் நான் என்றுமே உங்களிடத்தே கடமைப்பட்டுள்ளேன்.

அன்னையிற் சிறந்ததோர் கோயிலுமில்லை

என்பது ஒரு உரை ஆகும். அதாவது இறைவன் இருக்குமிடம் கோவில். இவ்வாறு மூவுலகை ஆளும் முதற்கடவுளுக்கு நிகராய் நான் மட்டுமின்றி உலக ஜீவராசிகள் அனைத்தும் நம்புகின்றன. இதனால் இறைவன் குடி கொள்ளும் கோவிலை விட அன்னையை பெரிதாக மதிக்கிறது இவ்வையகம். அதனுள்ளும் அன்னையின் அன்பானது மிகவும் ஒரு சிறந்த தூய நெறியாய், அன்பு மார்க்கமாய், சிறந்த சிற்பமாய், ஒளிச்சுடர் விரிக்கின்றது. அதாவது நாம் நம் புண்ணிய தேசத்தில் நம் சொந்தக்காலில் வாழ்வதற்கும், உலகில் ஒரு சிறந்த மானிடனாய் வாழ்வதற்கும், முதற்காரணமாய் விளங்கியமைவது இவ்வன்னையின் அன்பு எனும் தூய நெறியே ஆகும். அன்னையின் அன்பால் பல பயன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் படி முதலாவதாக அன்னையின் அன்பால் அவள் தன் உதிரத்தைச் சிந்தி பாலாக ஊட்டினாள். எமக்காக பல தடைகளையும் தாங்கி எம்முயிர் காத்தாள். அன்பாக சோறூட்டினாள். பண்பாக நீராட்டினாள். என்னுயிர் காக்கவே தன்னுயிரைப் பணயம் வைத்து உதிர்த்த அறங்கள் பல கடந்த ஓர் ஆத்மா உலகில் நிலைத்து வாழ வழிவகுத்தது இத்தகைய அன்னையின் அன்புத்தூய நெறியாகும்.

அடுத்த கண்ணோட்டத்தில் இறைவன் மீது பக்தன் கொண்ட அன்பை நோக்கினால், ஒரு பக்தனால் இறைவன் மீது புகட்டப்படுகின்ற தலை சிறந்த அன்பை பக்தி என்றே அழைத்தல் சிறந்தது. ஏனெனில் அன்பை செலுத்தும் அவன் இறைவனெனும் கற்சிற்ப உருவின் மீது பய உணர்வின் பால் பக்தனாகி அவ்விறைவனின் அடியானாகின்றான். இவ்வகையில் அவன் இறைவன் மீது தோத்திரம் பாடல், சுத்தம் செய்தல், பூசை அர்ச்சித்தல், பூமாலை கட்டல் போன்ற தன் சரியை எனும் தன் அன்பான நடத்தைகளால் அவன் இறைவன் திருப்பாதங்களை தொட்டு அன்பாக இறைவனிடத்தே அன்பின் அடியானாகிறான்.


சிவசக்தி 2002

இதன் படி இறைவன் மனமிரங்கி பக்தன் துயரை நீக்குகிறான். பல செல்வங்களையும் வாரி இறைக்கிறான். செல்வச் செழிப்பையும் மன உறுதியையும், என்றும் தன் அடியானாகவும் மாற்றியமைப்பதோடு இக்கலியுகத்தில் ஒரு புண்ணியப் பிறவியாய் மாற விடுகிறான். இத்தனை பயனையும் அப்பக்தன் அவ்விடத்தே எவ்வாறு பெற்றான்? எனக் கேள்வி எழுப்பும் போது இதற்கான பதில் "பக்தன் இறைவன் மீது கொண்ட உண்மை வடிவிலான அன்பு எனும் தூய நெறியே" என்பதைத் தவிர வேறு ஒன்றும் குறிப்பிடத்தக்கவை அல்ல.

அடுத்த கண்ணோட்டத்தில் பார்ப்போமானால் குருவின் மீது மாணவன் கொண்டிருக்கும் அன்பு காண்பிக்கப்படுகின்றது. மாணவன் குருவின் மீது கொண்டிருக்கும் அன்பானது மரியாதை என்று அழைக்கப்படுவதே சாத்தியமானது. நாம் இவ்வையகத்தில் சிறந்த கல்விமானாக சிறந்த கல்வியறிவு நிறைந்தவர்களாக வாழ எமது பெற்றோருக்கு அடுத்தபடியாக மதிக்கப்படத்தக்கவராக (ஆசிரியர்) குருவே விளங்குவார் என்பதில் நான் பெருமைப்படுகிறேன். ஏனெனில் உலகை அறிய, பல நுட்பசெய்திகளை அறிய, தெரியாத அனைத்தையும் அறிய நமக்கு வழி காட்டும் தெய்வமாக விளங்குபவர் குரு. எனவே எமக்கு கல்வி புகட்டும் குருவைத் தெய்வமாக மதிப்பதன் மூலமும் நாம் அவரின் அன்புக்கும், கல்விக்கும் அரவணைப்புக்கும் அடியானாகலாம். இறுதியில் அடிமையானாலும் பேசுவதற்கு ஒன்றுமில்லை.

இவ்வகையில் இவ்வாசிரியரின் கல்வியும், கருணையும், அன்பும் எவ்வாறு கிடைக்கப்பெற்றது? என வினவும் போது அதற்கு அன்பு எனும் தலைசிறந்த தூய நெறியே காரணமாகின்றது. இத்தனை சிறப்பு வாய்ந்த இவ்வன்பு இன்றைய நவீன உலகில் அற்றுப்போய் எங்கு பார்த்தாலும் போர், கொள்ளை, கொலை, களவு, சண்டை என வளர்ந்து வருகின்றது. இது எல்லாம் எதற்காக என வினாவும் போது எம் உலகம் தற்பொழுது விஞ்ஞான நுட்ப முறையில் மிக விருத்தியடைந்து தற்போது அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து பல அழிவுகளையும் அதாவது மனிதனால் ஆக்கப்படுகின்ற அழிவுகளையும் குறிப்பிடலாம். இந்நிலையில் உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் ஒரே பார்வையில் நோக்கும் போது போர் (சண்டை) நடைபெறாத ஊர், நாடு, உலகம் ஒன்றைக்கூட குறிப்பிட முடியாததை நினைத்து என் மனம் மட்டுமன்றி உலகில் வாழும் பல்லாயிரக்கணக்கான ஜீவராசிகளின் மனமும் ஏங்குகின்றது; வேதனைப்படுகின்றது. அது மட்டுமன்றி ஐந்தறிவு ஜீவராசிகளிடத்தே இருக்கும் ஒற்றுமைப்பாடு அதாவது அன்பு கூட இங்கு வாழும் ஆறறிவு படைத்த மானிடப் பிறவிகள் ஒருத்தனிடத்திலேனும் இல்லை எனும் போது மனம் வெட்கப்படுகின்றது.

சரி, இனி வரும் காலமாவது, அதாவது சந்ததியினராவது அன்பு எனும் தூய நெறியைக் கடைப் பிடித்து உலகில் தலை தூக்கி அன்பினால் ஒற்றுமையாக கூடி வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு எனது அன்பு பற்றிய உரையை முடித்துக்கொண்டு நிறைவு பெறுகிறேன்.

அன்பே வாழ்க!

**J. முகுந்தாஜ்**
*ஆண்டு 8R*

பாடசாலைக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# நிழல்கள்

யாழிசைத்து யாழ்பாடும் நகரமாம் யாழ்ப்பாணம். பல வயல்வெளிகளைக் கொண்டது. பொன் போன்ற மண்ணை உடைய நகரம். பல சோலைகளைக் கொண்டதும், அதற்கிடையில் நதிகளும், ஆறுகளும் ஆங்காங்கே பாய்ந்து கொண்டிருந்தன. இயற்கை வளம் அங்கே செழித்து காணப்பட்டது. கீரியும் பாம்பும் ஒரே கூட்டில் இருப்பது போன்று ஒற்றுமையாய் விளங்கியது.

அவ்வொற்றுமை பல நாள் நிடிக்கவில்லை போலும். யார் செய்த பாவமோ! அவ்வூரைப் போர் என்னும் பூமாலை சூடிக்கொண்டது. எங்கு பார்த்தாலும் வெடிச்சத்தங்களும், அலறல் ஓசைகளுமே எழும். பெற்ற வயிறுகள் பல இரத்த வெள்ளத்தில் மிதந்தன. இவ்வாறு நடக்கையில் அன்றொரு இரவுப்பொழுது சில வண்டுகள் ரீங்காரத்தை தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. ஒரே அமைதி.

"அந்தத் தீப்பந்தத்தை எடுத்துத் தா பாக்கியம்" என்று சோமசுந்தரம் தன் மனைவிக்கு கட்டளையிடுகின்றான். ஆமாம், சுந்தரம் ஒரு மீனவன். அவன் சில நாட்களாக மீன்பிடிக்கச் செல்லவில்லை. அவன் வலையில் கை வைத்தால் தான் அவன் குடும்பம் சோற்றில் கூட கை வைக்க முடியும். கணவனின் கட்டளைக் கிணங்க தீப்பந்தத்தை எடுத்துக்கொண்டு "ஏங்க ஆழ்கடல்ல மீன் பிடிக்க போகாதையுங்கோ அங்க காவல் போட்டிருக்கு" என்று பாக்கியம் சொன்னாள்.

சுந்தரமோ "ஆண்டவன் விட்ட வழி! விதியை யாரால் மாற்ற முடியும்?" என்று தீப்பந்தத்தை வாங்கிக் கொண்டு கடற்கரைக்குச் செல்கின்றான். அங்கு கயிற்றினால் கட்டப்பட்டிருந்த படகை அவிழ்த்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கின்றான்.

தூரத்தில் வெளிச்சம் தெரிந்ததைக் கண்ட சுந்தரம் அது காவற்படையினர் தான் எனப்புரிந்து கொண்டான். இறைவனே கதி என படகை வேறு திசையில் திருப்ப முயன்றான். திடீரென "டுமீல் டுமீல்" என சப்தமும் அலறல் சப்தமும் மட்டுமே கேட்டது. காலைப் பொழுது விடிந்தது. அன்று கடற்கரையில் வழக்கத்திற்கு மாறாக சனக்கூட்டம் பெருகி நின்றது. அங்கு ஓடி வந்த பாக்கியம் தன் கணவன் இறந்து கிடப்பதைப் பார்த்து அதிர்ந்தாள். "இனி நான் எதற்காக வாழ வேண்டும், நானும் உங்களுடன் சேர்ந்து வருகிறேன்." என்று கூறியவள், பின்பு அருகே இருக்கும் தன் மூன்று குழந்தைகளுக்குமாகவேனும் வாழ முடிவு செய்தாள்.


சிவசக்தி 2002

சுந்தரம் இறந்து மூன்று ஆண்டுகள் மின்னலெனப் பறந்தோடின. மூத்த மகன் ராஜா கட்டிளங் காளையாகவும், இளைய மகன் இளைஞனாகவும், மூன்றாவது மகன் சிறுவனாகவும் வளர்ந்து விட்டனர். இவர்களது தாயான பாக்கியம் மட்டுமே கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள். அன்றொரு நாள் வழமைக்கு மாறாக போர் உச்ச கட்டத்தை அடைந்தது. எங்கு பார்த்தாலும் 'ஷெல்' சத்தங்களும் இடியோசைகளும் தான்.

இளைய மகன் தாயை அழைத்து "அம்மா நாம் பாதுகாப்பான இடத்துக்கு செல்வோம்" என அழைத்தான். பெற்ற மனம் பற்றி எரிந்தது. ஏனெனில் அந்தப் பொழுதுதான் ராஜா கடைக்குச் சென்றிருந்தான். சிறிது நேரத்தில் ராஜா வருவதைக் கண்ட தாய் நிம்மதிப் பெரு மூச்சு விட்டாள். அவளது நிம்மதி சற்று நேரத்தில் அகன்று விட்டிருந்தது. காரணம் திடீரென வந்த 'ஷெல்' அவனுக்கு அருகே வந்து விழுந்தது. மகனை அணைக்கச் சென்ற தாயை புகை மண்டலம் வரவேற்றது. மகன் இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தான். இதைக்கண்ட பாக்கியம் "நீயும் என்னை விட்டுப் பிரிந்து விட்டாயே!" எனக் கதறி கண்ணீர் விட்டு சிறிது நேரத்தில் அவளும் கண்ணை மூடிவிட்டாள்.

மேயனை இழந்த ஆட்டு மந்தையைப் போல் இளைஞனான ராமுவும், குழந்தையான சோமுவும் வாழ்க்கையைக் கடத்தினார்கள். அன்றொரு நாள் சோமுவும், ராமுவும் செல்கையில் வழியில் இருந்த கடற்படையினர் இருவரையும் அழைத்துக் கேள்வி கேட்கையில், எதிர்த்துக் கூறிய ராமுவின் அண்ணனான சோமுவை அடித்துக் கொலை செய்து விட்டு அப்பாலகனின் பிஞ்சு நெஞ்சத்தை ஏமாற்றி விட்டனர்.

இவ்வாறு நிஜத்தை நிழல்கள் ஆக்கிவிட்டனர் மகா பாவிகள். இந்த நிழல்கள் மீண்டும் எப்போது நிஜமாகும். முடிவு உங்கள் கையில்.

**S. சிவசங்கரன்**
*ஆண்டு 8R*

பாடசாலைக்குள்ளான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற கவிதை

# சொல்லடி சிவசக்தி

அச்சமில்லை அச்சமில்லை என்று சொன்ன பாரதி
அச்சமென்னும் பேயை ஓட்டும் மன உறுதி காணடி!

வல்வினைகள் வந்த போதும் இறைவனையே வணங்கிடு!
வண்ண மலர் தூவி சக்தி தாயை நீயும் புகழ்ந்திடு!

வறுமையிலும் செம்மையாக வாழ நினைக்கும் தமிழரின்
வடிவழகுத் தாயகத்தை மீட்கச் சக்தியை வணங்கிடு!

ஈழத்தமிழர் வேதனையை கேட்கக் கொள்ளை ஆசையா?
இரங்கி நீயும் வணங்கிடு! மனமுருகிப் பாடிடு!

போர்க்களமெனும் குளத்தில் வீழ்ந்த வீரத்தமிழ் உயிர்களின்
ஆசையை நிறைவேற்றிடு! தாய்மண் வெற்றியைக் காட்டிடு!

துயரங்கள் வந்ததாலே தான் தமிழ் மண்ணே சிவப்பு!
சோக மழை பெய்யுதம்மா! சக்தி நீயே பொறுப்பு!

களத்தில் இறங்கிப் போராடி களைத்துப்போன தமிழரின்
களைப்பினை கண்டு நீயும் கண்களை சற்று திறந்திடு!

கூடிப்புகழ் பாடுவோம்! கோலமாய் உனை நாடுவோம்!
கலகலக்கும் நாடு மீட்கக் கைதனை தொடுத்திடு!

சரிந்து போன தமிழ்மண்ணதை நிமிர்த்த மனம் உருகிடு!
சர்வமும் உனை வணங்கிட உனது எண்ணத்தை சொல்லடி சிவசக்தி!!!!!

**M. பிரணவன்**
ஆண்டு 7Q

With the Best Compliments of

# Susila

## Gold House

22ct. Fine Jewellery

சுசிலா ගෝල්ඩ් හවුස් — சුසිලා

கோல்ட் ஹவுஸ் ගෝල්ඩ් හවුස්

177/9, Inside Sea Street, Colombo 11
Tel: 439090

With Best Compliments

from

# New Kala

## CREATIONS

*Dealers in Greeting Cards & Birthday Cards*

No. 192, Sea Street
Colombo 11
☎ 332465

 சிவசக்தி 2002

பாடசாலைக்குள்ளான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# காலத்தால் அழியாத இந்துமதம்

சங்க மருவிய காலந்தொட்டு இந்துமதம் செழிப்புற்று இருந்ததாக தொல்பொருட்சான்றுகள், அகழ்வாராய்வுகள், வரலாற்றுக் குறிப்புக்கள், மற்றும் பிற நூல்கள் சான்று பகருகின்றன. வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டும் இந்து மதம் நிலவியமைக்கு மொஹெஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்கள் சான்று பகருகின்றன. அங்கிருந்து பெறப்பட்ட கூம்புவடிவப்பொருட்கள், யோகி வடிவ உருவம் என்பன சிவவழிபாட்டுக்குச் சான்று பகருகின்றன. அந்நாகரிகங்களில் சக்தி வழிபாடு, மர வழிபாடு, நந்தி வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு ஆகியன நிலவியமைக்கும் சான்று உண்டு. எனவே இதிலிருந்து இந்துமதத்திற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை என்பதை நாம் உணரமுடிகிறது.

சங்க காலங்களிலே நில அமைப்பிற்கேற்றவாறு வழிபாடு காணப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, ஆகிய ஐவகை நிலங்களிற்கும் முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்களின் வழிபாடு மேலோங்கிக் காணப்பட்டது. பின்னர் சைவத்தைத் தளைக்க வைக்க நாயன்மார்கள் அரும்பாடுப்பட்டார்கள். ஆரம்பத்திலே திருமுறைகளை இயற்றுவதற்கு காரைக்காலம்மையார் வழி காட்டினார். அதன் பின்னர் வைணவ ஆழ்வார்களின் பெருமுயற்சியால் பல்லவ மன்னர் காலத்தில் வைணவ மதம் ஓங்கிக் காணப்பட்டது. என்றாலும் பின்னர் சமண சமயம் புத்துணர்ச்சி பெறத் தொடங்கியது. இதனால் சைவமும் தமிழும், வைணவமும் வீழ்ச்சி பெற்றது. கிட்டத்தட்ட கி. பி. 7ம் நூற்றண்டில் சமயகுரவர்களின் தோற்றமே சைவத்தை எழுச்சி பெறச் செய்தது. சம்பந்தர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் சமணர்களை தருக்கங்கள், அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றில் வென்றும் பல அற்புதங்களை நிகழ்த்தியும் சைவ சமய மகிமையை நிலை பெறச் செய்தனர். நாயன்மார்கள் நாற்குரவர்கள் இயற்றிய திருமுறைகளே இன்றும் சைவத்தை நிலைநாட்டுவதில் பெரும் பங்காற்றுகிறது.

இதன் பின்னர் தென்னாட்டில் வாழ்ந்த சித்தர்களும் ஞானிகளும் தோன்றி பலவிந்தைகளை ஆற்றி சைவத்திற்குப் பெரும்பணி புரிந்தனர். இவர்களுள் திருமூலர், பட்டினத்தடிகள் அகப்பேய்ச்சித்தர், பாம்பாட்டிச்சித்தர், குதம்பைச்சித்தர், சிவபாக்கியர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். அக்காலத்தில் சோழமன்னர்கள், பல்லவ மன்னர்கள் கோயில்களைக் கட்டுவித்தும் திரு உற்சவங்களை நிகழ்த்தியும் சைவத்தொண்டாற்றினர்.


சிவசக்தி 2002

தென்னாட்டிலிருந்து சோழ, சேர, பாண்டிய படையெடுப்புக்களால் ஈழத்திலும் இந்துமதம் மேலோங்கத் தொடங்கியது என்பதை மறுக்கமுடியாது. அக்காலத்தில் சிங்கள மன்னர்களினுள் சிலரும் இந்துமதத்தை ஆதரித்தார்கள். நாயன்மார்கள் கூட இலங்கையின் கேதீச்சரம், கோணேஸ்வரம் மீது பாடல்கள் பாடியுள்ளார்கள். சோழ மன்னர்கள் பல கோயில்களை இலங்கையிலே கட்டி திருப்பணி புரிந்தமைக்கு ஆதாரங்களுண்டு. இதன் பின்னர் இலங்கையில் ஐரோப்பியர் வருகை ஏற்பட்டது. போர்த்துக்கேயர் மதமாற்றங்களினைச் செய்விப்பதில் மும்முரமாக ஈடுப்பட்டனர். மக்கள் திருநீறு பூச அஞ்சினர். வாழையிலையில் உண்ண அஞ்சினர். வைரவர் சூலத்தையே மறைவாக வைத்து வழிபட்டனர். போர்த்துக்கேயர் கோயில்களை இடித்து அழித்தார்கள். ஒல்லாந்தரும் இதையே செய்தார்கள். பின் வந்த ஆங்கிலேயர் மும்முரமாக மதமாற்றங்களில் ஈடுப்பட்டனர்.

இக்காலத்தில் சைவத்தை தழைக்க வைக்க நல்லைநகர் ஆறுமுகநாவலர் தோன்றினார். கோயில்களில் புராண படனம் ஓதும் முறையை வளர்த்தார். அக்காலத்தில் சைவ நூல்களைப் படிப்பதில் மக்கள் சிரமப்பட்டனர். காரணம் அவை கடினமான செய்யுள் நடைகளில் காணப்பட்டமை ஆகும். நாவலர் அவற்றை இலகு உரைநடையில் எழுதினார். இவற்றுக்கு உதாரணமாக பாலபாடங்கள், சைவபோதங்கள், வினாவிடைகள் மற்றும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிற்கு அவர் எழுதிய உரைகளையும் குறிப்பிடலாம். எனினும் ஆலயங்கள் எல்லாம் இடிந்தழிந்தே கிடந்தன. இந்நிலைமை சைவத்திற்கேற்படும் என்பதை குளக்கோட்டன் கல்வெட்டு முன்னமே விளக்கி உள்ளது.

"முன்னே குளக்கோட்டன் மூட்டுதிருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே மன்னவ
பின் பொண்ணாத தனை – தினம்
எண்ணாரே பின்னரசர்கள்"

ஆனாலும் நாவலர் இடிந்தழிந்த கோயில்களை புனரமைக்க பெரும் பாடுபட்டார். "ஈழநாட்டில் சைவம் ஒழிந்து விட்டதா?" என குரல் எழுப்பினார். அவரின் வேண்டல் வீண்போகவில்லை. கோயில்கள் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டன. ஆனால் அக்காலத்தில் பெரும்பாலானோர் தங்கள் பிள்ளைகளை மிஷனறிப் பாடசாலைகளுக்கே அனுப்பினார்கள். இதனால் சைவத்தையும் தமிழையும் போதிக்க முறையான சைவப்பாடசாலை இல்லாமையை நாவலர் உணர்ந்தார். சைவப்பிரகாச வித்தியாசாலை, போன்ற பல்வேறு பாடசாலைகளை நிறுவினார். இவரைத் தொடர்ந்து சேர் பொன் இராமநாதன் அவர்களும் பல பாடசாலைகளை நிறுவினார். எனவே பாடசாலைகளில் இந்துமதம் ஒரு கட்டாயப் பாடமாக போதிக்கப்பட்டு வரத் தொடங்கியது. 18ம், 19ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் வாழ்ந்த கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமி, பெரியானைக்குட்டி, சித்தானைக்குட்டி, யோகர்சுவாமிகள் போன்ற சித்தர்களின் பணியும் மகத்தானது.


சிவசக்தி 2002

இனி தற்காலத்தில் இந்து மதத்தின் நிலைமையை நாம் எடுத்து நோக்குதல் சாலச் சிறந்தது. ஈழத்திலும் தென்னாட்டிலும், ஆலயங்களும், ஆலய வழிபாடும் தற்காலத்திலும் மேலோங்கிக் காணப்படுகிறது. என்றாலும் அக்காலத்தில் இருந்த அளவிற்கு சமய நாட்டம் மக்களிடம் காண்பதரிது. ஏனைய மோகங்களிலும், களியாட்டங்களிலும், மக்களின் இறைவனிடம் இருந்த ஈடுபாடு விலகிச் செல்வது வருந்தத் தக்கதே. இருந்தாலும் குறிப்பிட்ட சில இடங்களில் சைவம் வளர்ந்து வருவது புரிப்பானதே. உலகில் தமிழ்நாடு, நேபாளம், ஈழம் என்பன இந்துமதம் செழிப்புற்று இருக்கும் நாடுகளாகும் என்பதும் மகிழத்தக்கதே.

எத்தனை சோதனைகளை, வேதனைகளைக் கடந்தும் இந்துமதம் இன்றும் நிலைத்திருக்கிறது. இதன் மூலம் இந்துமத சிறப்பை நாம் உணரமுடியும். சாலச்சிறந்த கோட்பாடுகளாலும், காலத்துக்கு காலம் இறை அடியார்களின் தோற்றத்தாலும் இந்து மதம் அழியாமல் உள்ளது. இனியும் அடியார்கள் தோன்றுவார்கள். இந்துமதம் மேலேங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே காலத்தால் அழியாத இந்து மதத்தை நிலைபெறச் செய்ய அரும்பாடுபட வேண்டியது சைவர்களாகிய எம்முடைய தலையாய கடமையாகும்.

" நல்லை நகர் நாவலர் உரைப்படி
இல்லை யினி வேறோர் சிந்தனை
ஒல்லையில் சைவம் தழைக்க
தில்லைநாதன் பாதம் தொழுவோமே"

P. பிரணவன்
*ஆண்டு 11Q*

With the Best Compliments

of

# ASIANS TRADERS

Wholesale Dealers in Textile & Readymade Garments

65A, Keyzer Street, Colombo 11
Sri Lanka. Tel: 341559

*With Best Compliments*

*from*

# S. Sendooran

*An Old Royalist*


சிவசக்தி 2002

பாடசாலைகளுக்குள்ளான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# சிதைவுகள்

வனப்புமிக்க அந்த நல்லூர் நகரம் இன்று அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது. ஒரு காலத்தில் பக்த கோடிகளால் நிரம்பி வழிந்த நல்லூர் கந்தசுவாமிக் கோயில் இன்று அகதிகள் தஞ்சமடைந்திருக்கும் அகதிமுகாமாகக் காட்சியளிக்கிறது. எண்ணற்ற மக்கள் தங்கள் சோகச் சுமைகளுடன் காட்சியளித்தனர். கணவனை இழந்த மனைவி, பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் அப்பப்பா! எத்தனை சோகங்கள் இவர்களில். பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. நல்லூர் கோயிலே அகதிகள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. அத்தனை சோகத் துயரங்களுக்கும் மத்தியில் சங்கீதா தனது எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்தவளாய் அமர்ந்திருக்கிறாள். ஆம்! அவள் தான் தனது பெற்றோர், சகோதரர், சுற்றத்தவர் யாவரையும் இழந்த அபலையாக அந்த மரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறாள். வானத்தைப் பார்த்த வண்ணம் ஏதோ நினைத்தவளாய் தனது கடந்த காலத்தை நினைத்தவளாய் சிரிக்கிறாள். ஐயஹோ! சோகத்திலும் ஒரு சுகமோ.

அவளது குடும்பம் ஓர் அழகிய சிறிய கருக்குடும்பம். சிவக்குமார்; ஆம்! அவர்தான் சங்கீதாவின் தந்தையார். ஒரு கடின உழைப்பாளி. பாலைவனங்களையும் உழுது சோலைவனமாக்கும் திறனுடைய ஒரு விவசாயி. பார்வதி சங்கீதாவின் தாயார். சிறந்த இல்லத்தரசி. கணவனின் குறிப்பறிந்து நடக்கும் பெண்மணி. கணவன் கொடுக்கும் சிறு பணத்தையும் சேமித்து வாழ்க்கையை இனிதே நடத்தி வந்தாள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள். தம்பி கார்த்திக். எட்டு வயதுடைய சிறுவன். தங்கை சாவித்திரி பதினேழு வயதுடைய ஒரு பெண். சங்கீதா குடும்பத்தின் மூத்த பிள்ளை அதற்கேற்றாற் போல் பொறுப்புடையவள். தனது உயர்தர பரீட்சையை எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருக்கிறாள். இவ்வாறு இவர்களுடைய வாழ்க்கை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகக் கழிகிறது.

இவ்வாறிருக்கையில் ஒரு புயலாக போர் தொடங்குகிறது. பல வீடுகள், கட்டிடங்கள் போருக்கு இரையாகின்றன. சோலைவனங்கள் யாவும் பாலைவனங்களாக காட்சியளிக்கின்றன. பலர் தமது உயிரை இழந்து பிணமாய் ஆங்காங்கே விழுந்து கிடக்கின்றனர். நாலாபுறமும் போரானது உக்கிரமாய் நடந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஒரே துப்பாக்கி ரவைகளும், போர் விமானங்களும், யுத்த தாங்கிகளுமாக காட்சியளித்தன. இத்தகைய சூழலில் சிவக்குமார் தனது விவசாயத்தை தொடரவும் முடியாமல், கைவிடவும் முடியாமல் தவித்துக்

கொண்டிருந்தான். வெளியே சென்றால் துப்பாக்கி ரவைகள் உயிரை வாங்கிவிடும் என்ற பயம். வேலை செய்யாது உள்ளே இருந்தால் பசியின் கொடுமை உயிரை வாங்கிவிடும் என்ற பயம்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சிவகுமார் கதிரையில் அமர்ந்தபடி தனது சிந்தனைக்கு எடை போட்டுக் கொண்டிருந்தான். அப்போது கார்த்திக் "அப்பா பசிக்குது, இன்று முழுவதும் அம்மா சாப்பிட ஒன்றும் தாறாயில்லை, ஏதாவது சாப்பிடத் தாருங்கள்" என்று தனது மழலைக் குரலில் அழுதவண்ணம் ஒரே நச்சரித்தான். சங்கீதாவும், சாவித்திரியும் ஒரு ஓரத்தில் அமர்ந்து யோசித்த வண்ணம் இருந்தனர். இந்தக் காட்சியை காணச் சகிக்காது சிவக்குமார் எழுந்து வயலுக்கு செல்கிறார். தனது வயலில் விளைந்த சிறு காய்கறியைப் பறித்துக்கொண்டு வரும்வழியில் கார்த்திகேசுவின் கடையில் சிறிதளவு அரிசியையும் வாங்கிக்கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார். அன்றைய பொழுது ஒருவாறு கழிகிறது.

அடுத்த நாள் பொழுதும் மலர்கிறது. காலையிலேயே சிவக்குமார் தனது துண்டை போட்டுக் கொண்டு தனது மனைவியிடம் "போட்டு வாறன்" என்று கூறி வயலுக்கு புறப்படுகிறான். தனது வேலைகளை முடித்து மதியம் 3 மணியளவில் வீட்டுக்கு அன்றைய விளைச்சலை ஒரு சாக்கு மூட்டையில் எடுத்துக்கொண்டு விரைவாக நடக்கிறான். திடீரென ஒரு சத்தம் கேட்கிறது. ஆம்! நிலத்தில் புதைத்து வைத்த கண்ணி வெடியில் இவன் தனது காலை வைத்ததால் தனது கால் இரண்டையும் இழந்தவனாய் நிலத்தில் கிடக்கிறான். யுத்தத்தின் கோரத்தால் ஒருவரையும் அவ்விடத்தில் காணமுடியவில்லை. இவனோ தனது முயற்சியைக் கைவிடாதவனாய் "ஐயோ! யாராவது உதவிக்கு வாங்களேன்" என்று கதறுகிறான். ஒரு பிரயோசனமும் இல்லை. இவனது குரல் அடங்குகிறது. இவனது உடல் மண்ணுடன் சங்கமமாகிறது. காலற்ற நடைப்பிணமாய் ஒற்றையடிப் பாதையில் விழுந்து கிடக்கிறான்.

நீண்ட நேரமாகக் கணவனை காணாத பார்வதிக்கு பதற்றம் அதிகரித்தது. தனது மகள் சாவித்திரியை தந்தையை பார்த்து வருமாறு அனுப்பினாள். அவளும் தனது தந்தையை தேடிப் புறப்பட்டவளாய் விரைகிறாள். போரின் உக்கிரம் அதிகரிக்க "நாளைக்குள்ள வீட்டை விட்டுட்டு எங்கேயாவது வெளியூருக்கு போயிடுங்க" என்ற அந்த ஆமியின் கட்டளை இவளை கதிகலங்க வைத்தது. நீண்ட நேரமாய் வீடு திரும்பாத கணவன் ஒரு பக்கம், அப்பாவை தேடச் சென்ற சாவித்திரி ஒரு பக்கம். எல்லோரும் வீடுகளை விட்டு புறப்பட்டுச் சென்றனர். உடனே பார்வதி, மகன் கார்த்திக்கைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டாள். சங்கீதாவிடம் வீட்டில் நின்று "அப்பாவையும் தங்கச்சியையும் கூட்டிட்டு வா" என்று கூறிவிட்டு புறப்பட்டனர்.

மறுமுனையில் சாவித்திரி அப்பாவைத் தேடி விரைவாக சென்றவள் காலில் ஏதோ தட்டுப்பட்டது அதைப் பார்த்த அவளுக்கு ஒரே அதிர்ச்சி. ஆம்! அவளது தந்தை இரண்டு கால்களை இழந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவள் தனது தந்தையின் உடலை மடியில் கிடத்தி கதறி அழுதாள். அப்போது அவ்வழியால் வந்த கணபதிப்பிள்ளை எனும் பெரியவர் "இங்கு பார் பிள்ளை நீ இங்கே அழுது கொண்டிருந்தால் நீயும் சாகவேண்டியது தான்" என்று கூறி அவளை இழுத்துச் சென்றார். செல்லும் வழியில் எங்கிருந்தோ வந்த துப்பாக்கி சன்னம் அவள் மார்பை துளைத்ததால் அவள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து அங்கேயே இறந்தாள்.

நீண்ட நேரம் அவர்களை பார்த்திருந்த சங்கீதா இவர்கள் வராததால் போரின் கொடுமை தாங்காது அவள் வீட்டை விட்டு வேகமாக புறப்பட்டாள்.

பார்வதியும் கார்த்திக்கும் யாருமற்ற காட்டுவழியாக வவுனியாவுக்கு செல்ல விரைந்தனர். பார்வதிக்கு தனது கணவனதும், மகள்களதும் நினைவாய் இருந்தது. அப்போது அவ்வழியால் வந்த நேவி அதிகாரி ஒருவன் சிங்களத்தில் "ஓயா கௌத? எய் மே பெத்தே என்னே" என்று கேட்க இவர்கள் சிங்களம் புரியாது விழித்தனர். ஏற்கனவே தமிழர்கள் மீது கோபமாய் இருந்த அவனுக்கு இது கேட்கவும் வேண்டுமா? இருவரும் தீவிரவாதிகள் என்று பட்டம் சூட்டி அந்த இடத்திலேயே ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொன்றான். பின்னர் அவன் ஆற்றிலே அவர்களை தூக்கி எறிந்து விட்டான்.

அத்தனை சோகங்களும் அரங்கேறி முடிந்துவிட்டன. சங்கீதா இன்னும் அந்த மர நிழலிலே தனது பெற்றோரின் வரவை எதிர்பார்த்தவளாய் இருக்கிறாள். இவளது இந்த முயற்சி எங்கு சென்று முடியப் போகிறதோ.

* இத்தனை சோகங்களின் மத்தியிலும் அவளது எதிர்பார்ப்பு இன்னும் அழியாது இருக்கின்றது. அவள் தனது பெற்றோரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள்
* இவளது எண்ணச் சிதைவுகள் நிறைவேறுமா?
* சங்கீதா போன்று அழியாத எண்ணச் சிதைவுகளுடன் நம்மில் எத்தனை பேர்!
* இவர்களுக்காக நம்மால் என்ன செய்ய முடியும். கண்ணீர் விடத்தான் முடியும்.
* தற்போது இவளுக்கு ஆறுதலும் இந்த.............

**எண்ணச் சிதைவுகள்!!!**

**N. பிரசன்னா**
*ஆண்டு 11Q*

With Best Compliments from

# G. Harinath

**Year 1J**

With the Best Compliments

of

# GAYATTHRIE TEX

*Wholesale Dealers in Readymade Garments*
*Authorised Distributors for © DISNEY GARMENTS*
*& WINDUS BRAND KNITWEAR*

Lucky Paradise Super Market
53/B5, Keyzer Street, Colombo 11

Tel: 325826, 470232
Fax: 543395



சிவசக்தி 2002

பாடசாலைக்குள்ளான போட்டியில்
மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

# தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?

எங்கள் வாழ்க்கையெனும் புத்தகத்தில்
வரலாறானவைகள் போக.......... வெறும்..........
வாக்கியங்களாக இருந்தவை இவைதான்....!

அன்புதான் இன்ப ஊற்றாய்.......
ஆராத காதல் கொண்டு......
நன்றி மறவாமல் நித்தம் வளர்ந்து வந்தோம்

மலரைக் காணும் பொழுதெல்லாம்
வெறுப்பு வந்தது - உந்தன்
வதனம் காணும் பொழுதெல்லாம் - புன்
சிரிப்பு வந்தது!

நான் கண்ட ஓவியங்களுள் நீ
உயிரோவியம்..........!
நாம் கடந்த பாதைகளோ
பெருங்காவியம்........!

பாலூட்டி வளர்த்த அன்னை,
பார்த்திருக்க விண் சென்றாள்!
பாராட்டி வளர்த்த தந்தை,
பாவியாரால் உயிரிழந்தார்!

போராட்ட களத்தினிலே - ரோஜாப்
பூவாக நாமிருந்தோம்! - இன்று,
நீரோட்ட மானதடி - கண்ணீர்
நித்தம் விட்ட எம் பாசம்!

மங்கையெனப் பலரிருந்தார் - பத்தரை
மாற்றுப் பொன் மனத்தோடு!
தங்கையென நீதானே - எனக்கு
துணையாக இருந்தாயே!

புல்முளைத்த இடமெல்லாம்
முள் பரந்து நிலைத்த பின்னும் - எம்
உள் மனத்தில் இருந்து எழும்
பாசமலர் வாடவில்லை!

தண்ணீர் விட்டா வளர்த்தோம்
தானாக வாடுவதற்கு? - எங்கள்
இரத்தத்தையே சொரிந்தோம் - இது
இதிகாசம் ஆவதற்கு!

தாயிறந்து போன பின்னும்
தந்தை விண் சென்ற பின்னும்
நீயிறந்து போக வில்லை!
நினைவுகளில் வாழுகிறாய்!

கருவறையில் ஒன்றாகி,
களத்தினிலே வந்தபின்னர்,
கல்லறையை இரண்டாக்கி, என்
கண்ணை விட்டு ஏன் சென்றாய்?

வாழ்க்கையெனும் தோட்டத்தில்,
பாசமெனும் பயிர் நட்டு
இரத்தமதை அதில் விட்ட - எம்
பாச மலர் வாடாது!

**A. ஹரிஷன்**
*ஆண்டு 11Q*


சிவசக்தி 2002

With Best Compliments

from

# Ganan & Kirithikka

*With the Best Compliments of*

**PP Webbing**

## LANKA LEATHER PRODUCT (PVT) LTD.

*Specially suitable for School Bags, Leather Bags, Slippers & Sandles, Water Bottles, Army Belts & Normal Belts.*

Special orders and special designs will be undertaken in the sizes of ½ an inch to 3 inches (10mm to 75mm) to manufacture and supply within short period at special attractive and competitive prices

Pioneers in Webbing

196, Sea Street (Near Kovil), Colombo 11
Tel: 074-714098, 433762
Open on Saturdays and Sundays too



சிவசக்தி 2002

With the Best Compliments of

❀

❀ ❀

❀ ❀ ❀

# THREAD HOUSE

*Importers and Wholesale Dealers in Garments Accessories*

No. 238, 2nd Cross Street
Colombo 11
Sri Lanka

Telephone: 445108
Fax: 94-1-47237, 507043
E-mail: thread@celltelnet.lk



With Best Compliments

from

# K. BALASUBRAMANIAM

98, Wolfendhal Street, Colombo 13
Telephone: 436024

# றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவுகள்

## அதி கீழ்ப்பிரிவு

### மனனப் போட்டி

| | |
|---|---|
| 1. S. தர்ஷனன் | பரி தோமாவின் கனிஷ்ட பாடசாலை |
| 2. S. ஸ்ரீனிவாசினி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 3. T. செந்தூரன் | பரி தோமாவின் கனிஷ்ட பாடசாலை |

## கீழ்ப்பிரிவு

### கட்டுரை

| | |
|---|---|
| 1. G. மாதங்கி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. R. மதுசூதனன் | பரி தோமாவின் கல்லூரி, கல்கிசை |
| 3. T. சர்மிளா | சாந்த கிளேயர் மகளிர் கல்லூரி |

### கவிதை

| | |
|---|---|
| 1. V. அபிராமி | திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 2. F. ரிவ்ஷியா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 3. D. திவ்யா | இந்து மகளிர் கல்லூரி |

### சிறுகதை

| | |
|---|---|
| 1. S. அருண்யா பிரஷாந்தினி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. W. ஐஸ்வர்யா | திருக்குடும்பக் கன்னியர் மடம் |
| 3. S. சுரஜா | இந்து மகளிர் கல்லூரி |

### பேச்சு

| | |
|---|---|
| 1. G. லோசினி | திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 2. T. ஜனனி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 3. R. துர்காஞ்சனி | வுல்ப்பென்டல் மகளிர் வித்தியாலயம் |
| K. ரமணன் | புனித அந்தோனியர் கல்லூரி, வத்தளை |
| A. விதூஷன் | புனித பேதுறு கல்லூரி |



சிவசக்தி 2002

பண்ணிசை

| | |
|---|---|
| 1. S. சுஜித் | பரி தோமாவின் கனிஷ்ட பாடசாலை |
| 2. P. அபிதா | திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 3. S. நிஷா | திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 4. S. சரண்யா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |

## மத்திய பிரிவு

கட்டுரை

| | |
|---|---|
| 1. K. சாமளி | திருக்குடும்ப கன்னியர் மடம் |
| 2. S. ஸ்ரீபிரகாஷ் | பம்பலபிட்டி இந்துக் கல்லூரி |
| 3. A. ஜேருசன் | இரத்மலானை இந்துக் கல்லூரி |

கவிதை

| | |
|---|---|
| 1. S. சண்முகப்பிரியா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. S. ருக்ஷா | இந்து மகளிர் கல்லூரி |
| 3. S. சஷிகா | திருக்குடும்பக் கன்னியர் மடம் |

சிறுகதை

| | |
|---|---|
| 1. V. மயூரி | இந்து மகளிர் கல்லூரி |
| 2. S. அஜந்தினி | சாந்தா கிளேயர் மகளிர் வித்தியாலயம் |
| 3. B. நிஷாந்தி | விவேகானந்தா கல்லூரி |
| 4. V. யசோதா | வுல்ப்பெண்டல் மகளிர் வித்தியாலயம் |

பேச்சு

| | |
|---|---|
| 1. K. அனுஷா | விவேகானந்தா கல்லூரி |
| 2. S. கஜாகினி | முகத்துவாரம் இந்துக் கல்லூரி |
| 3. K. ராதாதுளக்ஷி | இந்து மகளிர் கல்லூரி |
| 4. R. தஷ்டகா | பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி |

பண்ணிசை

| | |
|---|---|
| 1. S. சிந்துஜா | சாந்தா கிளேயர் மகளிர் வித்தியாலயம் |
| 2. S. மைத்திரை | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 3. M. நிரஞ்சனா | முகத்துவாரம் இந்துக் கல்லூரி |


சிவசக்தி 2002

## மேற்பிரிவு

கட்டுரை

| | |
|---|---|
| 1. B. ஷாலினி | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. S. திலகா | இந்து மகளிர் கல்லூரி |
| 3. P. பிரபாகரன் | விவேகானந்தா கல்லூரி |
| 4. T. ஜானகி | றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் |

கவிதை

| | |
|---|---|
| 1. J. நிரோஷினி | இந்து மகளிர் கல்லூரி |
| 2. R. ஜெயதீபா | சாந்த கிளேயர் மகளிர் கல்லூரி |
| 3. S. திவ்யா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |

சிறுகதை

| | |
|---|---|
| 1. S. சுபாகினி | இந்து மகளிர் கல்லூரி |
| 2. S. நீரஜா | சாந்த கிளேயர் மகளிர் கல்லூரி |
| 3. G. ஜெகவித்யா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |

பேச்சு

| | |
|---|---|
| 1. S. கிருபானந்த் | கொழும்பு இந்துக் கல்லூரி |
| 2. K. விஜயசாந்தி | கொழும்பு விவேகானந்தா கல்லூரி |
| 3. U. N. தனூஜா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |

பண்ணிசை

| | |
|---|---|
| 1. K. பவித்திரா | இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி |
| 2. M. அகல்யா | சாந்த கிளேயர் மகளிர் கல்லூரி |
| 3. S. கஸ்தூரி | வுல்ப்பெண்டல் மகளிர் வித்தியாலயம் |

சமய பணி சிறக்க, மாணவர் திறன் வளர்க்க, நாம் நடாத்திய "சமய திறன் காண்" போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் அவர் தம் பாடசாலையின் பொறுப்பாசிரியர்களுக்கும் இந்து மாணவர் மன்றம் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இது போல் என்றும் உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.


சிவசக்தி 2002

**போட்டிகளில் வெற்றியீட்டிய அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்**

செயற்குழு 2002

## சமய அறிவு வினாவிடைப்போட்டி

1ம் இடம்

*பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி*

P. சுகந்தன் S. வசந்த் K. திவாகரன் R. ருக்ஷான்

2ம் இடம்

*புனித பேதுறு கல்லூரி*

B. கேசன் B. அரவிந்தன் C.T. முரளிதரன் M. பிரதாப்

*சிறந்த போட்டியாளர்*

C. T. முரளிதாசன்

புனித பேதுறு கல்லூரி

*தொடரின் சிறந்த போட்டியாளர்*

R. ருக்ஷான்

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

*பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்று*

அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்
நினைவுக் கேடயத்தைக் கைப்பற்றும் பாடசாலை

**இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி**

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# சைவம் கூறும் அன்பு வழிகள்

"அன்பே சிவம்" இதுவே சைவம் கூறும் வேதாந்த வாக்காகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவசமயிகள் சைவம் கூறும் அன்பு வழிகளை நிச்சயம் பேணவேண்டும். உலகம் அன்பினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அன்பு பலபெயர்களில், பல ரூபங்களில் சித்தரிக்கப்படுகின்றது. இறைவன் மீது நாம் வைக்கும் அன்பு, பக்தி என்றும் இறைவன் எம்மீது செலுத்தும் அன்பு கருணை என்றும் கூறப்படுகின்றது. உயிர்கள் மீது நாம் செலுத்தும் அன்பு, ஜீவகாருண்யம் என்றழைக்கப்படுகின்றது. "தன்னுயிர் போல மண்ணுயிரையும் நேசி" என்பது சைவம் கூறும் அன்பு வழிகளில் ஒன்றாகும். வாயில்லாப் பிராணிகளை வதைக்கக்கூடாது என்பது எமது சைவம் கூறும் அன்பு நெறியில் ஜீவகாருண்யத்தின் பாற்படும்.

மனுநீதிச்சோழன் தன் மகன் கன்றுக்குட்டியைக் கொன்றதற்காக தன்மகனையே தேரால் நெரித்துக் கொல்ல ஆணையிட்டான் என்பது எம் அன்னை, எமக்கு நிலாச் சோறு ஊட்டிய காலங்களில் கூறிய கதையாகும். "நண்டின் காலை ஒடிக்காதே நாயைக் கல்லால் அடிக்காதே" என்பது நாம் இளமையில் கற்ற ஒரு பாடலாகும். ஜீவகாருண்யம் காரணமாகவே சைவநெறி மாமிசம் புசித்தல் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகும் எனக் கூறியுள்ளது. ஏழை எளியவர்களுக்கு உதவுதல் சைவம் கூறும் இன்னொரு அன்பு நெறியாகும். தெருவிலும், கோயில் வாயில்களிலும் பிச்சை கேட்பவர்களுக்கு பிச்சை அளித்தலும், எளிய நிலையில் உள்ளவர்களை வாழவைத்தலும், அதாவது தொழில் உதவிகள் செய்தல் ஏழை எளியவர்களுக்கு உதவுதல் என்றும் கருணை வழிப்படும். சிவபெருமானுக்குத் தொண்டு செய்யும் சிவனடியார்களுக்குதவுதல் மற்றுமொரு அன்பு வழியாகும். பொருளெல்லாம் இழந்து நின்ற இளையான்குடிமாற நாயனார் நட்டநடுநிசியில் கொட்டும் மழையில் சிவனடியாராக வந்த இறைவனுக்கு உணவளித்த கதையும் நாம் இளமையில் கற்ற கதையாகும். சிவகாரியங்களான கோயில் கட்டுவதற்கு நிதி திரட்டவருபவர்களுக்கு முடிந்தளவு நிதிகொடுத்துதவுதல் கோயில்களில் சிவனடியார்களுடன் சேர்ந்து மாலைகட்டல், கோயில்தனைச் சுத்தமாக்கல், போன்ற சரியை நெறிகளுக்கு உதவுதல் இவ்வன்பு வழியினைச் சாரும். திருமூலர் திருமந்திரத்தில் பொருள் கொடுக்க முடியாவிட்டாலும் இன்சொல் கூறி உபசரித்தல் ஓர் அன்பு வழி என்று கூறியுள்ளார். பிறரை வருத்தாமல் கருமம் ஆற்றுதலும் ஓர் அன்பு நெறியாகும். சைவம் கூறும் அன்பு நெறிகள் எல்லோராலும் கடைப்பிடிக்கக் கூடியவையே. பிறருக்கு உதவுதல், பிறர் உயிரையும் தன்னுயிர் போல நேசித்தல்,


சிவசக்தி 2002

பஞ்சமாபாதகங்களைச் செய்யாதிருத்தல் எல்லோரும் செய்யக் கூடியவையே என்று சைவம் கூறுகின்றது. பாரிவள்ளல், மனுநீதி கண்ட சோழன், இளையான் குடிமாற நாயானார் போன்றவர்களுடன் காரைக்கால் அம்மையாரும் சைவம் கூறும் அன்பு வழிகளில் ஒன்றைக் கடைப்பிடித்தவராவர்.

ஒரு முறை ஒரு விருந்தினர் இரு மாங்கனிகளை அன்பளிப்பாகக் காரைக்கால் அம்மையாரின் கணவருக்குக் கொடுத்துச் சென்றார். கணவர் அதனை வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அப்போது காரைக்கால் அம்மையரிடம் ஒரு சிவனடியார் வந்தார். சிவனடியாருக்கு விருந்தளிக்க அவ்விரு மாங்கனிகளைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. எனவே அவர் மாங்கனிகளில் ஒன்றை சிவனடியாருக்கு கொடுத்து அமுது செய்தார். பின்னர் கணவர் வீட்டிற்கு வந்து உணவு உண்கையில் அவருக்கு மீதி மாம்பழத்தைக் கொடுத்தார். அக்கனி சுவையாக இருக்கவே கணவர் மற்ற மாங்கனியையும் கொண்டு வருமாறு பணித்தார். காரைக்கால் அம்மையார் மனம் நொந்து போய் மாம்பழம் எடுக்கச் செல்பவர் போல் உட்சென்று இறைவனை மனமுருகி வேண்டினார். என்ன அற்புதம்! ஒளிவீசும் ஒரு மாம்பழம் அவர் கைகளில் கிடைத்தது. அதைக் கணவருக்குக் கொடுத்து அமுது செய்தார். கணவர் அது அற்புத சுவையாக இருக்கக் கண்டு அது எவ்வாறு கிடைத்தது என வினவினார். இவரும் கிடைத்த கதையைக் கூறவே அதை நம்பாமல் இப்படி இன்னொரு மாம்பழத்தைப் பெற்றுத் தருமாறு கேட்க அம்மையாரும் இறைவனை வணங்கி மாங்கனி பெற்றுக்கொடுத்தார். அதைக் கண்ட கணவர் அவரை விட்டுப் பிரிந்தார். அவர் தெய்வப் பெண்ணாகக் கருதப்பட்டார். இதிலிருந்து சிவனடியாருக்கு அமுது செய்வித்தல் சிவனிடம் எம்மை அணுக வைக்கும் என்பதைப் புலப்படுத்துகின்றது. நாமும் பிறருக்கு உதவி செய்து சைவம் கூறும் அன்பு வழிகளைப் பின்பற்றி வாழ்ந்து உயர்வடைவோமாக!

நன்றி

**G. மாதங்கி**
*இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி*

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# நினைவு நல்லது வேண்டும்

பேராதனை நகருக்கு அண்மையில் ஒரு சிறிய கிராமம் இருந்தது. அக்கிராமத்தில் ஒரு பெரியவர் இருந்தார். அப்பெரியவர் ஜோசியத்தின் மேல் முழு நம்பிக்கை கொண்டிருந்தார். திருமணமாகியும் குழந்தை பிறக்கவில்லை. ஆகவே அவர் அவருக்கு தெரிந்த ஒரு ஜோசியரிடம் சென்று "எனக்கு எப்போது குழந்தை பிறக்கும்" எனக் கேட்டார். அதற்கு ஜோசியரும் ஏதோ புத்தகமெல்லாம் புரட்டிப் பார்த்து விட்டு "உனக்கு சரியாக நானூறு நாட்கள் கழித்து அழகான ஓர் ஆண் குழந்தை பிறக்கும்" எனக் கூறினார். ஜோசியத்தை முழுமையாக நம்பியிருந்த பெரியவருக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவ்வேளை அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அப்பெரியவர் ஜோசியருக்கு நிறையப் பணம் கொடுத்து விட்டு வீட்டை நோக்கி புறப்பட்டார். வீட்டுக்கு சென்று ஜோசியர் கூறியதை மனைவியிடம் கூறினார். மனைவியும் மிகவும் மனம் பூரித்தார்.

அப்பெரியவர் ஊருக்கு பறைசாற்றுபவனை அழைத்து "எனக்கு 400 நாள் கழித்து குழந்தை பிறக்கவிருக்கிறது, அதையிட்டு நான் நாளைக்கு ஊருக்கே விருந்து வைக்க உள்ளேன். எல்லோரையும் நாளை அழைத்தேன் என்று பறைசாற்று" எனக் கூறினார். பறைசாற்றுபவனும் "நீங்கள் சொன்னபடியே செய்கிறேன் ஐயா" எனக் கூறிவிட்டுச் சென்றான். அடுத்த நாள் காலையில் ஊரே, பெரியவர் வீட்டு வாசலில் வந்து நின்றது. பெரியவர் வந்து எல்லோரையும் "வாருங்கள் வந்து அமருங்கள்" என்று கூறி அமர வைத்தார். சற்று நேரத்தில் எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டது. எல்லோரும் சுவைத்துச் சுவைத்து உணவருந்தி விட்டு பெரியவருக்கு நன்றி கூறி சென்றனர். பெரியவருக்கு தனது குழந்தை எப்போது பிறக்குமென்று ஒரே ஆவலாயிருந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் தனது குழந்தை பிறக்க இன்னும் எவ்வளவு நாட்கள் உண்டு என நாட்காட்டியில் நாட்களை எண்ணுவார். ஒரு வழியாக நானூறாவது நாள் வந்தது. ஜோசியர் வாக்கின் படி ஒரு அழகான ஆண் குழந்தையும் பிறந்தது. பெரியவர் தன் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டார்.

அக்குழந்தைக்கு நல்ல பெயர் வைக்க வேண்டுமென ஜோசியரிடம் மீண்டும் சென்றார். ஜோசியரிடம் சென்று "நீங்கள் கூறியது போல எனக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. அக்குழந்தை பிறந்த நாள் நல்லதா? அக்குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்று கூறுங்கள்" எனக்கேட்டார். ஜோசியரும் "உன் குழந்தைக்கு நீ ராஜா என்று பெயர் வை. ஆனால் உன் குழந்தை பிறந்த நாள் தான் சரியில்லை" என மிகத் தாழ்மையுடன் கூறினார். ஜோசியர் கூறியதைக் கேட்ட பெரியவருக்கு கோபம் பீரிட்டெழுந்தது. "என்ன கூறினீர்கள்? ஏன் நாள் சரியில்லை. என் குழந்தை பிறந்த நாள் நல்லதாகத்தான் இருக்கும். சரியாகப் பார்த்துக் கூறுங்கள்" எனக் கத்தினார் பெரியவர். அதற்கு ஜோசியர் "கோபப்படாதீர்கள் பெரியவரே. உங்கள் குழந்தை என்ன நினைத்தாலும் அது நடந்து விடும். நீங்கள் குழந்தையை வளர்க்கும் முறையில் தான் அது நல்லதை நினைக்குமா,

தீயதை நினைக்குமா என்பது தங்கியுள்ளது. நீ உன் குழந்தையை நல்லபடியாக வளர்ப்பாயாக" என ஆசி கூறினார். பெரியவரும் "என்னை மன்னித்து விடுங்கள் ஐயா. நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு சென்றார்.

குழந்தையும் வளர்ந்து பத்து வயதை எட்டியது. அதுவரையும் பெரியவர் குழந்தையை நல்லபடியாகத்தான் வளர்த்து வந்தார். அந்நாள் வரை குழந்தை வெளியே செல்லாது பாதுகாத்து வந்தார். குழந்தை நல்லனவே நினைக்க அவை நிகழ்ந்தன. குழந்தைக்கு பத்து வயதானதும் அக்குழந்தையை வீட்டிலேயே அடைபட்டுக் கிடப்பானேன் அதை வெளியே விடுவோம் என ராஜாவின் தந்தையான பெரியவர் தீர்மானித்தார். அக்குழந்தைக்கு வெளியே சென்றதும் மிக்க மகிழ்ச்சி. அது அயலவருடன் நன்றாக விளையாடியது. நாள் சென்றதும் அக்குழந்தை பதினைந்து வயது இளைஞனானது. ராஜாவிற்கு புதிய நண்பன் ஒருவன் அறிமுகமானான். அவன் தீயவனாக இருந்தான். அவனுடன் சேர்ந்ததால் நல்லவனான ராஜாவுக்கும் அவனது தீய பழக்கவழக்கங்கள் தொற்றின. ஒரு நாள் இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் ராஜாவின் நண்பன் "இந்த நாடு அழிந்தால் எப்படி இருக்கும்?" எனக் கேட்டான். அதற்கு ராஜா "ஏன்டா இந்த நாடு அழிந்தால் நாம் எங்கே செல்வது. நாடு அழியாமல் ஊர் அழிந்தால் தான் நல்லது. ஊரழிந்தால் நாம் இவ்வூரை விட்டு புது ஊருக்கு செல்ல முடியுமல்லவா" என்று தீயதை நினைத்தான் ராஜா. தீயதை நினைத்து ஓரிரு நாட்களின் பின்னர் பெரிய வெள்ளம் வந்து ஊரே அழிந்தது. அவ்வூர் மக்கள் அனைவரும் தங்கள் சொத்துக்களை விட்டுவிட்டு ஓடினர். அப்பெரியவரும் அவரது அழகிய வீடு பொருட்கள் அனைத்தையும் விட்டுவிட்டு ஓடினார். சில நாட்களில் அனைவரும் ஒரு புதிய ஊரில் தஞ்சம் புகுந்தனர்.

அப்போது தான் பெரியவருக்கு தன் மகனான ராஜாதான் ஊர் அழிய வேண்டுமென நினைத்தானோ என்ற சந்தேகம் உருவாகியது. தன் மகனிடம் சென்று "ராஜா, நீ ஏதாவது ஊர் அழிய வேண்டுமென நினைத்தாயா?" என்று கேட்டார். தன் நண்பனோடு சேர்ந்து தீயவனாகியுள்ள ராஜா "இல்லையே அப்பா, நான் ஏன் அப்படி நினைக்க வேண்டும்" என ஒரு பொய்யைக் கூறினான். அது பொய்யாக இருக்குமோ என சந்தேகித்த அப்பெரியவர் ஜோசியரை நாடி "ஜோசியரே! என் ஊர் அழிவதற்கு என் மகன் ராஜாவா காரணம்" எனக் கேட்டார். ஜோசியரும் "ஆம் உன் மகன் தான் காரணம். அவன் தான் ஊர் அழிய வேண்டுமென நினைத்தான். அவன் ஒரு தீயவனுடன் சேர்ந்து தீயவனாகி விட்டான். அவன் மீண்டும் நல்லவனாக வேண்டுமானால் மண்ணுக்குள் ஒருமாதம் உயிருடன் புதைக்க வேண்டும்." எனக்கூறினார். இதைக்கேட்ட பெரியவர் ஆழ்ந்த துயரடைந்தார். இவர்கள் இருவரும் கதைத்ததை ஒளிந்திருந்து கேட்ட ராஜா ஓடி வந்து தன் தந்தையிடம் "அப்பா என்னை மன்னித்து விடுங்கள். என்னை மண்ணுக்குள் புதைக்காதீர்கள். நான் அவனுடன் இனி பழக மாட்டேன். நான் திருந்தி விட்டேன்" எனக் கதறி அழுதான். அதற்கு ஜோசியரும் மகனே "கவலைப்படாதே. நீ ஒளிந்திருந்து கேட்பது தெரிந்து தான் அப்படிக் கூறினேன். நீ திருந்தினால் சரி" என்று கூறினார். ராஜாவும் நல்லதையே நினைத்து நல்லவனாக வாழ்ந்தான். நாமும் நல்லதையே நினைப்போமாக.

**S. அருண்யா பிரஷாந்தினி**
*இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி*

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
கீழ்ப்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

# சத்திய தீபம்

பொய்யெனும் எண்ணெயில்
பொரிந்து வந்த மானிடனே - நீ
அரிச்சந்திரனவன் பெயரைக்
காப்பது தான் எப்போது?

மனதினில் பொய்யைக் குடிவைத்தாய்
வாடகை அதனிடம் கேட்டாயோ?
மெய்யை மட்டும் குடிவைக்க
நீ வாடகை கேட்பது நியாயமில்லை

உன் சத்தியமதனைக் காப்பாற்று
நன்மை பலவும் உனைத் தேடிவரும்
மீனவன் வலையில் சிக்கிய மீன் என்றும்
உயிருடன் மீண்டதாய்க் கதையில்லை

அரசன் வீட்டுக் கோழி அது
வரம்பை மீறி வந்தாலும்
திருடி விட்டு இல்லையென - பொய்
சொல்லும் காலம் இதுவல்லவோ?

வீட்டில் ஒரு கூரை சரிந்திருக்க
வழியே சென்றவன் சரி செய்ய
கூரை தனையே திருடப் பார்த்தான் - என
வழக்கு போடும் காலமடா

அஹிம்சை என்னும் சாய்தளத்தில்
படுத்து உறங்குவோம் நாமெல்லாம்
பொய் என்னும் நெம்பு தனின்
மாட்டித் தவிப்பது ஏனய்யா

பொறுமைதனையே வளர்த்திடுவோம் - நற்
பெருமைதனையே பெற்றிடுவோம்
இன்றே பொய்யை மூட்டை கட்டுவோம்
இன்றே எரியட்டும் சத்திய தீபம்

**V.** அபிராமி
திருக்குடும்ப கன்னியர் மடம்

*With Best Compliments*

*from*

# KEITH STEFAN

Year 1H

With the Best Compliments of

# Winter Quilts (Pvt) Ltd.
# Lankapura Apparel (Pvt) Ltd.
# Texwin Clothing (Pvt) Ltd.

No. 111, Pallidora Road
Dehiwala, Sri Lanka
Tel: 730516, 735630-3

Fax : 94-1-737579/718805
E-mail : winlan@winterquilts.com
Web : www.winterquilts.com

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை

# நீறில்லா நெற்றி பாழ்

ஆதியும் அந்தமும் அற்ற அரும்பெருங் கூத்தனை முழுமுதலாகக் கொண்ட சமயம் சைவசமயமாகும். இதுவே ஒப்பிலா முதற் சமயமுமாகும். சிவன் திருவடிப் பற்றி எந்நாளும் மெய்யே மொழிந்து உளத்தூய்மையுடன் வாழ்ந்து அன்பு நெறி நின்று ஒழுகுவதே எம் சமயம் காட்டும் வாழ்க்கைப் பாதை.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி
ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்"

நாம் எவ்வுருவத்திலும் இறைவனை மெய்யன்போடு வழிபடலாம். ஆனால் அங்கு இடபாரூடராகிய சிவபெருமானே அவற்றுக்கெல்லாம் அதிபதியாய் விளங்குவார்.

எமது சமயத் தொன்மையை சாலவே விளக்கி நிற்போர் நால்வர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரே இச்சதுர்குரவர்களாவர். அவர்கள் உளமுருக; தேன் சொட்ட; எம்பெருமானை மெய்யன்போடு நினைந்து பாடிய திருமுறைகளுக்கீடு அதுவே. அந்நியர் படையெடுப்பில் மயங்கி நின்ற மக்களின் கலக்கம் துடைத்து எம்மருங் கனியாம் சைவத்தை முன்வைத்தவர் ஆறுமுகநாவலர் பெருமான். தம் உள்ளத்திலே கோயில்கொண்டு புண்ணியமூர்த்தியாய் இறைவனை பிரதிஷ்டை செய்தவர் பூசலார் பெருமான். இவ்வாறு இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்ற பலரும் சைவங் காத்த மெய்யொளி மூதாதையராக இன்றும் புகழ்க் கொடி நாட்டி விளங்குபவர்களாவர்.

மெய்ச் சைவ சமயி பல ஆகமங்கள், புராணங்கள், உபநிடதங்கள் கற்று சகல புனஸ்காரங்களையும் அறிந்து அதனைத் தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு கடைபிடிக்கப்படுகின்றவற்றுள் மிகவும் இன்றியமையாதவை சிவசின்னங்கள், திருநீறு, உருத்திராட்ச மாலை, திருவைந்தெழுத்து என்பனவே. உருத்திராட்ச மாலை தில்லைக்கூத்தனின் ஒவ்வொரு நிலையையும் எடுத்தியம்பும் புண்ணிய மாலை. இதனைக் கண்டத்திலேனும், கரத்திலேனும் அணிவது சாலச்சிறந்தது. அப்பர் பெருமான், நாவலர் பெருமான் என்போர் இப்புண்ணிய மாலையைத் தரித்து தமது சைவ வாழ்க்கையில் மேம்பட்டவராவர். இதே போன்றே

திருவைந்தெழுத்தான "நமசிவாய" எனப்படும் மூல மந்திரத்தில் ந, ம, சி, வா, ய ஆகிய ஐவ்வெழுத்தும் இறைவனின் தொழில்களை முன்னேற்று நிற்கின்றன. இம்மந்திரத்தை என்றும் உச்சரித்து வந்தோமானால் தீவினைகள் அகலும்; விதியால் வந்த காலனே தலை பணிவான். சிவ சின்னங்கள் மூன்றிலும் உச்ச ஸ்தானத்தை வகிப்பதுவும், யாவராலும் அறியப்பட்டதுவும் திருநீறாகும். எம் கோமாதாவின் சாணத்தை நீறாக்கி இறைவன்பால் சமர்ப்பிப்பதால் 'திரு' என்ற உயர் அடைமொழியுடன் இணைத்து திருநீறு என்ற நாமத்தைப் பெறுகிறது.

திருநீற்றின் வலிமையும், கீர்த்தியும் இவ்வகண்ட ஆழியினும் பெரியது. இதன் மகிமையை உணர்த்தும் வரலாறுகள் எண்ணிலடங்காதன. சமண சமயம் நின்ற பாண்டிய மன்னனின் வெப்பு நோயை எந்தப் பெரிய சித்தர்களாலும் குணப்படுத்த இயலாத நிலையில் பாண்டிமாதேவி வெறும் பதினாறே வயதான சம்பந்தரை அழைத்தார். சம்பந்தர் தான் சுமந்து வந்த விபூதியை மன்னன் உடலெங்கும் பூசி இறைவனை நினைத்து திருப்பதிகம் இசைத்தார். "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு....." என ஆரம்பிக்கும் தேவாரத் திருமுறை பாடி பாண்டிய வேந்தனின் நோயை ஒரு நொடிப்பொழுதில் குணமாக்கினார்.

அப்பர் தனது இளமைக்காலத்தில் மெய்ஞ்ஞானத்தை உணராது சமண மதத்தின் தலைவராய் பதவி கொண்டிருந்தார். ஒரு முறை அப்பருக்கு கொடிய சூலை நோய் ஏற்பட்டது. அப்பர் அந்நோய்க்கு நிவாரணமின்றித் துடித்தார்; கதறினார். ஈற்றில் தன் சகோதரியான திலகவதியாரிடம் சரண் புகுந்தார். திலகவதியாரோ திருநீற்றை மருணீக்கியாரின் மெய்யெங்கும் பரப்பித்தொழுதார். அக்கணம் அப்பர் "கூற்றாயினவாறு விலக்ககலீர்..." என்ற பதிகம் பாடியதுதான் தாமதம்; என்ன வித்தையோ! அவர் அவஸ்தைப்பட்ட நோய் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது. அன்றிலிருந்து சைவமே மெய்ச்சமயம் என உணர்ந்து கொண்டு அப்பர் திருப்பணிகள் செய்து வந்தார். இதைப் பொறுக்காத சமணர்கள் நாவுக்கரசரை நீற்றறையில் இட்டு தாழ் மூடினர். அப்பருக்கு நீற்றறை வழமைக்கு மாறாகக் குளிர்ச்சியைத் தந்தது.

இவ்விரு சம்பவத்தினின்றும் திருநீறு பிணி தீர்க்கும் மருந்தும் கூட என அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் விபூதி தரித்து உயிர் மீண்டோர் பலர். மன்னன் மெய்ப்பொருள் நாயனார் சிறந்த சிவபக்தராக மட்டும் விளங்கவில்லை; திருநீறணிந்து சிவனடியார்கள் மேலும் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். ஒரு முறை மெய்ப்பொருள் வேந்தனைக் கொல்வதற்கென சிவனடியார் வேடம் பூண்டு ஒரு


சிவசக்தி 2002

தபோதனர் போல அத்திருமாளிகைக்கு எழுந்தருளினான். சமயம் பார்த்து கொண்டு வந்த கூறிய கத்தியால் நாயனாரைத் தாக்கினான். அவனை வாளால் வெட்ட வந்த தளபதியை நாயனர் தடுத்தார். மாறாக அவருக்கு பாதுகாப்பு வழங்கி சிறப்பித்தார்.

இதே போல மற்றுமோர் செங்கோலரசன் ஒரு முறை போர்க்களத்தில் எதிரியுருடன் போரிட்டான். அவனை மன்னன் தாக்க முனைந்த போது பகைவன் உடலெங்கும் தரித்திருந்த வெண்ணீறைக் கண்டு அவன் தன்னையே மறந்து நிராயுதபாணியாய் அவன் காலில் விழ்ந்து வணங்கினான். இவ்வாறாக திருநீறு ஒரு சிறந்த சைவசமயிக்குரிய அருஞ் சாதனமாகவே விளங்குகின்றது.

மேலும் ஒரு முறை சேர மன்னன் யானை மேல் ஊர்வலம் வந்துகொண்டிருந்தான். அவனுக்கு எதிராக மணல்மூட்டையை தோளில் வலிந்து தூக்கியவாறு ஒரு சாதாரண தொழிலாளி மிகவும் சிரமப்பட்டு நின்றான். அந்நேரம் மழை பெய்ததால் மணல் அவனுடல் எங்கும் ஒட்டி நீறு தரித்தவன் போன்று படர்ந்திருந்தது. புனித நீறணிந்த மேனியைக் கண்ட மன்னன் யானையை விட்டுக் கீழிறங்கி தானே மணல் மூட்டையை சுமந்து சென்றான்.

உண்மையான சைவப் பெருமக்கள் எந்நேரமும் திருநீறுதரித்து கருணை நிலை பெற்ற திருமுகம் மலர்ந்து காணப்படுபவர்களாய்த் திகழ வேண்டும். தற்கால நவீன நாகரிகத்தில் ஒரு சிலரே விபூதி அணிகின்றனர். அதிலும் கைவிட்டு எண்ணக்கூடியவரே நெற்றியில் மூன்று குறியிட்டுக் காணப்படுகின்றனர். நாவலர் பெருமான் யாத்த சைவநூலிலே சைவக்குடிகள் கைக்கொள்ள வேண்டிய செயல்களை விளக்கமாக அளித்துள்ளார். அதிலும் புண்ணிய நீறாம் வெண்ணீற்றுக்கே முதன்மை வழங்கப்படுகின்றது. ஒரு பெண்ணுக்கு நெற்றியில் பூணும் குங்குமமும் கழுத்திலணியும் மாங்கல்யமும் எத்துணை முக்கியமோ, அத்துணை அவசியமானது சைவர்கள் நெற்றியில் திருநீறு தரிப்பது. நீறில்லா நெற்றி பட்ட பாலைநிலத்து மரம் போன்றது. நீறு கொண்ட நெற்றி பசுமையான வயல் போன்றது. உலகிலே சைவ சமயம் ஓங்க திருநீறே முதற்சாதனம். அதை நாம் எப்போதும் தரித்து பேரின்பப் பெருவாழ்வு எய்துவோமாக!

"ஓங்குக சைவ நீதி;
விளங்குக உலகமெல்லாம்."

**K. சாமளி**

*திருக்குடும்ப கன்னியர் மடம்*

With the Best Compliments

of

# Saraswathi Stores

12, Wolfendhal Street, Colombo 13
Tel: 432035, 348635 Fax: 471275

*With Best Compliments*

*from*

# Aerotel Pte Ltd.

AIR GROUND EQUIPMENT, CHEMICAL & IN-FLIGHT SUPPLIERS

53 2/4, Main Street
Colombo 11
Sri Lanka

Tel : 0094 1 341163
Fax : 0094 1 441756
E-mail : aerotel@sltnet.lk

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலிடம் பெற்ற சிறுகதை

# நாரறுந்த பூமாலை

"பைன்னவா, பைன்னவா" பஸ் கண்டக்டர் பெருங் குரலெடுத்துக் கத்தினான். சனங்கள் ஏறுவதும், இறங்குவதுமாய் இருந்தனர். மசாஜிங் மெஷின் மெல்ல உறுமி புகையைக் கக்கிக் கொண்டு கிளம்பியது. அலுவலகம் செல்வோர் பஸ்ஸிலுள்ள சனத்திரளுடன் மல்யுத்தம் புரிந்து கொண்டு தமது விதியை நொந்தவாறு இடர்பட்டுக் கொண்டிருந்தார்கள். மாணவர்கள், அலுவலர்கள் என்று ஏகப்பட்ட சனசமுத்திரத்தைப் பார்க்கும் போது வழமையாக கோபம் பீறிட்டுக் கொள்ளும். "இந்த சனத்துக்குள்ளே எப்படி பஸ்ஸில ஏறுறது இறங்கிறது?" என்று ஓலமிடும் மனமானது வெறுப்பின் சிகரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். "இந்த கண்டக்டருக்கு இதயமே இல்லை. எவ்வளவு சனத்தைத் தான் உள்ளே தள்ளுவான் மனுசன் நிற்க இடமில்லை" என்று எரிச்சல் வரும். ஆனால் அன்று வழமைக்கு மாறாக இவை ஏதோ ஓர் இன்பத்தையே தந்து கொண்டிருந்தது ராமிற்கு!

மெல்ல தன் சேர்ட்டின் பொக்கட்டைத் தடவிக் கொள்கிறான். அவனது எத்தனையோ வருட முயற்சி அன்று அவனது சட்டைப்பையில் கடதாசி உருவில் இருந்தது. அவன் அன்று காலை பஸ்ஸில் பிரயாணிக்கும் போது எத்தனை எத்தனை வேண்டுதல்கள். கிட்டத்தட்ட அனைத்துக் கடவுள்களிடமும் மன்றாடி இருப்பான். அவன் இறைநாமங்களை பைத்தியக்காரன் போல் உச்சரித்துக் கொண்டு இருந்ததைப் பார்த்து அவன் அருகில் பழக்கூடையுடன் நின்ற ஒரு வயது போன மூதாட்டி கூட மெல்லச் சிரித்தாள். அது அவனது சிந்தனையில் மெல்ல உலா வந்தது. வெற்றிக் களிப்பில் அவன் விரல்கள் மெல்ல இருக்கையின் முன் கம்பியில் தாளமிட்டன. மனம் எங்கெங்கோ பறந்து சிறகடித்துக் கொண்டிருந்தது. இனம் புரியாத ஓர் இன்பம் அவனது மனதை ஊடுருவிக் கொண்டிருந்தது.

பஸ் முன்னோக்கிப் பயணிக்க ராமின் சிந்தனைகள் இன்று காலையில் நடந்த சம்பவங்களை மெல்ல அசைபோட்டன. "டேய் மச்சான் எழுந்திரா..... டேய் சொன்னாக் கேளுடா இன்டைக்கு உனக்கு இண்டர்வியூ எல்லே". குளிர்ந்த தன் கரங்களால் தன் நண்பன் முகத்தை ஒரு முறை தொட்டான் சிவா, ராமின் நண்பன்.

அவன் தொண்டைக் கிழியக் கத்தியது எங்கோ தொலைவில் நாய் ஒன்று உறுமியது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. கூதலும், தரையிலிருந்த பாயின் குளிர்ச்சியும் அவனுக்கு நித்திரையைக் கண்களிற்குள் அள்ளிச் சொரிந்தன. இடை வரை போர்த்தியிருந்த போர்வையை கழுத்து வரை இழுத்து மூடிக் கொண்டான். காதுகள் இரண்டும் நாயின் உறுமலைக் கேட்கப் பிடிக்காது கையின் உதவியை நாடின.

திடீரென ஓர் அதிர்ச்சி... திடுக்கிட்டு விசுக்கென எழுந்தான் ராம். தேகம் முழுதும் குளிர்ந்த நீர் சொட்டிக் கொண்டிருந்தது. மெல்ல சுய உணர்வு பெற்றான். உறுமிய நாயின் மேல் சற்றே ஆத்திரம் வந்தது. ஆனால் அவன் பாசம் அதை மறந்துவிட்டது.

“டேய்.... எழும்பச் சொன்னா எனக்கு எழும்பத் தெரியாதா? அதற்கேன் இப்படி ஒரு வாளி தண்ணியைக் கொணந்து கொட்டினே” என்று நக்கல் சிரிப்புடன் கூறினான் ராம். சிவா தன்னுடைய உயிர்த்தோழனின் விஷமத்தனத்தை உணர்ந்து சற்றே சிரித்து விட்டு “அங்க உன்ட அம்மா பிள்ளைக்கு எப்ப வேலை கிடைக்கும். மூத்த அக்காளுக்கு கல்யாணம் எப்ப பண்ணலாம். சின்னத் தங்கச்சியும் வயசுக்கு வந்திட்டுது, கடைக்குட்டி சிரணின் படிப்புச் செலவுக்கு என்ன செய்யலாம். குடும்பச் செலவுக்கு என்ன செய்யலாம் என்டு யோசிச்சுக் கவலைப் படுறா. நீ என்னடான்னா இண்டர்வியூவிற்குப் போகப் பஞ்சிப்படுற, நீ செய்வது உனக்கே நியாயமா இருக்காடா? சொல்லு, ஆம்பிளை இல்லாத வீட்டுக்கு நீ தானே மூத்த பையன் உழைச்சு உன்ட கால்ல நிற்க வேண்டாமா” என்று உணர்ச்சி வேகத்துடன் பேருரை ஒன்றையே ஆற்றினான் சிவா. “கோவிச்சுக்காதேடா சிவா நான் சும்மாவா இருக்கிறன். இது வரைக்கும் கொழும்பில் உள்ள அத்தனை அலுவலகங்களிலேயேயும் என்ட கால் தடம் பதிஞ்சிருக்கும். அலுவலகப் படிகளில் ஏறி செருப்பு தேஞ்சு போனது தான் மிச்சம் என்னை என்ன செய்யச் சொல்ற? அவனவன் வேலையை வச்சுக்கிட்டு எனக்காக காத்துக்கிட்டா இருக்கான்; எல்லாம் என்ட விதி” என்றவாறு துப்பைப்பூ துவாலையை தோளில் சாத்திக் கொண்டு குளியலறைக்குச் சென்றான் ராம். மனம் விரக்தியால் பேதலித்துக் கிடந்தது. நெஞ்சில் யாரோ பாறாங்கல்லால் அழுத்துவது போன்று இருந்தது.

மெல்ல அலுவலகத்தின் பெயர்ப் பலகையை நிமிர்ந்து நோக்கினான் “மஸ்கன்ஸ்” என்ற பளபளத்த பலகை அவனை உள்ளே வரவேற்றது. நம்பிக்கை என்பது சிறிதளவும் இன்றி ஏனோ தானோ என்று உள்ளே காலடி எடுத்து வைத்தான் ராம். தன்னை போல் வேலை தேடி நின்ற இளைஞர், யுவதிகளைப் பார்த்தவுடன் இதயம் கையோடு கழன்று வருவது போல் இருந்தது. மனம் “ஏன் பிறந்தேன்” என்று அழுது தவித்துக் கண்ணீர் விட்டது. நடப்பது நடக்கட்டும் என்ற எண்ணத்துடன் மனதைக் திடப்படுத்திக் கொண்டான். “ராம்! யாரது ராம்” பியூனின் குரல் செவி வழியே நுழைந்து இதயத்தை ஒரு முறை சில்லிட வைத்தது. இதயத்தின் வேர்கள் குளிர்ந்தன.

மெல்ல எழும்பி, கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான். மெல்ல நிமிர்ந்து பார்த்தான். மூன்று சிங்கங்கள் அவனைத் தமது கண்களால் ஆராய்ந்தன. அதில் தலைமைச் சிங்கம் அவன் கையில் வைத்திருந்த கனமான பைலைக் கேட்டு வாங்கி ஆராய்ந்தது. “அனுபவம் இருக்கா” திடீரெனக் கேட்ட கேள்வியால் நிலை குலைந்தான் ராம். மெல்ல தன்னை சுதாரித்துக் கொண்டு, “இல்லை சேர்” என்று பயத்துடன் கூறினான். “யூ மே கோ நௌ” (நீங்கள் இப்ப போகலாம்) என்று இரண்டாவது சிங்கம் கூறியது. மெல்ல

கதவைத் தள்ளிக் கொண்டு வெளியேறி முடிவுக்காக தனது இருக்கையில் சென்று அமர்ந்தான். முடிவு என்னவென்று அவனது மனம் பயப்படவில்லை. இந்தக்காலத்தில் அனுபவம் இல்லாமல் யார் வேலை தருவார்கள். "வீணே இங்கிருந்து நேரத்தைக் கழிப்பது முட்டாள் தனம் எழும்பிப் போவோம்" என்று அவன் மனது அவனுக்கு உரைத்தது. மெல்ல எழும்பினான்.

அப்போது தான், தான் கொண்டு வந்த எதையோ இழப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆம், அது அவனது கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள் அடங்கிய பைல். (File) அவசர அவசரமாக வந்து கொண்டிருந்த பியூனை நிறுத்தி விஷயத்தை விளக்கினான்.

"கொஞ்சம் பொறுங்க தம்பி ஏன் அவசரப் படறீங்க" என்று கூறிவிட்டுச் சென்றான் அவன். மனம் வெறுப்பின் விளிம்பில் நின்றது. சற்று அடக்கிக் கொண்டான். சென்ற பியூன் திரும்பி வந்து "துரை உங்களைக் கூப்பிடுறாரு" என்றான். கனத்த இதயத்துடன் உள்ளே சென்றான் ராம் "குட் லுக்கிங் யங் மேன் உமக்குத்தான் வேலை. இந்தாரும் வேலைக்கான ஓர்டரை பிடியும்" என்றான் துரை. மனம் சிறகு கட்டி எங்கெங்கோ பறந்தது. ஒரு முறை தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டான் ராம். "நிஜமா அல்லது கனவா" நம்ப முடியவில்லை.

ஒருவாறு மனம் முழுக்க மகிழ்ச்சியுடன் பஸ்ஸில் பிரயாணித்தான் ராம். முதலில் இதை அவனுக்கு வாழ்வளித்த ஆத்மார்த்தமான நண்பன் சிவாவிற்குச் சொல்ல வேண்டும். இவ்விடயத்தைச் சொன்னவுடன் அவன் எப்படித் துள்ளிக் குதிப்பான். பெற்ற தாயை விட ராமின் நலத்திற்காய் அயராது பாடுபட்டவன் அவனாயிற்றே. தாயாய், தந்தையாய், உற்ற சகோதரனாய் கல்வி பயிலும் காலம் முதல் இன்று வரை உடன் நின்ற ஓர் ஜீவனாயிற்றே. மனம் கட்டுப் பாடில்லாமல் மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தது. ஒருவாறு இருவரும் வசிக்கும் லொட்ஜை வந்து அடைந்தான். சிவா கம்பஸ் முடித்து வரும் நேரம் தான் என்று எண்ணிக் கொண்டு பக்கத்து வீட்டு அம்புஜம் மாமியிடம் சாவியை வாங்கித் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். மின்விசிறியை முறுக்கி விட்டு கறுப்பு வெள்ளை குட்டி தொலைக்காட்சிப் பெட்டியை முறுக்கினான். "முக்கிய செய்திகள்" இன்று கொழும்பு மாநகரிலே நடந்த இனக்கலவரத்தில் 16 இளைஞர்கள் பலி, இந்தக் கோரச் சம்பவம் பல்கலைக்கழக வளாகத்தினுள் இடம் பெற்றது. இறந்தவர்களின் பெயர் விபரம், ராஜா வயது இருபது, சுரேஷ் வயது இருபத்தொன்று, சிவா வயது ..........

இதயம் பிளந்து வெடித்தது. உயிர் உடலை விட்டு செல்வதற்குப் போராடியது. மனம், புத்தி இரண்டுமே பேதலித்தது. ஆம் ராம் இனிமேல் ஒரு நடைப்பிணம், நாரறுந்த மாலை.

**V. மயூரி**
*இந்து மகளிர் கல்லூரி*

With Best Compliments from

**CEY-CAN**

Travel & Tours (Pvt) Ltd.

2nd Floor, 113, Chatham Street, Colombo 1, Sri Lanka
Tel: 325336, 439952, 437647, 343571-3, 431362, 439901
Fax: 94 1 440294
E-mail : ceycantr@sri.lanka.net
baabuji@sri.lanka.net

*With the Best Compliments*

*of*

**A. J. MEDICHEM**
**INTERNATIONAL (PVT) LTD**

50, Albion Lane
Colombo 9

Tel: 699689/074-610079
Fax: 687867/074-614762

E-mail: ajmi@sri.lanka.net



சிவசக்தி 2002

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மத்தியபிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

## எங்கு காணினும் சக்தியடா !

கண்ணகியும் ஜானகியும் சாவித்திரியும்
பிறந்தயிந்த புண்ணிய பூமியிலே!
பாரதியும் காளிதாசனும் பட்டரும்
உதித்தயிந்த செந்தமிழ்ப் பாரினிலே
நால்வரும் நாயன்மாரும் புலவரும்
தோன்றிய இந்த பூவுலகிலே
சக்தி மயம் ஜொலிக்குதடா
எங்கு காணினும் சக்தியடா!

பிணி துன்பம் தீர்க்கும் வேம்பிலும்
பால் குடிக்கும் பாம்பிலும்
அடியவர் பூமிதிக்கும் தீயிலும்
ஆடிவரும் பால் காவடியிலும்
சுமந்து வரும் பால் குடத்திலும்
ஏந்திவரும் தீச்சட்டியிலும்
கற்பூர வாசனை தோன்றுதடா
எங்கு காணினும் சக்தியடா!

அன்பு நிறைந்த மங்கையிலும்
அடக்கம் நிறைந்த பெண்ணிலும்
மங்களம் நிறைந்த தையலிடமும்
மணக்கும் சந்தன குங்குமத்திலும்
பக்தி சொட்டும் பாடலிலும்
காவடி கரக ஆட்டங்களிலும்
பக்தி வெள்ளம் பெருகுதடா
எங்கு காணினும் சக்தியடா!

வேதியர்கள் ஓதும் வேதங்களிலும்
பாமரர்கள் பாடும் பாடலிலும்
பக்தர்கள் அழைக்கும் தொனியிலும்
ஏழைகள் எழுப்பும் அவலக்குரலிலும்
வேம்பின் சுவைமிளிரும் கானத்திலும்
ஓம் சக்தி என்ற மந்திரப் பொருளிலும்
சக்தி நாமம் கேட்குதடா
எங்கு காணினும் சக்தியடா!

சாந்தி நிலவுமவள் கண்களிலும்
பக்தரை சோதிக்கும் செயல்களிலும்
வேதனையை மறக்கச்செய்யும் பூமுகத்திலும்
வந்தவரை வாழவைக்கும் கரங்களிலும்
கொடியவரைக் கூறுபோட்ட சூலத்திலும்
அருள்புரியும் அன்பு உள்ளத்திலும்
சக்தி முகம் தெரியுதடா
எங்கு காணினும் சக்தியடா!

கள்ளம்கபடமில்லா நல்ல உள்ளத்திலும்
பக்தி நிறைந்த புனித மனதிலும்
மற்றவரை மதிக்கும் உயர்ந்த பண்பிலும்
மாண்பு மிகுநல் மாந்தரிடமும்
தேன் சுவைக்கும் சொல்லிலும்
நேர்மையுள்ள நற் செயலிலும்
சக்தி குடிகொண்டு உள்ளாளடா!
எங்கு காணினும் சக்தியடா!

மங்களத்தைப் பெருக்கிடவே வந்தவளை
வையகத்தை ஆட்சிசெய்யும் அரசியை
காக்கும் அன்பு அன்னையவளை
காண்பதற்கு அரிய பேரொளியை
ஆற்றின்ப வெள்ளத்தை
எங்கள் அன்னை அபிராமியை
குடி வைத்துக் கொண்டாடுவோமடா
எங்கு காணினும் சக்தியடா!

S. சண்முகப்பிரியா
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி

With Best Compliments

from

**V. Parameswaran**

*(Teacher - Economics)*

Royal Academy
Colombo 13

Mod Study Centre
Colombo 06

With the Best Compliments of

றோயல் கல்லூரி கலை மகள் விழா
சிறப்புற வாழ்த்தும்
ஒரு நலன் விரும்பி

Siruthay@hotmail.com

**S. Nimalshan**


சிவசக்தி 2002

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# திரைப்படங்களில் சீரழிக்கப்படும் சமய கருத்துக்கள்

சமயங்கள் மனித வாழ்வை சீர்படுத்துவதற்காக மக்களிடையே நடைமுறைப் படுத்தப்படும் ஒரு வகையான நெறியாகும். மதம் என்பது "வெறும் சடங்குகளோ, வரட்சியான வேதாந்தப் பேச்சுக்களோ அல்ல. வெறும் தொழுதல்-விழுதல்-எழுதல் போன்ற உடல் அசைவுகளுமல்ல". மதம் "பாமரனைப் பண்புள்ளவனாக்கும். பண்புள்ளவனை தெய்வமாக்கும்". இவ்வாறு மனிதன் தெய்வமாக மதிக்கப்பட்டு, இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிசமைப்பது சமய கருத்துக்கள். இவை திரைப்படங்களில் சீரழிக்கப்படுவது பற்றி ஆராய்வது இக்காலத்தில் சாலப்பொருத்தமானது.

"வெவ்வேறு மலைகளில் ஊற்றெடுக்கின்ற நதிகள் இறுதியில் ஒரே கடலில் சங்கமிக்கின்றன" என்கிறார் இராமகிருஷ்ண பரமஹம்சர். இதன் உட்கருத்தாவது, சமயங்கள் வெவ்வேறு வழியை ஆன்மாக்களுக்கு காட்டியபோதும், இறுதியில் ஆன்மாக்கள் முத்தி எனும் கடலிலேயே சங்கமிக்கின்றன என்பதாகும். எனவே, இவ்வுலக மக்கள் சகல சமயங்களும் ஒன்றே என்பதை உணரவேண்டும் என்ற கருத்து காலங்காலமாக வலியுறுத்தப்பட்டு வந்த போதும், திரைப்படங்களில் இன, மத, மொழி ரீதியான வேற்றுமைகளைக் காட்டி மக்கள் தமக்கிடையே வேற்றுமைகளை ஏற்படுத்திக் கலவரங்களை உருவாக்குவது போல் பல வித கோணங்களில் காட்டப்படுகின்றன. இது கண்டிக்கப்படவேண்டியது. இவ்வாறான இன, மத, மொழி ரீதியான பிரிவுகள் சமூகத்தில் யதார்த்தமானவையாக இருந்தபோதும், மக்களைத் திருத்தவேண்டும் என்ற நோக்கில் பிரச்சினைகளைப் பல கோணங்களிலும் விரிவுபடுத்துவது வேதனைக்குரிய விடயம்.

வன்முறைக்கலாச்சாரம் இன்றைய திரைப்படங்களில் சர்வ சாதாரணமான தொன்றாகிவிட்டது. இன்றைய திரைப்படக் கதாநாயகர்கள் வன்முறையைக் கைக்கொள்பவர்களாகவும் பின் அவர்களைச் சுற்றிய கதையுமே திரைப்படத்தின் கருப்பொருளாக இருக்கும். இந்தத் திரைப்படங்களில் வரும் கதாநாயகர்களின் நடவடிக்கைகள் போன்று இன்றைய இளைய சமுதாயத்தினரும் தம்முடைய அன்றாட நடவடிக்கைகளை "ஸ்டைல்" என்று மாற்றி வன்முறையைப் பின்பற்றத் துடிப்பது திரைப்படங்களில் வலியுறுத்தப்படும் சீரழிக்கப்பட்ட கருத்தாகும்.

"அன்பு தான் இன்ப ஊற்று". "அன்பு தான் உலக மகா சக்தி". என்றெல்லாம் சமயங்கள் வலியுறுத்துகின்றன.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்,
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்,
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்கிறார் திருமூலர். உலகம் எங்கும் அன்பு வியாபித்திருக்கிறது. இந்த அன்பை இன்றைய திரைப்படங்கள் 'காதல்' என்ற பெயரில் வெளிப்படுத்துகின்றன. தாய், தந்தை, சகோதரன், சகோதரி என்ற பாசப் பிணைப்புகள் திரைப்படங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள போதும் அவற்றை விஞ்சி காதல் எடுத்துக் காட்டப்படுகிறது. காதலுக்காக பெற்றோரை வெறுப்பதும் பெற்றோர் மீது தப்பான அபிப்பிராயம் கொள்ளவும் இவை தூண்டுகின்றன. இது அன்பு என்ற சமயக் கருத்தை பிழையான முறையில் விளங்கிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்து எனலாம். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் ஏற்படும் காதலைக் கேவலமான முறையில் படம் பிடிப்பது தான் திரைப்படங்களிலுள்ள மிகப் பெரிய பிழையாகும்.

1950களில் பக்தி சம்பந்தமான திரைப்படங்கள் பல எழுந்தன. இதன் மூலம் பல விடயங்களை இளம் சமூகத்தினர் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆயின், இன்றைய காலத் திரைப்படங்கள் அவ்வாறில்லை. திரைப்படப் பாடல்களும் சமயத்தையும் அதன் தத்துவக்கருத்தையும் கொச்சைப்படுத்துவதாகவே அமைகின்றன. காலங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வந்த மந்திரங்களைப் பாடலின் முதல் வரியிலே சேர்ப்பதுவும் மேலும் இசை சேர்த்து அதன் வடிவத்தை மாற்றுவதும் பிழையாகும். படையப்பா படப்பாடலொன்றில் இவ்வாறு மந்திரம் மாற்றப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் புரியாமலேயே பல சிறார்களும், இளைஞர்களும் இப்பாடல் வரிகளை உச்சரிக்கிறார்கள். உண்மையில் மந்திரங்கள் என்பவை வேதகாலங்களில் ஏற்படுத்தப்பட்ட பிரார்த்தனை முறையாகும். இதன் அர்த்தம் ஒரு சிறு எழுத்து உச்சரிப்புப் பிழையில் மாறுபடும். இது இந்துசமயத்தை கொச்சைப்படுத்துவதாக அமையும். இது பாரதூரமான பிழையாகும். பாடல்களில் எதுகை, மோனை வரம்புகள் கடைபிடிக்கப்படவேண்டும் என்பதற்காக, "சொக்குப்பொடி மீனாட்சி, சொக்கநாதன் நான் தான்டீ" என்று பாடல் எழுதுவதும் மிகப் பெரிய தவறாகும்.

ஒரு இந்துவாகப் பிறந்தவன், இந்து மதக்கருத்தை பெரிதாகவும், பௌத்தனாகப் பிறந்தவன் பௌத்த மதக்கருத்தை பெரிதாகவும், இஸ்லாமியனாகப் பிறந்தவன் இஸ்லாமியக் கருத்தை பெரிதாகவும் மதிப்பதோடு நின்று விடாமல், ஏனைய மதத்தில் கூறப்பட்ட கருத்தையும் மதிக்க வேண்டும். திரைப்படங்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற நடவடிக்கைகள் படம் பிடிக்கப்படுவது மிக மலிந்து விட்டது. உயிர்க் கொலை என்பது சமயத்தில் பெரும் பிழையாகக் கொள்ளப்படுகின்றது.


சிவசக்தி 2002

"தன்னுயிர் போல் மண்ணுயிரையும் நேசி" என்ற உணர்வுள்ள எந்த ஒரு சமயப்பற்றுள்ள மனிதனும் கொலையை விரும்ப மாட்டான். ஆனால், இன்றைய திரைப்படங்களில் சிறு பிரச்சினை ஏற்பட்டவுடன் கொலை செய்வதும், தற்கொலை செய்வதும் தான் வழி என்பது போல் கதை வடிவமைக்கப்படுகின்றது. உயிரை வலுக்கட்டாயமாக உடலை விட்டு நீக்கினால், மனிதன் நரக வேதனையில் இடர்ப்படவேண்டும் என்று கூறப்பட்ட போதும், அவற்றை மீறித் திரைப்படங்கள் மக்களுக்குப் பிழையானதொரு விளக்கத்தைக் கொடுக்கின்றன. அதனால் தான் திரைப்பட நடிகைகள் பலர் தற்கொலை செய்து கொண்டார்களோ?

கற்பழிப்பு என்பது இன்று திரைப்படங்களில் மலிந்துவிட்ட ஒன்று. பெண்களைத் தாயாகவும் தெய்வமாகவும் போற்றுவது இந்துமதம். வேதகாலந்தொட்டு பெண் தெய்வங்களை வழிப்பட்டு வந்தார்கள். சிவனால், காரைக்கால் அம்மையார், "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே!" என்று கூறப்பட்டார். இவ்வாறு பெண்களை மதிக்கும் சமயங்களுக்கு எதிராக, கற்பழிப்பு எனும் சட்டவிரோத செயலைச் செய்வதற்குத் தூண்டும் வண்ணம் திரைப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. பெண்களைப் பொறுமையின் சிகரமாகப் படம் பிடித்துக் காட்ட வேண்டிய திரைப்படங்கள் பெண்களைக் கவர்ச்சிப் பெட்டகங்களாக எண்ணி காட்சிகளை அமைப்பது வேதனை தரும் விடயமாகும். நல்ல கருத்துக்களை வலியுறுத்தித் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும், அவை சமூகத்தினர் மத்தியில் எடுபடாமற் போனது ஆச்சரியமாகக் தான் இருக்கிறது.

இன்று சமூகத்தினர் மத்தியில் சமயக் கருத்துக்கள் குறைந்து திரைப்படக் கருத்துக்கள் மலிந்துவிட்டன. இதனால்தான், இன்று மாக்கள் போன்ற வாழ்க்கையை மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இன்றைய திரைப்படங்கள் பெரியோர் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை எனினும், இளையோர் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இளையோரின் வாழ்க்கைப் பாதையை திசைத்திருப்புகின்ற "வயது வந்தோருக்கு மட்டும்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட திரைப்படங்களின் வருகையும் அதிகரித்து விட்டது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை மாறி, இன்று உலகை உலுக்கும் "எயிட்ஸ்" போன்ற பாலியல் ரீதியான நோய்கள் அதிகரித்தமைக்கும் காரணம் - சமயக்கருத்துக்கள் மறைந்து, சீரழிக்கப்பட்டு திரைப்படங்களில் வெளிக்கொணரப்படுவது தான்.

மனிதனாகப் பிறந்தவன் எவனுக்கும் ஆசை என்பது இயற்கையானது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என மனிதன் ஆசைகளை வளர்க்கின்றான்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை – அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளுக்கு ஏற்ப மனிதன் பற்று அன்றி வாழவேண்டும். கிடைத்ததைக் கொண்டு போதுமென்ற மனத்துடன் வாழவேண்டும். அதுவே, வாழ்வுக்கு வழி. ஆயின், திரைப்படங்களில் ஆசைகளும் அவற்றை அடைய மனிதன் படும் பாடும் மிக லாவகமாகக் காட்டப்படுகிறது. இது யதார்த்தமானதாக இருப்பினும், பிழையான விளக்கத்தை மக்கள் பெற வழி செய்கிறது. இதனால், மனிதன் பிழை செய்யத் துணியும் நிலை ஏற்பட்டும் வருகிறதன்றோ?

திரைப்படங்கள் வாழ்வின் ஒவ்வொரு உண்மை அசைவையும் படம் பிடித்துக் காட்டுவன. ஆயின், மனிதனிடையே உள்ள கீழ்த்தரமான பழக்கங்களைத் திரைப்படங்களில் வெளிக்கொணரும் போது அவற்றிற்கு ஓர் எல்லை இருக்கவேண்டும். மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காக மனித அடாவடித்தனங்களை ஓர் எல்லைக்கு மேல் திரைப்படங்களில் வெளிக்காட்டுவது தவிர்க்கப்படவேண்டியது. அளவுக்கு மிஞ்சிவிட்டால் அமிர்தமும் நஞ்சாகிவிடும் என்பதை நாம் உணரவேண்டும். சீரழிக்கப்படுகின்ற சமயக் கருத்துக்களைத் திருத்தி அவற்றின் உண்மையை உணரவேண்டியது எம் அனைவரதும், அதாவது, ஒவ்வொரு சமயியினரதும் தலையாய கடமையாகும்.

**"சீரழிக்கப்படுகின்ற கேள்விக்குறியான சமயக்கருத்துக்களைத் தரும் திரைப்படக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!"**

B. ஷாலினி
*இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி*

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற சிறுகதை

# கோபுரப் புறாக்கள்

சிந்துகின்ற மழைத்துளிகளின் நடுவே சிதறிய சிந்தனையுடன் அவள். இருண்ட வான் கடலிலே சிறிது வெறுப்புப் போலும் கொஞ்சமாகத் தூறும் மழைச் சாரலுக்கு. வானை விட்டு நிலத்தினுள் அடைக்கலம் தேடும் அத்தூறலில் சிந்துவின் கண்களிலிருந்து வழியும் நீரும் கலந்து கொள்கிறது. இறைவன் படைப்பில் எல்லோருக்கும் இன்பமும், துன்பமும் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கு எடுத்துக் காட்டாகவே அந்த வானத்தின் சாரல் அழுகை. அதன் மத்தியில் சிந்துவும் அழுவது எனக்கு வர்ணனையாகத் தோன்றியது போலும். எனக்கோ அவளின் அழுகைக்கான காரணம் தேவைப்பட்டது. பிறர் அழுவதைப் பார்த்து வர்ணிக்க முடிந்த என்னால் வேதனைப்பட்டு அவர்களின் சோகத்தில் பங்கு கொள்ளவும் முடியும். இது என் சிந்தனைச் சிற்பியால் செதுக்கப்பட்ட எடுகோள். முடிவுகோள் ஆக்கவேண்டும் என எண்ணியபடி நான் தூறும் சாரலைப் பார்க்காது சிந்துவின் பக்கம் திரும்பினேன்.

அவளின் விம்மலுக்கு மத்தியில் என் வினவல் எடுபடவில்லை. தேற்றுவதற்கு முற்பட்டேன். யாரும் தமக்குள் உள்ள வலிகளை நெருங்கியவரிடத்தில் கூறும் போது மனதிலுள்ள வலி சிறிது இறங்குகின்றது. இது என் மனத்திரையில் ஓடிய வாசகம் ஆனால் நான் சிந்துவிற்கு நெருங்கியவள் இல்லையே. அருகில் இருப்பதை நான் நெருங்கிய உறவாக்கிவிட்டேன். என் மனஉளைச்சலுக்கு விடை வேண்டும். நான் சிந்துவிடம் "சிந்து நாம் அவ்வளவாக நெருங்கிய தோழிகள் இல்லைதான். பெயர் அறிமுகமான வேறு வேறு பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் தான் நாம். ஆனாலும் உன் மனப்பாரத்தை நீ மட்டும் சுமக்காது சற்று என்னிடமும் இறக்கு. உன் பிரச்சனைக்கு ஏதோ ஒரு வகையில் தீர்வு கிட்டும். எம்மைப் படைத்த இறைவன் மரணம் தான் முடிவு என்று ஆரம்பம், முடிவு கொடுக்கும் இறைவன்தான் உன் பிரச்சனைக்கும் ஆரம்பம், முடிவு. எதுவானாலும் சொல் சிந்து" என்றேன். என் நீண்ட கருத்துக்குப்பின் அவளது கருத்தும் என் பால் மாறியது. "துஷா என் பிரச்சனை நான் அழுவது நானாகத் தேடிக் கொண்டது. என்றும் அவரவர் என்ன இடத்தில் இருக்க வேண்டும் என்பதை இறைவன் தான் தீர்மானிப்பார். ஆனால் நான் எனக்கு தீர்மானிக்க முயன்று தோற்றுவிட்டேன்". அவளது கதறலுக்கு மத்தியில் உதித்த வாசகங்கள்.

"முயற்சி திருவினையாக்கும்" என்று சொல்வார்கள். என் முயற்சியும் திருவினையாகிவிட்டது. சிந்துவின் சோகங்கள் வெளிவரத் தொடங்கின. பள்ளி வாழ்வு என்பது மறக்க முடியாத வாழ்வு அதில் சிந்துவும், கலா, சுதா என்பவர்களும் இணைபிரியாத தோழிகள். இம்முத்தோழிகளிலும் கலா, சுதா இருவரும் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் விளையாட்டு, படிப்பு, கலைகள் என எல்லா ரீதியிலும் திறன் பெற்றவர்கள். இவர்களுடன் ஒப்பிடும் போது சிந்துவின் ஆற்றல் குறைவானதென்றே கூறலாம்.

ஆனாலும் இவர்களது நட்பில் இதனால் எதுவித களங்கமும் ஆரம்பத்தில் வரவில்லை. சுதா, கலா இருவரும் சிந்துவை கலைகள் ரீதியாகவும், படிப்பு ரீதியாகவும் ஊக்கப்படுத்துவார்கள். இந்தப் போட்டிக்கு போ சிந்து. போட்டியில் பங்கு பற்றினால்தான் உனது திறமைகள் வெளிக் கொணரப்படும் என்றெல்லாம் அறிவுரை கூறுவார்களே தவிர அவளைப் பங்கு பற்றாமல் இருக்கும்படி வேண்டுவதேயில்லை. ஆனால் சிந்துவிற்குப் பயம். சுதா, கலாவுடன் நான் போட்டி போட்டால் வெற்றி பெற முடியாது. இவர்கள் தன்னை இழிவாக்கவே இப்படியெல்லாம் கூறுகின்றார்கள் என்று.

சுழன்று கொண்டிருக்கும் பூமியால், ஒய்கின்றிக் காலமும் சுழன்று கொண்டேயிருந்தது. சிந்துவிற்கு சுதா, கலா மீது ஒரு பொறாமை உணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இதற்கு முக்கிய காரணம் அவளது வீட்டில் அவளின் அம்மா கலா, சுதாவை உதாரணம் காட்டி "அவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள். நீயும் இருக்கிறாயே ஒன்றும் செய்யத் தெரியாமல்" என்று பேசுவதால் அவளுக்கு நண்பிகள் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டது. இது காலப்போக்கில் அவர்கள் மேல் இவள் பொறாமை கொள்ளும் அளவிற்கு வளர்ந்து விட்டிருந்தது.

மூன்று பாதைகளை இணைத்திருந்த நட்புப் பாலம் இரண்டாக மாறும்படி சிந்துவின் பொறாமைத் தீ பரவத் தொடங்கியிருந்தது. அவள் தன் நண்பிகளுடன் பேசுவதில்லை. அவர்களைப் பற்றியெல்லாம் கூடாமல் சக மாணவர்களிடம் சொல்வதே சிந்துவின் வேலையாகி விட்டிருந்தது. நட்பு என்ற நாமத்தையே களங்கப்படுத்த முயன்றாள் சிந்து. இவ்வளவு காலமாக அவர்கள் மீது அவள் கொண்டிருந்த நட்பின் ஆழம் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்நிலையிலும் சுதாவும், கலாவும், சிந்துவுடன் அன்பாகப் பேசிப் பழகி அவளை நல்வழிப்படுத்த முயன்றும் சிந்து அதற்கு இடம் கொடுப்பதாக இல்லை. அவளது பொறாமைத் தீ அந்தளவிற்கு அவள் மனதில் பரவியிருந்தது. இவ்வேளையில் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப்போட்டியில் சுதாவும், கலாவும் நடனப் போட்டியிலும், கட்டுரைப் போட்டியிலும் பங்கு பற்றி முதலாவது இடத்தைப் பெற்றிருந்தார்கள். அது மட்டுமல்லாது நாடாளாவிய ரீதியிலான தங்கப் பதக்கமும் அவர்களுக்குக் கிடைக்கப் பெற்று எல்லோரும் அவர்களைப் பெருமையுடன் பார்த்தார்கள். இது சிந்துவிற்கு ஏற்கனவே இருந்த காயத்தை மீண்டும் கீறி விட்டது போலிருந்தது.

இதன் பலனால் சிந்து ஒரு யோசனை செய்து அதன்படி அதிபரின் அலுவலகம் சென்றாள். அங்கே அதிபரிடம் "சேர், சுதா நான் வரும் பாதையில் பாடசாலை உடையுடன் ஒரு வேறு பாடசாலைப் பையனுடன் கடையில் சிரிச்சுக் கதைச்சுக் கொண்டு நிற்கிறா, கையிரண்டையும் பிடித்த படி" என்று காணாத ஒன்றை உருவகித்துக் கூறியிருந்தாள். அவளது சிந்தனையில் அவர்களைப் பழி வாங்குவது முடிவாகி விட்டிருந்தது.

இவளது வார்த்தைகளிற்கு சிறிது காது கொடுத்திருந்தாலும் அதிபருக்கு சுதாவின் குணங்கள் நன்றாகவே தெரியும். அவள் நல்ல குணமுடையவள் என்று தெரிந்தும் இவளது

கதைக்கேற்ப இவளது பொறாமைத் தீயை அணைக்க வேண்டும் என்ற முடிவுடனும் அதிபர் நேரடியாகவே சிந்துவின் முன் சுதாவை அழைத்துக் கேட்டார். அதற்கு சுதா "சேர், நான் இன்று விடிய அம்மாவிற்கு காய்ச்சல் என்று ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு இப்போது தான் இங்கு வந்தனான். ஆஸ்பத்திரியில் போய்க் கேட்கலாம் சேர்! நான் அப்படிப்பட்டவளில்லை" எனக் கூறினாள். இவ்வளவிற்கும் சிந்து நினைக்கவில்லை அதிபர் நேரே கூப்பிட்டுக் கேட்பார் என்று. அவளது வேஷம் கலைக்கப்பட்டிருந்தது.

நண்பியாயிருந்து அவளின் நஞ்சு மனம் வெளிக்கொணரப்பட்டிருந்தது. அதிபர் சிந்துவிற்கு எச்சரிக்கை பண்ணி விட்டு "பிள்ளை, தவறு விடுவது மனித இயல்புதான். ஆனால் நீ நல்ல நண்பிகளை இழக்குமளவிற்கு தவறு இழைத்துள்ளாய். மன்னிப்பது சுதா, கலா கையில்தான். இறைவன் ஒவ்வொரு மனிதனைப் படைக்கும் போது அவனுக்கென்ற தனிச் சிறப்பையும் அளித்திருப்பான். அவர்கள் திறமை அவர்களாளேயே வெளிப்படுத்தப்படுகிறது. நீ உன் திறமையை மழுங்கடித்து விட்டு மற்றவர் திறமையில் பொறாமை கொண்டு விட்டாய். அவர்கள் தம் திறமையிலே உனக்கு எட்டாத உயர்ந்த கோபுரத்திலுள்ள புறாக்கள். அவர்களது திறமை வளர்ந்து போகிறது. கோபுரம் உயர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் உன் திறமை சாய்ந்து கொண்டே போகிறது. திருத்திக் கொள். அந்தக் கோபுரத்து இரு புறாக்களை எட்டுவதற்கு நீதான் முயற்சி செய்ய வேண்டும்" என்று அதிபர் அவளுக்கு அறிவுரைகள் கூறியிருந்தார்.

சுதா, கலா இருவரும் சிந்துவை மன்னித்து பழையபடி நண்பியாய் ஏற்றிருந்தாலும் "குற்றம் இழைத்த மனம் குறுகுறுக்கும்" என்றவாறு அவளது மனம் தனது நண்பிகளின் உயர்ந்த எண்ணத்தை நினைத்து நினைத்து, விட்ட தவறுக்காய் வருந்தியபடி அழுது கொண்டிருக்கிறது.

எனக்கு அவளது கண்ணீருக்கான காரணம் விளங்கி விட்டிருந்ததும் மன்னிக்கத் தெரிந்த அந்த கோபுரப் புறாக்கள் மனதிலே நிலைத்துவிட சிந்துவை ஆற்றும் எண்ணம் இன்றி, விட்ட பிழைக்காக அவள் அழுது தன் சோகத்தையும், பொறாமையையும் அந்த மழைத் தூறலிலேயே கலந்து விடட்டும் என்றவாறு அவள் கதையால் என் சிந்தனை சிற்பி செதுக்கிய எடுகோளிற்கு முடிவு பெற்று வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினேன். அப்போது உண்மையில் ஒரு கோவில் கோபுரத்திலிருந்து பல புறாக்கள் கண் சிமிட்ட நான் சுதா, கலாவை நினைத்துக் கொண்டேன்.

*(யாவும் என் சிந்தனைச் சிறகின் கதா பாத்திரங்கள். சிறகடித்துத் தேடியவையே)*

**S. சுபாகினி**
*இந்து மகளிர் கல்லூரி*

With Best Compliments

from

# Cee Pee Vee Travels

314/2 Galle Road
Colombo 3

Tel: 594427
Fax: 074-518797

With the Best Compliments

of

# Ranjane's

**Dealers in Textiles**

*Fashion Super Market*

No. 133/13, Keyzer Street
Colombo 11
Tel: 334448

பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில்
மேற்பிரிவில் முதலாமிடம் பெற்ற கவிதை

# நாளை பறக்கும் நந்திக்கொடி

தமிழ் நாதம் உயர்ந்தொலிக்க
தரணியில் மூவேந்தர் வரிசையிலே,
ஒருதமிழன் ஆட்சியிலே பறந்திருந்த
தமிழ்க்கொடி – நந்திக் கொடி!

அது .......நேற்று சுதந்திரமாய்ப் பறந்தது!
இன்று சுருட்டி ஒளிக்கப்பட்டுள்ளது!
நாளை... சுதந்திரவானில் சத்தியமாய்ப்பறக்கும்!
எப்படித் தெரியுமா?.........

தமிழனாய்ப் பிறந்ததன் தலைவிதி!
வாழ்வினில் இல்லையே நிம்மதி!
பாதைகள் எங்குமே பெரும்சதி!
தொடர்வதால் என்னாகும் நம்கதி!

காலங்கள் கரைந்து மறைந்து,
கண்ணீரின் கோலங்கள் உறைந்து,
உணர்வுகளில் ஊறிய வலிகளில்
ஊமையின் ராகம் கூட உயிர்த்தெழுந்தது!

பந்த பாசங்களை இழந்தோம்!
சொந்த உடைமைகளைத் துறந்தோம்!
ஊன் உறக்கத்தை மறந்தோம்!
ஏன் எதற்காய்ப் பிறந்தோம்?....

எம்மானங்கள் எல்லாம்
மேகங்களாய்க் கலைந்திட,
அலைந்திடும் அலைபோலத்
தமிழர்களும் அகதிகளாய்!

வார்த்தை இன்றிய வலிகள்,
ஊமையின் ராகங்களாய்,
உறங்கிய காலம் போய்,
உயிருள்ள ராகங்களாய் உயிர்ப்பதெப்போது?

எண்ணி வருந்திய தமிழன்,
தன்னுள் தூங்கிய உணர்வுகளைத் – தமிழ்த்
தலைவனின் வழியிலே தட்டியெழுப்பிட,
திருப்பங்கள் பல வாழ்விலே கண்டான்!

தமிழனென்று சொல்லடா!
தலைநிமிர்ந்து நில்லடா!
தமிழ்த்தலைவன் பாரதி,
தன்மானக் குரல்கொடுத்தான்!

ஆம் ........... அன்று..........
தமிழனாம் பாரதியின்
தன்மான அறைகூவல்!
ஆகா......... இன்று.........
தலைவனாம் தமிழனுடன்
தலைநிமிர்ந்து எழுகிறதே!

அரசியலில் இல்லைத் தமிழுக்கிடம்!
ஆட்சியிலுமில்லைத் தமிழனுக்குரிமை!
குட்டிக்குட்டியே குனியவைக்க
கூனிக்குறுகிய தமிழனது .........

அரசியல் தந்திரத்தை – இன்று
வல்லரசுகளே வியக்கின்றது!

இடைக்கால அரசினிலே ~ இன்று
தமிழனின் நிர்வாகம் தரம் கூற

உணர்ச்சிகளின் பிரவாகத்தை
பொங்குதமிழ் கடல்கூற,
உணர்ந்ததே உலகமது,
தமிழனுக்கும் உணர்ச்சியுண்டு!

யார் சொன்னது ..........!
வார்த்தைகள் தான் வலிமையானவையென்று?
திரும்பிப் பார் .....! ~ இன்று .....
தமிழனின் மௌனத்தின் வலிமையை!

உலகமும் ஏற்றுக் கொள்ள
உள்நாடும் உவகை கொள்ள
தமிழனின் ஆட்சியதில் ~ மீண்டும்
நாளை பறந்திடும் நந்திக்கொடி!

விடிகாலைப் பொழுதினிலே,
வெளிச்சத்தின் கீற்றுக்காய்,
தமிழனின் ஆட்சியது,
ஒப்பந்த மரமதிலே,
இதழ்மலர்த்தி மணம்பரப்ப,

உலகத் தமிழரின் உள்ளங்களிலே,
நம்பிக்கைச் சுடரது துளிர்விட,
சுதந்திர வானில் சுமூகமாய்
நாளை பறக்கும் நந்திக்கொடி ~ அது
எங்கள் தமிழரின் தேசியக்கொடி!

நாளை பறக்குமே நந்திக்கொடி! ~ அது
எங்கள் தமிழரின் தேசியக்கொடி!

**J. நிரோஷினி**
*இந்து மகளிர் கல்லூரி*

# திரும்பிப் பார் 2002

☞ றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் தனது வருடாந்த பொதுக் கூட்டத்தை 18.03.2002 அன்று கூட்டியது. அன்றைய தினம் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டு மன்றப் பொறுப்புகள் கையளிக்கப்பட்டன.

☞ அதன்பின் வந்த காலப்பகுதியில் நாம் பொறித்த பொற்சுவடுகள் இதோ உங்கள் முன்................

☞ மாதாந்தம் போயா தினங்களில் இந்து சமயப் பெரியார்களின் தலைமையில் மாணவர்களுக்குப் போதனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

☞ எமது வருடாந்த நிகழ்வான கலைமகள் விழாவை சிறப்பாக நடத்த நிதி திரட்டும் பொருட்டு "திரைப்படங்களின் சங்கமம் 2002" இனை Western Jewellery Mart இன் அனுசரணையுடனும் சூரியன் F.M., தினக்குரல் ஊடக அனுசரணையுடன் ஏப்ரல் மாதம் 21ம் திகதி புதிய கதிரேசன் மண்டபத்தில் சிறப்புற நிகழ்த்தினோம். அன்றைய தினம் இலங்கையில் முதன்முதலாக "சாம்ராட் அசோகா" திரைப்படத்தை தமிழில் திரையிட்டு வெற்றி கண்டோம்.

☞ 14.07.2002 அன்று பாடசாலைகளுக்கிடையிலான சமய திறன்காண் போட்டிகள் நடாத்தப்பட்டு பல இன்னல்களின் மத்தியில் வெற்றி கண்டோம். இப்போட்டிகளில் கண்டி பாடசாலை மாணவர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

☞ பாடசாலைகளுக்குள்ளான போட்டிகளையும் வெற்றிகரமாக நடாத்தி எமது மாணவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்தோம்.

☞ இன்று உங்கள் முன் "கலைமகள் விழா 2002" என்ற வெற்றி விழாவினை தந்து, 'சிவசக்தி 2002' செவ்விதழ்களை உங்கள் கரங்களில் தவழ வைத்துக் கொண்டிருக்கும் நாம், இன்று போல என்றும் எம் சமய நற்பணியைத் தொடர உங்கள் ஆதரவை நாடுகின்றோம்.

**"மூழ்கி மறையும் என்று நினைத்திருந்தோம். ஆனால்**
**சைவம் மூழ்கும் முன் நாம் அதை மீட்டிடுவோம்"**

செயற்குழு
2002
இந்து மாணவர் மன்றம்

With the Best Compliments

of

# ROYAL ACADEMY

344/17, Jampettah Street
Colombo 13
Tel: 440741

*With Best Compliments*

*from*

# LINK UP MIDIES (PVT) LTD.

180, New Chetty Street
Colombo 13
Phone: 0094-1-388339 E.mail: midilink@slt.lk

## உள்ளம் கவர்ந்தவர்களின் நினைவுகளுக்காக.........

அன்பே சிவம்

ROYAL COLLEGE HINDU STUDENTS UNION

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்


சிவசக்தி 2002

With Best Compliments

இந்து மாணவர் மன்றத்திற்கு
13ம் ஆண்டு கணித, உயிரியல் பிரிவு மாணவர்களின்
நல்வாழ்த்துக்கள்

- Aflal
- Mafaz
- Rishard
- Zaman
- Ismail
- Naufan
- Rizwan
- Arafath
- Jeyapragash
- Milroy
- Sathyananthan
- Niroshan
- Sanjey
- Rajeevan
- Ratheekan
- Jeyakanthan
- Sumithran
- Rajiv
- Gajendra
- Tharmesh
- Shyamsundar
- Satsoruban
- Shanmuganathan
- Puvindran

## A/L 2003 (TAMIL MEDIUM)

"Royalists we are, a very special breed
and Royal deeds are done as Royalists will do,
our fathers will be proud of us and so will be our sons"

**"Glory be to Royal forever"**

# OUR GRATEFUL THANKS ARE DUE TO............

- Prof. R. V. Kanagaratnam (University of Peradeniya) for honouring this occasion with his presence as Chief Guest.
- Our Principal Mr. H. L. B. Gomes, for his whole-hearted support and encouragement for our venture.
- Our Vice Principal, Assistant Principals
- Our Teacher-in-Charge Mrs. P. Neelaloganan, Assistant Teachers-in-Charge Mrs. L. Thavakumar, Mr. S. Balaendran, Mrs. S. Kajanthan, Mr. S. Sivakumar, Mr. V. Mathivanan and our teachers for standing by us always and giving us all the encouragement and support.
- The Old Boys who have helped us as and when it was necessary.
- All Representatives and Students of other Schools who have participated in this "Kalaimagal Vizha 2002"
- Judges and those who contributed articles for this souvenir.
- The Advertisers and Well-wishers who have contributed to the success of this souvenir.
- **SRM Radiant** for sponsoring the event.
- **ARB SQUARE** for sponsoring the Invitations.
- **"Abbarna Textile"** for sponsoring the Food Boxes.
- Mr. Jayabalan for sponsoring the Certificates.
- **Eswara Bagawaan & Company** for sponsoring the Soft Drinks.
- **"Nimal Super Light"** for their excellent Lighting and Sound System.
- All parent who have granted their support to hold such an event.
- All Patrons of the Tamil Language who have come to grace this occasion.
- **"Arasan Printers"** for having printed this Souvenir.

"Our feeling of gratitude are immeasurable"

Hindu Students' Union
Royal College

# நன்றி நவிலல்

- பிரதம அதிதியாகப் பெருமனதுடன் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் அவர்களுக்கும்.............
- கலைவாணிக்கு முத்தமிழால் விழாவெடுக்க நிறைந்த மனதுடன் அனுமதியும், உதவியும், வாழ்த்தும் வழங்கிய எமது மதிப்புக்குரிய அதிபர், உயர்திரு H. L. B. கோமஸ் அவர்களுக்கும்.............
- எம் கல்லூரி உப அதிபர், துணை அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கும்.............
- பல சிரமங்களுக்கு மத்தியிலும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து எமது இன்ப துன்பங்களில் பங்கெடுத்த எமது மன்ற பொறுப்பாசிரியர் திருமதி புஷ்பா நீலலோஜனன், உதவி பொறுப்பாசிரியர்கள், திருமதி லை. தவகுமார், திரு. சூ. பாலேந்திரன், திருமதி சு. கஜந்தன், திரு. ச. சிவகுமார், திரு. வே. மதிவண்ணன் அவர்களுக்கும்.............
- எம் மன்றத்திற்குப் பெருந்தூண்களாக இருந்த தமிழ் இலக்கிய, நாடக, கர்நாடக மன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும்.............
- என்றுமே எமக்கு உதவிக் கரம் கொடுக்கும் பழைய மாணவர்களுக்கும்.............
- எமது பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் கலந்து கொண்ட ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும், நடுவர்களுக்கும்.............
- இவ்விதழுக்கு விளம்பரம் தந்த விளம்பரதாரர்களுக்கும் இவ்விழாவுக்கு பிரதான அனுசரனை புரியும் SRM Radiant நிறுவனத்திற்கும்.............
- அழைப்பிதழ்களுக்கு அனுசரனை புரிந்த ARB Square நிறுவனத்திற்கும்.............
- உணவுப் பெட்டிகளுக்கு அனுசரனை புரிந்த Abbarna Textile ஸ்தாபனத்தினருக்கும்.............
- சான்றிதழ்களுக்கு அனுசரனை புரிந்த திரு. ஜெயபாலன் அவர்களிற்கும்.............
- இவ்விழாவிற்கு குளிர்பானம் அனுசரனை வழங்கிய Eswara Bagawaan & Company ஸ்தாபனத்தினருக்கும்.............
- குறுகிய காலத்தில் உங்கள் கைகளில் தவழும் "சிவசக்தி 2002" மலரினை அச்சிட்டுதவிய அரசன் அச்சகத்தாருக்கும்.............
- விழாவிற்கு ஒலி, ஒளி அலைகளைத் தந்து கொண்டிருக்கும் "Nimal Super Light" ஸ்தாபனத்தினறுக்கு.............
- எமக்கு தேவையான சந்தர்ப்பங்களில் தமது முழு ஊக்கத்தை தந்துதவிய பெற்றோர்களுக்கும்.............
- இனிக்கும் இந்த மாலைப் பொழுதினிலே "இந்த நவாங்கஹல நந்தவனத்தில்" கூடியிருக்கும் ரசிகர்களுக்கும்.............
- குறிப்பறிந்து பல உதவிகள் வழங்கிய அனைவருக்கும்.............

"நவில்கின்றோம் நன்றிகள் பலகோடி"

இந்து மாணவர் மன்றம்
றோயல் கல்லூரி

*With Best Compliments*

*from*

❖
❖
❖
❖
❖
❖

Shakthi சக்தி FM

Shakthi சக்தி TV

# MTV Channel (Pvt) Ltd
# MBC Networks (Pvt) Ltd

No. 07, Braybrooke Place
Colombo 02.
Tel : 075 – 340111 – 5
Fax : 075 – 340116 / 7

 சிவசக்தி 2002

With Best Compliments

from

GANESH
**Textiles (Pvt) Ltd.**

*Wholesale & Retail Dealers in Textiles*

81-83, Main Street, Colombo 11
Tel: 325128, 343078


சிவசக்தி 2002

*With the Best Compliments of*



# வினோ நகைப் பூங்கா

தங்க, வைர நகை வியாபாரம்

# Vino Nakai Poonka

Gold & Jewel Merchant

அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

185, கஸ்தூரியார் வீதி
(சந்தோஷம் தெரு)
யாழ்ப்பாணம்

185, Kasthuriar Road
(Santhosam Road)
Jaffna

தொலைபேசி / தொலைநகல்: 021-2824
Tel./ Fax: 021-2824

Printed by Arasan Printers, Colombo 2. Tel: 326482